# உகந்தைக் கந்தன் அறவழி அமுதம்

(அநுபூதிநிலை பத்து)

(உகந்தப்பதி தத்துவ வரலாற்று மகிமையுடன் கூடியது)



சி.பி.கதிரவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உகந்தைக் கந்தன் அறவழி அமுதம்

## (அருள்நிலைபத்து)

**(உகந்தப்பதி தத்துவ வரலாற்று மகிமையுடன்கூடியது)**

10766 S.C

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கை பகுதி

ஆக்கியோன்

**சி.பி.கதிரவேல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

இந்நூல் எனது மாதா பிதாவான
இறையடிநிழல் சேர்ந்த
பாணகையூர் கொரனல் அமரர் உயர்திரு எஸ்.வன்னியசிங்கம் (போடியார்)
அவர்களின்
சிரேஷ்ட உத்தமபுத்திரி அன்பின்ஒளி
**பொன்னம்மையார் (மஞ்சள் அம்மா) அவர்களுக்கும்**

**பாணகையூர் வள்ளல் இனிய மனிதநேயன் குமாரவேல் பெரியதம்பி(போடியார்)**
அவர்களுக்கும்
எனது இதயம் கனிந்த ~ அன்புமாறாத ~ பிரியமான
உயர் இறை சமர்ப்பணமாயிற்று.

நூலாசிரியர்
**சி.பி.கதிரவேல்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


ஆசியுரை ... ... ... 5
வாழ்த்துரை ... ... ... 8
அணிந்துரை ... ... ... 9
முன்னுரை ... ... ... 10
அருள்நிலைபத்து விளக்கவுரை ... ... 14

உகந்தைப்பதியின் தத்துவ விளக்கமும்
வரலாற்றுச் சுருக்கமும் ... ... 18

கடவுள் வணக்கம் ... ... ... 23

திருத்தலமகிமை ... ... ... 29

1. திருவருள் குருவருள்நிலை ... ... 36

2. குருவருள் நிலை ... ... ... 41

3. பஞ்சபூத மலநிலை ... ... ... 48

4. வினைவிளக்க நிலை ... ... 52

5. மெய்விளக்க நிலை ... ... 55

6. வேண்டல் நிலை ... ... ... 69

7. மெய்விழிப்பு நிலை ... ... ... 82

8. பிறப்பு இறப்பு நிலை ... ... 104

9. சரணாகதி நிலை ... ... ... 114

10. சரணாஞ்சலி நிலை ... ... ... 119




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

இந்நூலுக்கு ஆசியுரை தந்துதவிய வணக்கத்துக்குரிய காயத்திரி சித்தர் கலாநிதி. ஆர்.கே.முருகேசு சுவாமி அவர்களுக்கும்,

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷியின் அருள் அரவணைப்பிலே வளர்ந்த வரும் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை தந்த மகான் யோகசுவாமிகளின் வழிவந்த அவர்தம் அருமைச் சீடரும் செங்கல்டி சிவதொண்டன் நிலையாதிபதி வணக்கத் துக்குரிய சுவாமி ஏ.செல்லத்துரை சுவாமி அவர்களுக்கும்,

இமாலய ரிஷிகேச தவவாழ்வு வாழ்ந்து வரும் வணக்கத்துக்குரிய சுவாமி நித்தியானந்த சரஸ்வதி மகராஜ் சுவாமி அவர்களுக்கும்,

இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கி உதவிய என் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய இலங்கை அரசகரும மொழித் திணைக்கள அரசகரும மொழி ஆணையாளர் உயர்திரு. நிமால் சமரசுந்தரா ஐயா அவர்களுக்கும்

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கி உதவிய என் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய இலங்கைப் பல்கலைக்கழக முதுபெரும் சிரேஷ்ட தமிழ் பேராசிரியர் உயர்திரு. கார்த்திகேசு சிவத்தம்பி ஐயா அவர்களுக்கும்,

இந்நூலை பிழையற அழகுற பதிக்க அயராது பாடுபட்டு உதவிய அன்பர் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திரு.மா. லோகநாதன் அவர்களுக்கும்,

இந்நூலை நன்கு அச்சிட்டுத் தந்துதவிய அக்கரைப்பற்று செலக்ஷன் ஒப்செட் அச்சக உரிமையாளர் அவர்களுக்கும் மற்றும் உதவியாளர்களுக்கும்,

இந்நூலை வாங்கிப் படித்து இறையருள் பெற்று இந்துசமய கலாசாரத்தை வளர்க்க உதவுவோருக்கும்,

எனது அன்பார்ந்த - மனமார்ந்த நன்றி என்றும் உரித்தாகுக.

நூலாசிரியர்
**சி.பி.கதிரவேல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

மகரிஷி ஸ்ரீரமண பகவானின் நெருங்கிய உறவைப் பெற்றவரும்
யோகசுவாமிகளின் முதன்மைச் சீடரும்
சிவதொண்டன் நிலைய தலைமைப் பீடாதிபதியுமான

# அருட்திரு செல்லத்துரை சுவாமி அவர்களின் ஆசியுரை

பண்டே பாணராம் பழங்குடி மக்கள்
கண்டு தொண்டு செய்து காட்டிய
பாணமைக் கடுத்த பழமுதிர் சோலையை
மாண்புறும் ஆடல் காட்டுதற் கென்று
உகந்து தெரிந்து ஊராய்க் கொண்ட
உகந்தை முருகன் ஒப்பில் புகழை
கலியுக வரதன் கந்தன் கருணை
மலிவுற விளங்கும் வளமார் கவிகளாய்
கலியது நீங்கிக் களிப்புற உலகம்
நிலமிசை நீள்புகழ் கதிர்வேல் புலவன்
உளந்தனில் உதித்தாங்கு உரைத்தான் அன்னவன்
நலஞ்சேர் நல்லுரை
நிலந்தனில் நீள நிலைத்து மலர்கவே.

"வில்லங்கத்துள்ளே விளங்கும் நல்லருள்"

என்பது எங்கள் குருநாதர் வாக்கு. உகந்தை முதல் கதிரை வரையான யாத்திரைவழி வில்லங்கமான வழி. இவ்வில்லங்கமான வழிசெல்வோர் பெருமானது அருள் விளக்கத்தை அநுபவிக்கின்றனர். இந்நூலாசிரியர் இத்தகைய அநுபவத்தில் திளைத்த ஓர் அதிபக்தர். தம் பக்தித் திறத்தாலே உகந்தை உகந்த கந்தவேட் பரமனுக்கு பாமாலை புனைந்து சூட்டினார். பாணர்குடித் தோன்றலான இப்பக்தர் சொன்னவை, பைந்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் பரமகுருவுக்கு உகந்தவையாயிருக்குமன்றோ!

உகந்தை உகந்தானுக்கு உவர்ப்பான தொன்றில்லை
யாவும் உகப்பானவையே.

- சிவதொண்டன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயத்திரி சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமிகள் அவர்கள் வழங்கிய ஆசியுரை

ஆன்ம நாட்டம் அருள்தாகம் கொண்ட சி.பி.கதிரவேல் அவர்களால் எழுதப்பட்ட உகந்த முருகன் அறவழி அமுதம் ஆராய்ச்சி பதிப்பு மிகவும் சிறப்பு அம்சம் வாய்ந்தது. கந்தன் எழுந்தருளி அருளாட்சி நடத்தும் புராதன ஸ்தலமாகிய உகந்தைக் கந்தன் பற்றிய இப்படைப்பு, பக்தர்களுக்கு மிக பயனுடையதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இப்படியான பல நூல்களை எழுதி மக்கள் மாண்புற வழிகாட்ட எல்லாம் வல்ல அன்னை காயத்திரி தேவியை வணங்கி அடியேன் உள்ளத்தில் இருந்து வாழ்த்தி ஆசி வழங்குகிறேன்

எல்லாம் வல்ல உகந்தை கந்தன் தங்கள் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெற்று பிரகாசிக்க அருள் புரிவானாக.

ஓம்சாந்தி

*ஸ்ரீலங்காதீஸ்வரர் கோயில்,*
*ஸ்ரீ காயத்திரி பீடம்,*
*ஸ்ரீநகர்,*
*82, லேடி மக்கலம் ஒழுங்கை,*
*நுவரெலியா,*
*இலங்கை.*
*11.03.98.*

சுவாமி ஆர்.கே.முருகேசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உயர் தவத்திரு அருட்திரு சுவாமி நித்தியானந்தர் அடிகளார் அவர்களின்**

# அருளாசியுரை

ஓம் ஸ்ரீ சரவணபவாய நம.

அன்பும், ஞானமும் வீரமும் வெற்றியும் தனது திருவுருவாகக் கொண்ட எம்பெருமான் உகந்தைக் கந்தவேளுக்கு நமது பாணமை தந்த செல்வர் திரு.சி.பி.கதிரவேல் பிரதம இலிகிதர், பிரதேச செயலகம், கல்முனை அவர்கள் பாமாலையால் தோத்திரம் செய்துள்ளார்கள்.

பக்தி பெருகி உடலும் உள்ளமும் நெகிழ்ந்து உருகி முருகப் பெருமானைப் பாவால் துதித்த பக்தர் பலர். அவர்கள் வழியில் இந்த பக்தி மணமும் கவிதை நயமும் நிறைந்த இந்த "உகந்தைக் கந்தன் அறிவழி அமுதம்" பக்தர்களின் பக்தியையும் இறைநம்பிக்கையையும் வளர்க்கும் ஒரு புனித கருவியாக வேண்டி அம்மையப்பனாம் நம் தமிழ்வேளை பிரார்த்தித்துக் கொள்கின்றேன்.

கவி, பாடல்கள் மனதில் பதிந்து மீண்டும் மீண்டும் பாடி மகிழக் கூடிய ஒன்று. அதன் கூட பக்தியும் ஞானமும் கலந்துவிட்டாலோ அது தெய்வ அமுதம்.

வாழ்க... அன்பர்.சி.பி.கதிரவேலில் கவித்திறன். இந்நூல் பதிப்பால் வெளிவந்து பலரின் உள்ளக் கதவுகளைத் திறந்து பக்தி வெள்ளம் பெருகவைக்கட்டும்.

உகந்தைக் கந்தனின் திருவருள் உங்கள் அனைவரையும் தன் அன்பால் ஆட்கொள்ளட்டும்.

"ஓம் சரவண பவ"

அன்பன்
முருகன் திருவடிகளில்
**சுவாமி நித்தியானந்தா**

*தெய்வீக வாழ்வுச் சங்கம்,*
*தபால். சிவானந்த நகர் - 249 192,*
*உத்தரப் பிரதேசம் (இமயம்)*
*இந்தியா.*
*17.01.1998.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசகருமமொழி ஆணையாளரும் மொழி ஆணைக்குழு செயலாளருமான

**உயர்திரு. நிமால் சமரசுந்தர ஐயா அவர்களினால்**

மனமுவந்து அளிக்கப்பட்ட

# வாழ்த்துரை

முருகக் கடவுளானவர் ஸ்ரீ லங்காவில் இந்துப் பக்தர்களால் மாத்திரமல்லாமல் பௌத்த பக்தர்களினாலும் எல்லா இனத்தவர்களினதும் வேறுபாடின்றி வழிபாடு செய்யப்படும் ஒரு சிறந்த கடவுளாவார். அவர் உருகுணைப் பகுதியில் கதிர்காமத்தில் வீற்றிருந்துகொண்டு அகில இலங்கை மீதும் அருள்பாலித்து வருகிறார்.

முருகக் கடவுள் மீது பக்தியை வளர்க்கும் வண்ணம் திரு.சி.பி.கதிரவேல் அவர்களால் இயற்றப்பட்ட இந்தத் தோத்திரப் பாடல்கள் காலத்திற்கேற்ப இயற்றப்பட்ட ஓர் உன்னத நூலாகும். இக்கலியுகத்தில் சிதைவுற்றுள்ள சமுதாயங்களை சீர்திருத்துமுகமாகவே இந்நூல் இயற்றப் பட்டுள்ளது.

இடையூறு வரும் வேளை மாத்திரமன்றி வாழ்வின் எல்லா வேளைகளிலும் கடவுளை நாம் வணங்கி அவரை எமது இதயத்தினுள் வீற்றிருக்கச் செய்ய வேண்டும். அதற்காக தூய்மை வாய்ந்த இதயமும் வாழ்நெறியும் எமக்கு இருப்பது இன்றியமையாதது.

பக்தியின் தத்துவ விளக்கத்தை வரலாற்றுச் சுருக்கத்துடன் தரும் இந்நூலானது கடவுள் வணக்கத்துடன் ஆரம்பித்து உகந்தை திருத்தல மகிமையின் அழகிய வர்ணனையுடன் திருவருள் குருவருள் நிலையிலிருந்து சாரணாஞ்சலி நிலை ஈறான பத்து நிலைகளை உணர்த்துகிறது.

சிறு பருவத்தில் எனது மாணவராக இருந்த கதிரவேல் அவர்களின் இந்த முயற்சியானது எனது விசேட பாராட்டுக்களைப் பெறுகிறது. இந்து பக்தர்களுக்கு மாத்திரமல்லாமல் பௌத்த பக்தர்களுக்கும் பயனடையக் கூடிய வகையில் இந்நூல் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டால் அது அளவிலா பயன்தரும் என்பது எனது நம்பிக்கை.

**நிமல் சமரசுந்தர**
அரசகரும மொழிகள் ஆணையாளர்

*அரசகரும மொழிகள் திணைக்களம்,*
*வைற்றவேஸ் கட்டிடம்,*
*கொழும்பு - 1*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுபெரும் சிரேஷ்ட தமிழ்ப் பேராசிரியர்

**கார்த்திகேசு சிவத்தம்பி ஐயா**

முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
தமிழ்த்துறைப்பீடம், இலங்கைப் பல்கலைக்கழகம்
அவர்களினால் மனமுவந்து அளிக்கப்பட்ட

# அணிந்துரை.

திரு.சி.பி.கதிர்வேல் அவர்களின் இந்நூல் அவர் தமது இஷ்ட தெய்வமாகிய உகந்தைக் கந்தனுக்கு செலுத்தும் ஒரு காணிக்கை; பக்திபூர்வமான அர்ச்சனை.

காணிக்கைகள், அர்ச்சனைகள் பற்றிய மதிப்பீடு அவை செய்யப்படும் மனநிலை பற்றியதாகவும் அமைதல் அவசியம்.

இவ்வேளையில் உகந்தைக் கந்தன் மீது ஒரு தமிழ் நூல் வருவதும் அது தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதும் பரவுவதும் அத்தியாவசியமான ஒரு விடயமாகும்.

உகந்தை இலங்கைச் சைவர்களுக்கு ஒரு முக்கியமான தலம். குன்றுதோறாடும் முருகன் இங்கு தன்னை நிலைப்படுத்திக் கொண்டுள்ள முறைமையும் அருளதிகாரம் செய்கின்ற முறைமையும் அறிய அறிய நெஞ்சை - சித்தத்தை சிலிர்க்க வைப்பன.

திரு.கதிர்வேல் அந்தக் கருணை வெள்ளத்தில் நீந்துபவர்.

செந்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகன் கதிர்வேலின் இந்தக் காணிக்கையையும் ஏற்றுக் கொள்ளுவான்.

"கண்ணப்பன் ஒப்பது ஓர் அன்பின்மை கண்டபின்".......
என்னப்பன் என்னையுமாட்கொண்டருளியவன்",

இது பக்தி மரபு.இது தமிழின் பலம்.

உகந்தை உகந்தானை வேண்டி
**கார்த்திகேசு சிவத்தம்பி**

*22.03.1998*
*2/7, ராம்ஸ்கேட் அப்ட்ஸ்*
*58, 37வது ஒழுங்கை, வெள்ளவத்தை,*
*கொழும்பு - 06*
*இலங்கை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

என்னிலே இளமை முதற்கொண்டே வளர்ந்து வந்த இறைபக்தியின் உந்துசக்தியே முருகபக்தியாக தோன்றி அதுவே உகந்தைக் கந்தன் கருணையிலே ஊறித்திளைத்துக் கொண்டுள்ளது. அருள் முருகன் திருமுருகன் உகந்தையன்பால் கொண்ட பக்தி வெளிப்பாடே உகந்தைக் கந்தன் அறவழி அமுதம் அருள்நிலைபத்து என்னும் இந்நூல் தோன்றக் காரணமாயிற்று. உகந்தைப்பதி திருமுருகப் பெருமாமனின் திருவருட் தலமாக விளங்குகின்றது. இத்திருவருட்தலத்திலேதான் தசகண்ட இராவணேஸ்வரனாலும் சீதாபிராட்டியாரின் மறுஅவதாரமாகச் சொல்லப் படும் பேரரசி ஆடகசவுந்தரி மன்னன் குளக்கோட்டன் அரச தம்பதியரின் அன்பு வழித்தோன்றலு மான அவர்தம் ஏககுமாரனுமான சிங்ககுமாரனாலும் சிவாலயங்கள் இயற்றப்பெற்றதும் இத்திருவருட்தலத்திலேதான். சிங்ககுமாரனால் பிரம்மா, விஷ்ணு ஆலயங்களும் அட்டதிக்குப்பாலகர்களுக்கு எட்டுத்திசையிலும் தனித்தனியே எட்டு ஆலயங்களும் இயற்றி வழிபட்டதும் மட்டக்களப்பு மான்மியம் என்னும் நூல்மூலம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. எனவே இத்திருவருட் தலத்திலே மும்மூர்த்திகளினதும் அட்டதிக்குப்பாலகர்களினதும் கிருபையும் கருணாகடாட்சமும் நிறைந்தது உகந்தபதி என்பதுடன் பண்டு தொட்டே அனைத்து ஆன்மீகஞானிகளினதும் யோகிகள், முனிவர்கள், ரிஷிகள், சப்தரிஷிகளதும் முப்பத்துமுக்கோடித் தேவர்களதும் இறை சரணாலயமாகவும் விளங்குகின்றதென்பதை கர்ணபரம்பரைக் கதைகள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. அன்பே சிவம். அந்தச் சிவனையே அரன் என்னும் திருநாமத்தாலும் குறித்து உணர்த்தப்படுகின்றது.

இந்தப்பதியிலே தான் கலியுகக் கடவுளான முருகப்பெருமானின் அருட் கடாட்சம் ஆன்மாக்களை ஆட்கொண்டருள்கின்றது. எனவே அனைத்து இறையம்சமும் சிவமயமே. அதுவே இனிய தூயஅன்புமயம். இதனாலே இந்நூலில் வரும் சில பாக்களில் மயூரவனே, உகந்தைத்துறையூரரனே எனக்குறித்து உணர்த்தி யுள்ளேன். இன்று அறவழிஅழிந்து கொண்டுள்ளது. மறவழி வளர்ந்து கொண்டுள்ளது. இது கலியுக கால நவகோள்களின் தாக்க இயல்பு விளைவுகளின் நிலைகளையே எடுத்துக் காட்டுவனவாக உள்ளது. இந்த நிலையிலே எம்மைக் காக்கும் கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக திருமுருகப்பெருமானின் அருள்ஒளியே எங்கும் பிரகாசித்துக் கொண்டுள்ளது. அதுவும் இலங்கைக்கும் இலங்கை மக்களுக்கும் தென்கைலாசத்திலே எழுந்தருளி என்றும் அருள்பாலித்து வருவது எமது பாக்கியமே. தென்கைலாசமென குறிப்பட்டு உணர்த்தி நிற்பது சங்கமன்கண்டி தொடக்கம் செல்லக்கதிர்காமம் வரையுள்ள தென்கீழ் கரையோரமும் சேர்ந்த நிலப்பிரதேசத் தினையே என்பது குறிப்பிடத்தக்கது. அதுவும் சிறப்பாக கதிர்காமம் - உகந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் இரு பூர்வபுண்ணிய சேஷ்திரங்களும் ஒரே பிரதேச எல்லைக்குள்ளே உள்ள திருமுருகப்பெருமானின் திருவருட்தலங்களிலே எம்பெருமானின் திருவருள் நிலைத்து ஓங்கி வற்றாத அருட்கடலாக நின்று கருணைக்கடலாகிய எம் இறைவன் ஆன்மாக்கள் பால் திருவருள் கடாட்சம் செய்தாளுமை செய்தருளிவருகின்றார். வன மக்களாகிய வேடர் இனம் வாழ்ந்த பெருவனச்சோலையினுள்ளே மலைகள்சூழ கடலும் கங்கைகளும் சூழ, சர்வஜீவராசிகளின் சரணாலயமாக இலங்கை அரசின் வனவிலங்குகளினதும் பறவைகளினதும் சரணாலயமான தேசிய வனவிலங்குப் பூங்காவினுள்ளே திருமுருகப்பெருமான் - ஸ்ரீ வள்ளிதேவியார் சமேதராய் ஆன்மாக்களின் பால் கொண்ட தன்னிகரற்ற கருணாகடாட்சத்தினால் இப்புண்ணிய பழம் பிரதேசத்திலே அருட்சோலை அமைத்து திருவிளையாடல்கள் புரிந்து ஆன்மாக்களை ஆட்கொண்டருளிவருகின்றார்.

எம்பெருமானின் அருள்நிலைகள் பத்தாக அவையே ஆன்மாக்கள்பால் உதித்தே உள்நின்று உணர்த்தியே அனைத்து ஆன்மாக்களுக்கும் அறவழியூட்டும் தெவிட்டாத இனிய அமுத உணர்வையே ஊட்டியே அறவழியிலே இறைவழிகாண அருளதிகாரம் செய்தருளும் உகந்தைப்பதியானின் பத்து அருள்நிலைகளாக எம்பெருமான்மீது அடியேன் கொண்டுள்ள பக்தியின் தோற்ற வெளிப்பாடே அருள்நிலைபத்தாக இந்நூலில் வரும் பத்து அருள்நிலைகளுக்கான பாக்களினாலே வகுக்கப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளது.

அருட்சக்திமிக்கதும் தலமகத்துவம் பொருந்திய ஏகாந்தமான தெய்வீக மணம் கமழும் இப்பதியின் அழகினிய இயற்கை சூழலின் சக்திநிலைகளும் தெய்வீக உணர்வூட்டவல்லவை. மனமானது ஒரு நிலைப்பட்டு இறைவழியிலே நாட்டமுறவும் இறைஅருள் நிலைகளிலே ஈர்க்கப்படவும் ஏதுவாக தெய்வீக காந்த சக்தியின் அலைகள் இங்கு ஓங்கி நிமிர்ந்து உறுதியாக நிலைகொண்டுள்ளது. இதுவும் இப்பதியிலே எழுந்தருளி அருளாட்சி செய்தருளும் ஒப்பிலாவேற்பெருமானின் திருவருட்சக்தியே யன்றி வேறில்லை. ஓங்கார சக்தி தத்துவம் மிக்க இத்திருவருட் சோலையிலே அமைந்துள்ள உகந்தகிரியினிலே அரிய தீர்த்தச்சுனைகளும் முப்பிணிநீக்கவல்லவை. அவையே பிணி, மூப்பு, சாக்காடு அல்லது ஆணவம், கன்மம், மாயை எனும் முப்பிணிகளையே குறிப்பனவாகவுள்ளது. இகலோக வாழ்விலும் பரலோக வாழ்விலும் இகபரசுகத்திற்கு ஒரு ஆன்மாவுக்கு மங்கள சுகத்தினையே அளிக்கவல்லவை இத்தீர்த்தங்கள் என இப்பகுதி கர்ணபரம்பரை கதைகள் மூலமாக அறியக்கூடியதாகவுள்ளது. எனவே இப்பதியிலே திருமுருகப் பெருமானின் அருள்நிலைகள் பத்தின் நிலைமேவிய அருள் ஒளிபரவி ஆன்மாக்கள் பால் சென்றடைய ஏதும் தடையேதுமுண்டோ என்க. அறவழி செல்ல இறைவழி சொல்ல தசஅருள்நிலைகளுக்கான பாக்கள் அடியவர்களின் மனதிலே தெவிட்டாத இனிய இறைஅமுதமாகவேண்டும். இவ்வமுதத்தை உண்டு தெளிந்தவர்கள் இறைதிருவருளும் குருவருளும் பெற்றே இறைதிருவடிநிழல் துணை கண்டு இன்புற்றிருக்கவேண்டும். இதனாலே அறவழி வளரும்; இறைவழி தொடரும்; இளம் சந்ததியே பெருகும் என்க. அதனாலே இப்பூவுலகமே இறைசொர்க்கபுரியாகவே மாற சிறிதளவேனும் இறைஅடியவர்களுக்கு இச்சிறுநூல் உதவவேண்டும் என்பதே இச்சிறியேனினதும் வேணவா ஆயிற்று. அவ்வாறே இந்நூல் நிச்சயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும் உதவ உகந்தைக் கந்தன் திருவருள் பாலிப்பான் என்பதே இந்த உகந்தை முருகனடியவனின் திடநம்பிக்கையுமாயிற்று.

இந்நூலிலே அருள்நிலைபத்து விளக்கவுரையின்மூலம் அருள்நிலை பத்து என்றால் என்ன என்ற கேள்விக் குறிக்கான விளக்கம் சுருக்கமான முறையிலேயே தெளிந்து புரிந்துகொள்ள வேண்டியே எழுதியிருப்பதுடன் இப்பதியினை அடியவர்கள் ஓரளவாவது அறிந்து உணர்ந்து கொள்ளவேண்டியே பதிவரலாறும் நாமதத்துவ விளக்கமும் சுருக்கமாக எழுதவேண்டியநிலையும் ஏற்பட்டது.கடவுள் வணக்கம் எழுத முனைந்தபோது தென்கைலாசமென பண்டுதொட்டே அடியவர் நம்பிக்கையின் வழிவந்த சங்கமன்கண்டி முதல் செல்லக்கதிர்காமம் வரையுள்ள தென்கீழ்கரை யோரமும் அடங்கிய நிலப்பகுதியிலே அடியவர்களுக்கு அனுக்கிரகம் செய்து அருள்பாலிக்கும் சங்கமான்கண்டிப் பிள்ளையாரையே விழித்து பெருமானின் ஐந்து கரத்தையே ஆதாரமென நினைத்தே ஐந்துகரமருளவரும் பெருமான் பாதார விந்தங்களுக்கே ஐந்து பாவினாலே இறைவனுக்கு இறை சமர்ப்பணமாயிற்று. மூவினை வேரறுக்கும் முருகப்பெருமானின் சக்திவேலாயுதமே என உணர்ந்தே மூன்று பாக்களும் எழுதி பெருமான் பாதாரவிந்தங்களிலே என் இறைவனுக்கே இறை சமர்ப்பணமாயிற்று. கடவுள் வணக்கம் எட்டுப்பாவினாலே நிறைவு கொள்ளும் உறவுகொள்ளும் உண்மை நிலையை விளக்கவே,தந்துவரூபத்திலே உகந்தைமலை அருள்மகிமை விளங்கவே எட்டுத்திக்கும் இறைஅருள் ஒளிபரப்பும் அட்டதிக்குப் பாலகர்கள் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் உகந்தைமலைப்பதி மீது அருள் ஒளிபரப்பும் அருள்பாலன் உகந்தையன் மகிமையே ஓங்கவே கடவுள் வணக்கப் பாக்கள் எட்டாயிற்று என்க. திருத்தலமகிமையிலே பதியின் சூழலும் இயற்கையன்னையின் வடிவமும் தெய்வீகமய சக்திநிலை மேவி முக்திநிலை உணர, அதிலே இறைஉறவுகள் தொடர பதிமகிமையும் சுருக்க வரலாற்று விளக்கப் பாடல்களும் இடம் பெறுகின்றன. இந்நூல் கொண்டுள்ள அனைத்து விடயங்களும் உள்ளடக்கியதே உகந்தைக் கந்தன் அறவழி அமுதமாயிற்று. இதுவே உங்கள் அனைவரது இறைஅமுதமாகவே அடியேனின் பிரார்த்தனையுமாயிற்று. இறையருளின் மகிமை துலங்கவே அருள்நிலை பத்தின் இறுதி அருளதிகாரமான சரணாஞ்சலிநிலை பாடல்கள் முடிவிலே அனைத்து இறையருள் நிலைமேவும் இனிய இதயங்களுக்கும் சுபமங்களம் கூறி இறையருள் மங்கள வாழ்வினாலே இறைஒளிபெறவே உகந்தையன் திருமுருகப் பெருமானுக்கு அரகரா கூறி நிகரிலா இறையையே வேண்டி நின்றே இந்நூல் என்றுமே உகந்தைக் கந்தன் அறவழி அமுதமாக வேண்டியே எம்பெருமான் திருப்பாதாரவிந்தங்களிலே இறைசமர்ப்பணமாயிற்று. அதுவே ஒவ்வொரு உள்ளங்களிலும் உள்நின்று உணர்த்தும் இறை அருள்நிலைகள் பத்துமாக தோற்றம் கண்டுள்ளது. இவ்இறைஅருள்நிலைகள் பத்தும் என்றுமே ஏற்றம் காண என்றுமே அவையே தேற்றம் கொள்ளவே உங்கள் இனிய அன்பு நிறை ஆதரவையே பணிவுடன் வேண்டி நிற்கின்றேன்.

யானோ எந்தவித மொழி ஆற்றலும் ஞானமுமற்றவன். ஏதோ அந்த அப்பன் மேலுள்ள பக்தியினால் இவ்வாறான ஒரு முயற்சி என்னுள் இருந்து இயக்கிற்று. கலியுகமுடிவிலே அதர்மம் தலைதூக்கும். தற்காலமே இக்கலியுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவிலே நடந்துகொண்டுள்ளது. தர்மம் தலைதூக்கவும் அறவழி ஓங்கவும் உகந்தைக் கந்தன் அருளால் இந்நூல் உருவானதே என்பதே முற்றிலும் உண்மை. இவ்வழியிலே கலியுகவரதன் கண்கண்ட தெய்வம் கந்தன் கருணை அனைவரையும் ஆட்கொள்ளட்டும். அறவழிக்குரிய இறைவனின் அமுதமாக இறைவனின் அருள்நிலைபத்தில் உள்ளடக்கப்பட்ட இப்பக்திப்பாமாலை இக்கலியுகத்திலே உகந்தைக் கந்தனின் கலங்கரைவிளக்கமாகவே மானிட இனத்தை வழிநடாத்த எல்லாம் வல்ல இறைவனையே வேண்டிநிற்கின்றேன். ஒரு குழந்தையின் மழலை மொழிக்கும் இறைஅன்பினால் நிறைஅன்பு பொழியும் பக்திப் பரவசத்திலே எழுகின்ற இறைபாமாலைக்கும் ஒரு நெருங்கிய உறவும் உண்டு. அனைத்து இறையருளின் உணர்நிலைகள் பத்து. ஒரு பத்திலே அனைத்து இறையருள் அறவழி நிகழ்வுகளுமே அடங்குவன, தொடங்குவன, இயங்குவன. இறைபத்து அருள்நிலைகளையேயுணர அதையேபுணர தொடர பதியின்பரம்பொருள் திருவருள் குருவருள் கூடுமே என்க. அறவழி எண்ணங்களும் செயல்களும் வடிவங்களும் இறைவழிக்கே உரியவை. மன்னுயிரையும் தன்னுயிர்போல் நேசிக்க இறைஅருளும் எம்மிலே தன்னிலே வளரும். இது முற்றிலும் தெளிந்த உண்மைத் தத்துவம். அப்பன் கருணையே என்னிலே தன்னிலே உணரவே உருகவே உகந்தை இறையையே மனமுருகிப்பாடவே அருள்தந்த அருள் குமரனையே போற்றிநிற்கின்றேன்.

இது கற்றறிந்த பெரியோரும் முற்றும் துறந்த துறவோரும் அனைத்து இறைஅன்புநிலை கொண்ட பக்திநிலை, முக்திநிலைகாண்போரும், இனிய அன்புள்ளங்களும் இவ்உகந்தை மலை முருகனடியவனின் இனிய அன்பையும் பணிவான, துதியான, இறைநினைவான ஒரே நினைவிலே பசுமையிலே மலர்ந்த பக்திப்பழமையின் புதுமையான இனிய தெவிட்டாத அனுபவபூர்மான நினைவுகளை இறைஅருளின் உறவுகளை ஆனந்தக் கருணையின் இன்பமயமான உகந்தைக் கந்தனின் பெருமையின் இனிய தெவிட்டாக உறவுகளை முழு மனதுடன் ஏற்று ஆதரிப்பார்களாக.

இந்நூலுக்காக ஆசியுரைகள், அணிந்துரை, வாழ்த்துரை மனமுவந்து வழங்கிய ஞானமகான்களுக்கும் கல்விமான்களுக்கும் இந்நூல் வெளிவர அயராது உதவிய அனைத்து இனிய உள்ளங்களுக்கும் உகந்தைமலை திருமுருகப் பெருமான் அருளும் கருணையும் என்றும் கிடைக்க, கந்தன், உகந்தன் திருவடி துணையையே வேண்டி நிற்கின்றேன்.

**சி.பி. கதிரவேல்**
நூலாசிரியர்.

*"லக்ஸ்மி இல்லம்"*
*பிரதான வீதி*
*பாண்டிருப்பு - 1B,*
*கல்முனை.*
*06.06.1998.*

10766



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்நிலை பத்து விளக்கவுரை

ஆத்மா - பரமாத்மா தொடர்பு நிலையை வலியுறுத்துவதே அருள்நிலை பத்து அறவழி காட்டும் இறைவழி பக்தி மரபின் சிறப்பியல்பாக வுள்ளது. ஒவ்வொரு ஆன்மாவினுள் உள் நின்று உணர்த்தும் அறவழி குணவியல்புகளே இறைவழி சேர்ப்பிக்கும் மகாசக்தி தத்துவமுடையன. ஒரு ஆன்மாவின் பாவ- புண்ணிய தேட்டத்திலே இறைநாட்டம் முற்பிறவி களிலே வளர்ந்து வந்து முற்றுப்பெறாத குறைத்தொடரே இப்பிறவியில் எமது பாவ - புண்ணிய தேட்டத்திலே உந்து சக்தியாக நின்று இயக்குவித்துக்கொண்டுள்ளது. இவ்வியக்கமே இறைவன் ஆன்மாக்களிடத்தே கொண்டுள்ள தனிப்பெரும் கருணையின் சக்திவடிவமாகவுள்ளது. இச் சக்தி வடிவ அலைகளே இறைவனின் அருள்நிலைகளாக ஒரு ஆன்மாவை அறவழியில் இட்டுச் செல்லும் மகாசக்தி வாய்ந்தவைகளாக உள்ளன. இதனாலே ஒவ்வொரு ஆன்மாவினிடத்தே இறையருள் ஆளுமைத் தொடர்பினைக் கொண்டே இறைவன்தன் தச அருள்நிலைகளை ஆன்மாக்கள் பால் உள்நின்றே உணர்த்தியருள்பாலித்தருள்கின்றார். ஒரு ஆன்மாவின் முற்பிறவிகளில் இறைநாட்டத்தின்மீது ஏற்பட்டிருந்த விட்டகுறை தொட்டகுறை தொடர்பின் விளைவின் அளவுக்கேற்பவே இவ்வருள்நிலைகள் இறைவனிடமிருந்து ஒரு ஆன்மாவினிடத்தே சென்றடைகின்றன. ஒவ்வொரு மானிடனும் தன் தன் முற்பிறவி இறைநாட்டத் தொடரிலே தொடர்புறுவதற்கு அவனது உள்ளத்தின் உள்ளே நின்றுணர்த்தும் மனச்சாட்சியின் எண்ண அலைகளின் நிலைப்பாட்டினிலே பிறக்கும் அறவழி இயல்பே இறை தொடர்பிற்குரிய பக்திமேம்பாட்டின் வடிவங்களாக ஒவ்வொரு அறவழி நிகழ்வு வட்டங்களுக்குள்ளே தோற்றம் பெறுகின்றன. இவையே இறைநாட்டம் பெறுகின்றன. ஒவ்வொருவருடைய உள்ளத்தின் உள்நின்று உணர்த்தும் அறவழி எண்ண அலைகளின் நிலைப்பாட்டைத் தோற்றுவிக்கும் சக்தியே இறையருட் சக்தியாகும். இவ்விறையருட் சக்தியின் அருள்ஒளியே தசவடிவங்களில் ஒரு ஆன்மாவினிடத்தே கொண்டுள்ள தனிப்பெருங் கருணையின் தச அருள் நிலைகளாக வடிவம் பெற்று இறைவழியடைய தோன்றாத்துணையாக தோன்றி அருளதிகாரம் செய்து ஒரு ஆன்மாவை அறவழியில் இட்டுச் செல்லும் மகாசக்தி தத்துவம் கொண்டு விளங்குவன. இவையே இறைவனின் பத்து அருள்நிலைகளாகும். இறைவழிக்குரிய ஆளுமை வட்டமே அறவழியாகும்.இறைவழிக்குரிய தலைமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனே ஆளுமைசெய்தருள்கின்றார். அவ்வாறே சகல உலகங்களிலும் அனைத்து அறவழி நிகழ்வு வட்டங்களிலும் இறைவனின் அருள் ஆளுமை அதிகார சக்தியே இயக்கி வருகின்றது. இறைவனின் அறவழி ஆளுமைக் குரிய அருள்நிலை பத்தாக உணர்த்தப்படுகின்றது. இப்பத்து அருள்நிலைகளே ஒவ்வொரு ஆன்மாவின் முற்பிறவி - இப்பிறவி பாவ - புண்ணிய இறைநாட்டமுள்ள தேட்டத்திற்கமையவே ஒவ்வொரு ஆன்மாவினதும் இறைவனின் அருளதிகார சக்தி ஆளுமை செய்கின்றது. இவ்வருள் ஆளுமை அதிகாரம் பத்துவித அருள்நிலைகளின் மூலம் ஒவ்வொரு ஆன்மாவிலும் உணர்த்தி இறைதொடர்பை அறவழியில் ஊட்டி உறுதி செய்கின்றது.

ஒரு ஆன்மாவின் முற்பிறவி - இப்பிறவி தேடிவைத்த இறைதொடர்பு மீண்டும் தொடரப்படுகின்றது. இதன் மூலம் ஆத்மா பரமாத்மா தொடர்பு நிலை உணர்த்தப்பட்டு ஒவ்வொரு ஆன்மாவிலும் அதன் இறைவழி தேட்ட ஆன்மீக சக்திக்கேற்ப இறைவனின் பத்து அருள்நிலைகளும் ஒவ்வொரு ஆன்மாவிலும் உள்நின்று உணர்த்தி அருள் ஆளுமை செய்யப்படுகின்றது. இதனாலே நாம் பாவவழிகளிலிருந்து விலகி அறவழியில் இறைபக்தி பெருக, உருக இறை கருணையிலே லயித்து ஆனந்த பரவசநிலையடை கின்றோம். இப்பத்து அருள்நிலைகளும் இறைவனாலே ஆன்மாக்களுக்கு உணர்த்தப்படுகின்றது. இப்பத்து அருள்நிலைகளாவன:

**1. திருவருள் குருவருள் நிலை**:இது இறைவன் ஆன்மாக்களிடத்தே கொண்டுள்ள தனிப்பெருங் கருணாகடாட்சத்தின் மகிமையையே குறித்து நிற்கின்றது. ஒரு ஆன்மாவிற்கும் - பரமாத்மாவிற்குமுள்ள உறவை நெருக்கமுற, பழக்கமுற வைக்கின்றது. இதுவே அறவழியின் இறைவழிகாண மூலாதாரமாக அமைகின்றது.

**2. குருவருள் நிலை:** இறைவனிடமிருந்து ஒரு ஆன்மாவிற்கு கிடைக்கும் பெரும் பாக்கிய நிலையைக் குறிக்கின்றது. இப்பெரும் பாக்கிய பெறுபேற்றிலே அனைத்து அருள்நிலைகளும் இறைவன்மூலம் ஓர் ஆன்மாவினிடத்தே சென்றடைகின்றன. இதனால் ஏனைய அருள்நிலைகளின் உயர்நிலைகள் இப்பெரும் பாக்கியப் பெறுபேற்றின் விளைவுகளின் பிரமாண அளவுக்கேற்பவே ஒரு ஆன்மாவினிடத்தே ஆத்மா - பரமாத்மா உறவும் உறவுக்குரிய தெளிவும் உணர்த்தப்படுகின்றது.

**3. பஞ்சபூதமல நிலை:** ஓர் ஆன்மாவினிடத்தே இதற்கான தெளிவு ஞானம் முற்பிறவி - இப்பிறவி இறைவாசனைக்கேற்பவே ஓர் ஆன்மாவினிடத்தே உணர்த்தப்படுகின்றது. ஐம்பொறிகளினதும் மும்மலங்களினதும் தாக்கங்களின் கேட்டின் விளைவுத்தன்மை இதன்மூலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஆன்மாவினிடத்தே உணர்த்தப்படுகின்றது.

**4. வினைவிளக்க நிலை:** ஓர் ஆன்மா இறைவனின் அருளால் பாவங்களின் (கர்மவினைகளின்) தன்மையை உணர்ந்து தெளிவடைந்து கொள்ளும் உணர்நிலையைப் பெறுகின்றது.

**5. மெய்விளக்கநிலை:** ஓர் ஆன்மா தன்னையும் தான் பெற்ற உடலையும் அவ்வுடலின் உயிர் நிலையையும் பற்றிய உண்மை விளக்கத்தை உணரும் நிலையை இறைஅருளினால் பெற்றுக் கொள்வதை குறித்து உணர்த்துகிறது.

**6. வேண்டல்நிலை:** ஓர் ஆன்மா தன் அநாதி நிலையை உணர்ந்து இறைவனை வேண்டுதல்செய்யும் உணர்நிலையை இறையருளால் தெளிந்து கொள்ளும் நிலையைக் குறிக்கின்றது.

**7. மெய்விழிப்பு நிலை:** ஓர் ஆன்மா தான் பெற்ற உடலின், உயிரின் உண்மையான இறைவிழிப்பு நிலையை இறையருளால் பெறும் உணர்நிலையினையே குறித்துநிற்கின்றது.

**8. பிறப்பு இறப்பு நிலை:** ஓர் ஆன்மா பல பிறவிகளையும் பல இறப்புக்களையும் சுழன்று சுழன்று பிறப்பு - இறப்பு - நிலைவட்டத்திலே சுற்றுவதையும் அதனால் உழன்று உழன்று படும் துயர்நிலையிலிருந்து மீட்சி பெறும் உணர்நிலை பெற்று இறைவட்டப் பாதையினை அடையும் தெளிவு நிலை உணர்வை இறையருளால் பெறும் நிலையினையே குறிக்கின்றது.

**8. சரணாகதி நிலை:** ஓர் ஆன்மா தனது நிலையில் தனித்து எவ்வித ஆதாரமும் நிரந்தர உறுதியுமே இல்லை என்பதை உணர்த்தும். இறைவன் ஒருவனே அனைத்திற்கும் தஞ்சம் என்ற உணர்நிலையை இறையருளால் உணர்ந்து பெறுவதையே குறித்துநிற்கின்றது.

**10. சரணாஞ்சலி நிலை:** ஓர் ஆன்மா இறைவனிடத்தே பூரண சரணாகதி நிலையையடையும் உணர்வைப் பெறுவதுடன் இறைநிலைக்குரிய நினைவிலே ஊறித்திளைத்திருக்கும் எண்ண அலைகளிலே பரவசமடைந்திருக்கும் உணர்நிலையை இறையருளால் பெற்று இறைதொடர்பிலே நீங்காமல் நிலைத்திருப்பதுடன் பரிசுத்த நிலையினை ஆன்மா பெறுவதுடன் தன்நிலையிலே இன்புற்றிருந்து ஈற்றிலே ஆன்ம - ஈடேற்றம் பெற தன் பூதவுடலை ஆன்மா இழந்தநிலையிலும் சூக்கும உடலிலேயும் அவ்வாறே இருந்து இறைஜோதியில் இரண்டறக்கலக்கும் பெரும் பக்கியத்தையே குறித்து வெளிப்படுத்தி நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதியின் தத்துவ விளக்கமும் வரலாற்றுச் சுருக்கமும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உகந்தைப்பதியின் தத்துவ விளக்கமும் தல வரலாற்றுச் சுருக்கமும்

கலியுகத்திலே கண்கண்ட தெய்வமாம் முருகப் பெருமான் கோயில் கொண்டருளி எழுந்தருளியுள்ள உகந்தைப் பதியானது இப்பூவுலகிலுள்ள முக்கிய புண்ணிய சேஷ்திரங்களில் ஒன்று. இப்பதியின் பெயர் ஓங்காரநாம ஒலி வடிவு கொண்டது. ஓங்கார தத்துவசக்தியடங்கப் பெற்றது. பிரணவ மந்திர நாம சொருப ஒலி ஓங்கப் பெற்றது. அருள் ஒலி பேசும் கருணைக் கடலாம் குமரக் கடவுளின் அருள் மகிமை நிறையப் பெற்றது இத்திருவருட் தலம். சிவனுக்கும் பிரமனுக்கும் ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின் பொருளையே உபதேசித்தருளிய (சுவாமிநாதக் கடவுள்) தலங் கண்ட மகிமைபெற்றது இப்பதி. குமரக் கடவுளே இப்பதியை உவந்து பெருமானுக்கு உகந்த தலமாகவே இப்பதியின் மலையுச்சியிலே கோயில் கொண்டு எழுந்தருளி இருப்பதனால் இம் மலைக்கு உகந்த மலை எனப் பெயர் வந்தது. இப்பதியிலே ஸ்ரீ வள்ளி தேவியாருக்கும் முருகப் பெருமானுக்கும் திருக்கல்யாணவிழா நடந்தபோது மூவர்களும் தேவர்களும் ஆனந்தித்துக் கொண்டாடிய கல்யாண மங்கள வரலாற்று மகிமையைக் கொண்டது இப்பதி. சூரபத்மனின் ஆங்கார சக்தியை அழித்து முருகப்பெருமானின் ஓங்காரசக்தி வேலிலிருந்து சிந்திய மூன்று கதிர்களிலிருந்து உருவெடுத்த மூன்று ஓங்கார சத்தி வேல்களிலும் முதன்மை வாய்ந்த அருட்சக்தி நிறைந்த ஓங்கார சக்தி வேலே உகந்த மலை உச்சியிலே தங்கிற்று. இதனால் இப்பதியில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமானிற்கு ஒப்பிலா வேலர் என்ற திருநாமமும் உண்டு. ஓங்கார சக்திவேற் பெருமானின் திருத்தலமாகையால் ஆதியில் இப்பதிக்கு ஓம் கந்தா என்ற பெயர் இருந்து வந்துள்ளது.

ஓம் கந்தப்பதியே பிற்காலத்தில் ஓகந்த என திரிபுற்று ஓகந்த என இப்பதியின் பெயர் மருவிற்று. முருகப்பெருமானுக்குரிய திருவுள விருப்பினாலே விரும்பியே பெருமானுக்கு உகந்த இடமாக இந்தத் தலத்திலே கோயில் கொண்டு எழுந்தருளியமையால் இத் திருவருட் தலத்தை அடியவர்கள் உகந்த, உகந்தை என்ற பெயர்களினால் பக்தியோடு அழைத்து வருகின்றனர். ஓம் கந்தா, ஓகந்தா, உகந்த, உகந்தை என்னும் பெயர் நாமங்கள் அடியவர்களின் நாவிலிருந்து ஒலிக்க இறைவனின் திருவருட் கடாட்சமே மூல காரணமாயிற்று. இப்புண்ணிய சேஷ்திரத்தில் அடங்கப்பெற்றுள்ள திருவருட் சக்தி மகிமையை விழிப்பித்து உணர்த்தும் இறைவனின் திருநாமங்களின் கருத்துக்களை அறிந்து கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம்" பிரணவ மந்திரம், "கந்தா" இறைவனைக் குறிக்கின்றது. நாம் அகந்தை, அகந்த என்னும் சொற்களின் எதிர்ப்பாலான சொற்களை அறிந்து கொள்வோம். அகந்த - உகந்த, அகந்தை - உகந்தை,அகந்த-அகந்தை என்னும் சொற்கள் ஆங்காரம் எனப் பொருள்படும். உகந்த உகந்தை என்னும் சொற்கள் ஓங்காரமென்னும் பொருள்படும். ஓகந்தா என்னும் நாமத்தில்'ஓ" பிரணவ சொரூப வடிவ ஒலியுடன் சேர்ந்து கந்தா என்னும் இறைநாம ஒலியுடன் சேர்ந்து ஒலித்து ஓகந்த என திரிபுற்று மருவினாலும் இறை திருநாம ஒலியுடன் கூடிய பிரணவ மகா மந்திர சக்தியின் ஒலி வடிவமே வெளிப்பட்டு நிற்கின்றது. ஓம் கந்தா, ஓகந்த, உகந்த, உகந்தை என்னும் நாமங்கள் நான்கும் ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின் ஒரே கருத்தைக் கொண்டு பிரணவ மந்திர சக்தியை ஒலித்து இறையருள் பெருக்கும் திருநாம தத்துவ வடிவங்களே. ஓம் கந்தா, ஓகந்த. உகந்த, உகந்தை என இப்பதியின் நாமங்கள் வெவ்வேறு ஒலி வடிவமான நான்கு பெயர்களைக் கொண்டிருந்தபோதிலும் ஒரே பிரணவ மந்திர ஒலியின் பொருளையே தொனித்துக் கொண்டுள்ளது. இது மகாமந்திரமான பிரணவ மந்திர ஒலி நாதமே உகந்தைப் பதியின் திருநாமமென ஆன்மீக உலகிற்கு நிருபணமாக்கிக் கொண்டுள்ளது. எனவே இப்பதியிலே ஓங்கார சக்தி பூரணமாக அடங்கப்பெற்று இறைவனின் அருள், கருணை அலைமோதும் இறை கிருபையும் இறைதொடர்பும், இறைவனின் அருளாட்சி நிலை கொண்ட இறைசாந்தி நிலையமாகவே இப்பதி உணரப்பட்டு கருதப்பட்டு வருகின்றது. இப்பதியின் நாமங்கள் நான்கு ஒலிவடிவ நாம தத்துவங்களாகப் பிரிந்து ஒலித்துக்கொண்டு இருந்தாலும் இப்பதியின் நாற் திசையிலும் ஓங்கார நாம தத்துவப் பொருள் ஒலிவீசி குமரக்கடவுளின் திருவருள் மகிமையின் அருளொளி வீசி ஐயனின் அருள் மகிமையே ஓங்கி நிற்கும் இறைவனின்அதிஅற்புத நிலையை இங்கு காணலாம். இவ்வற்புத அருட்தத்துவம் உலகில் எந்தவொரு புண்ணிய ஷேத்திரத்திலுமில்லாத ஓர் இறை மகத்துவமாகும். அருள் வள்ளலாம் திருமுருகப்பெருமானின் அருட்கொடை மகிமைக்கும் இனி வேறு சான்று உண்டோ என்க.

பிரணவ மகா மந்திர சக்தியே தன் பதியின் திருநாமமாகக் கொண்டு அத்திருநாமமே அடியவர்களின் நாவில் சதா எழச்செய்து அம்மகா மந்திரமே ஒலிக்கப்பெற்று பல்லாண்டு காலமும் ஒலித்து சக்தி உருப்பெற்றது இப்பதி. ஓங்கார சக்தி நாதம் உருப்பெற்று வலுப்பெற்று ஓங்கிய ஒலிஅலைகள் அலைமோதிப்பரவி மண்ணிலும் விண்ணிலும் அதிர வானமண்டலத்திலே இவ்ஒலிகள் சூக்குமநிலையில் எமது செவிப்புலன் களுக்கு அப்பால் ஒலிப்பதிவுகளாகி பெருகிய வண்ணமே இப்பதியின் சக்தி ஓங்கார சக்தியினால் மிகவும் உருப்பெற்று மிகவும் சக்திவாய்ந்த அருட்தலமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலே சிறந்து விளங்குகின்றது. இவ்வரிய மகா மந்திர சக்தியினால் தேவுக்களினதும் மூவுக்களினதும் அனைத்து தெய்வங்களினதும் முருகப்பெருமானினதும் மிக்க கிருபையும் கருணாகடாட்சமும். நிறைந்த இப்புண்ணிய சேஷ்த்திரத்திலேதான் முருகப்பெருமானின் ஓங்கார சக்திவேலின் அருட்சக்தி மிகுந்த முதன்மையான வேலுருக்கொண்டு உகந்தைமலை உச்சியிலே தங்கி அருளாட்சி செய்து ஒப்பிலா வேலவர் என்னும் திருநாமத்துடன் முருகப்பெருமான் எழுந்தருளி அடியவர்கள் குறைதீர்த்து கருணாகடாட்சம் செய்தருள்கின்றார். படைத்தற் கடவுளாகிய பிரமதேவருக்கே பிரணவமந்திர ரகசிய தத்துவத்தின் உட்பொருள் மெய்பொருள் உபதேசமருளிய நம் குமரக்கடவுளாரின் ஓங்காரசக்திவேலின் அருட்சக்தி ஓங்கி தரித்துநின்றதும் முருகப்பெருமான் தனக்கு உகந்த தலமாக கோயில் கொண்டருளியதும் இம்மகாமந்திர நாம ஒலிபடைத்த இப்பதியின் திருநாம தத்துவமகிமையினால் போலும்.

பிரணவ மகாமந்திர சக்தி ஒலிஒளிபெறும் இப்புண்ணிய சேஷ்திரத்தில் திருமுருகப்பெருமானின் திருவருள் ஒளி அலை அருள் வீசி மோதியவண்ணமேயுள்ளது.இத்திருத்தலத்திலே நாம் இறைதிருவடிகளில் முழுச்சரணாகதி அடைந்த நிலையில் தூய அன்புடன் ஒரே மனநிலையில் முருகப்பெருமானை மனமுருகி மனம் இறுகி வழிபட்டு வர அவனருளால் அனைத்து வினைகளும் மும்மலக்குற்றங்களும் ஐவிருள் அதிகாரமும் அதன் ஆகோரமும் ஆங்காரமும் சூரியனைக் கண்ட பனிபோல நிச்சயமாக நீங்கி மறையும். கலியுகவரதனாம் நம்முருகப்பெருமான் இருண்டயுகமாகி இரும்பு யுகமாகிய கலியுகத்து இருளில் மருள்சேர்ந்து அலையும் ஆன்மாக்களின் பால் கருணைகொண்டு திருநோக்கமுற்று அருள் ஒளிகாட்டி அடியவர்களை இப்பதியிலே அரவணைத்து ஆட்கொள்ள கருணைகாட்டும் அதன் ஒளிபேசும் திருவருளும் குருவருளும் நிறைந்து விளங்குவது உகந்தைப்பதியே எனவும் இப்புண்ணிய சேஷ்திரத்தின் அருள்மகிமை என்றும் வற்றாத அருட்கடலாகவும் உள்ளது எனவும் இப்புனிதப்பதியின் தத்துவ உண்மைகாட்டும் விளக்கம் என்க.

உகந்தது என்பதன் அர்த்தம் பொருந்தியது, இசைந்தது, பொருத்தமானது என பொருள் கொள்ளும். ஆன்மீக தத்துவத்தின்படி நாம் நமக்கும், பிறருக்கும் உலகத்திற்கும் இறைவனுக்கும் பொருந்திய வழியில் அல்லது உகந்த வழியில் ஆன்மீக நெறி நின்று வாழ்வதன் மூலமே இறையருளையும் இறை தொடர்பையும் குருவருளையும் நாம் பெற்று இறை திருவடிகளை நாம் சென்று அடையமுடியுமென்பதாகும்.உகந்த என்றால் இசைந்த அல்லது பொருந்த எனப் பொருள்படும் என அறிந்தோம். உடலுக்கு ஒவ்வாமை வரும் போது உடல் தடிக்கும். இதை ஆங்கிலத்தில் வைத்தியர்கள் அலேர்ஜிக் நோய் என்று கூறுவார்கள். அதாவது ஒவ்வாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் என்பது. இது உண்ணும் உணவினாலோ வேறு விதத்திலோ வரும்நோய். ஆனால் எமக்கும் பிறருக்கும் உலகத்திற்கும் இறைவனுக்கும் இடையில் தனித்தனியாக வேறுபடுத்திப் பிரித்துத் தனித்து வைக்கும் மகா கொடிய ஒவ்வாமை நோய் கர்வம் அல்லது ஆணவம் என்னும் ஒவ்வாமையே எம்மையும் பிறரையும் உலகையும் இறைவனையும் பிரித்தாளும் தீராவினை இருளாக இருந்து எம்மை வருத்தி வருகின்றது. எம்மில் உள்ள ஆங்காரசக்தி முற்றாக நீங்கிய நிலையிலே நமது ஆன்மா நிர்மல நிலையான ஓம்கார சக்தியைப் பெறுகின்றது. இதுவே பரப்பிரம்ம தத்துவம். எம்மையும் இறைவனையும் பிறரையும் உலகையும் பிரித்தாளும் சக்தி ஐவிருளினால் வந்த மும்மல இருள்களுக்கு உண்டு. ஆணவமே அனைத்து மல உற்பத்திக்கும் மூல ஆணிவேர்.

ஆசை, சந்தேகம், கோபம், கர்வம், அடங்காமை, அவசரம், ஆத்திரம், கோத்திரம் யாவும் ஆணவ மலத்தின் குணவியல்புகளே. சந்தேகம்-சந்தோஷக்கேடு . நாம் எதிலும் எதற்கெடுத்தாலும் சந்தேகம் கொள்வதிலும் சந்தேக மனப்பான்மையை வளர்த்துக்கொள்வதிலும் அவ்வாறு வாழ்வதற்கும் காரணமாகி இறுதியிலே ஒருத்தரை ஒருத்தர் வெறுத்துப் பிரிந்து இறைவனையும் வெறுத்து உலக ஆசாபாசங்களில் மூழ்கித் திளைத்து மயங்கிப் போய் பேய் வாழ்வுக்கு ஆளாவதும் இம் மும்மலங்களின் சக்தியின் ஆளுமையும் ஆட்சியுமே ஆகும். உயிர்களும் உலகமும் இறைவனும் பிரிந்து உயிர்கள் வாழ அபிப்பிராய பேதமே மூலகாரணமாகும். இம் மலங்களின் ஆட்சியிலும் ஆளுமையிலும் இருந்து நமது ஆன்மா சுதந்திரமடைய உகந்தப்பதியானை நம்புங்கள். அவன் மீது தூய அன்புடன் பூரண சரணாகதி அடையுங்கள். அவனையும் அவன் பதியையும் சதா நினைவிற் கொள்ளுங்கள். அவன் பதியை நாடுங்கள். அவனை வழிபடுங்கள். மும்மலக் கொடுமைகளின் அடிமைத் தனத்திலிருந்து விடுபடுங்கள். ஐயனின் அருளுக்கும் கருணைக்கும் நிச்சயம் ஆளாவீர்கள். இந்த யுகத்திலே யுகயுகாதீரன் கலியுகக் கடவுளாம் கண்கண்ட தெய்வமான முருகப் பெருமானின் அருள் விளையாடலும் திருவிளையாடலும் சதா நிகழும் இப்பதியிலே குமரப்பெருமானின் குருவருட் சக்தியின் துணைகொண்டே நமது ஆத்மா சாந்தியடைய முடியும். இதுவே உண்மை விளக்கம். இதுவே உகந்தப்பதியின் தத்துவமுமாகும்.

இப்பதியிலே தசகண்ட இராவணேஸ்வரனால் தோற்றுவிக்கப்பட்ட பாபநாச தீர்த்தச்சுனைகளும் அரிய தீர்த்த மகிமையுமுண்டு. இராவணேஸ்வரனுக்கு யமதர்மராஜனால் சாபமிட்ட காரணத்தால் அவன் சாப விமோசனம் வேண்டி உகந்த மலையின் உச்சியிலே சிவாலயமுமியற்றி தீர்த்தச் சுனைகளுமியற்றி இறைவனைத் தூய அன்போடு பூரண சரணாகதியடைந்து வழிபட்டு சாபவிமோசனமடைந்தனன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கார சக்தி படைத்த சூரபத்மனை முருகப்பெருமானின் ஓங்கார சக்தி படைத்த வேலானது அழித்து உகந்த மலை உச்சியிலே ஓங்கார சக்தியாக எழுந்தருளியுள்ளது. ஓங்கார சக்தி வேற்பெருமானின் அருளினால் ஆங்காரம் அழியப் பெற்ற சூரபத்மன் முருகப்பெருமானின் திருவடிகளில் பூரண சரணாகதி பெற்ற நீலமயிலாக நின்று பெருமானைத் தாங்கி நிற்கும் பெரும் பாக்கியம் பெற்றனன். எனவே இப்பதியிலே இரு மாபெரும் சூர அசுர அதிபதிகளின் ஆங்கார நிமித்தம் ஏற்பட்ட ஆணவ இருள் அழிக்கப்பெற்ற இறையருள் பொழியும் இப்பதியின் மகத்துவத்தின் பெருமையை நினைந்து நாமும் அதன்வழி நடந்து இறையருள் பெறுவோமாக.

இப்பதியிலே சீதாப்பிராட்டியாரின் மறு அவதராமாகப் போற்றப்படும் சிறந்த இராமபக்தையும் இலங்கையை ஆண்ட பேரரசி ஆடகசவுந்தரி என்பாள் நூற்றிருபது ஆண்டுகள் இளமை மாறாப் பேரழிகியாகவும் இராமபிரானின் அருளால் பூதப்படைகளையும் அடிமைகளாகப் பெற்று வீர (பராக்கிரமசாலியாகவும்) தர்மநெறி தவறாதவளாகவும் வாழ்ந்து தனது தவப்பேற்றின் மகிமையால் நூற்றிப் பதினாறாவது வயதிலே திருமணம் முடித்து அதன் பேறாக ஓர் ஆண்மகவை மட்டும் பெற்றனள். அவனே சிங்ககுமாரன். இக்குமாரனுக்கு மூன்று வயதடையும் போதே இப் பேரரசி சிவபத மடைந்தனள். இக் குமாரன் வளர்ந்து தந்தையாகிய குளக்கோட்ட மன்னன் அல்லது மகாசேனன் என அழைக்கப்படும் மன்னனால் உன்னரசுகிரி இராச்சியத்திற்கு பட்டங்கட்டப்பெற்று அரசனானான். இவனே உகந்தைமலை உச்சியில் சிவ, விஷ்ணு, பிரம்மா மும்மூர்த்திகளுக்கும் ஆலயமுமியற்றி மும்மூர்த்தி ஆலயங்களுக்கு நடுவில் தங்கக் கொடித் தம்பமும் உகந்தை மலையைச் சுற்றி தனித்தனியே அட்டதிக்குப் பாலகர்களின் ஆலயங்களுமியற்றி அவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக எட்டுச் செம்புக் கொடித்தம்பங்களும் நிறுவி ஆயிரம் அவண நெற்கழனிகளும் திருத்தி குமுக்கன் கங்கையிலிருந்து வெட்டு வாய்க்கால் மூலம் நீரும் அக்களனிகளுக்குப் பெற்றுக் கொடுத்து அக்களனிகளை ஆலயத் திருப்பணிக் கடமைகளுக்குரியவர்களுக்கும் ஆலயத்திற்கும் வருமான வழியமைத்து ஆலய அபிசேகமும்செய்து ஆறுகாலப் பூசையுமியற்றி இராவணேஸ்வரன் பெயரில் தீபமுமிட்டு இறைபணி செய்து வழிபட்டு வந்தனன் என்பதும் வரலாறு காட்டும் உண்மைகளாகும். எனவே இப்பதியில் மும்மூர்த்திகளின் அருளும் கருணாகடாட்சமும் பெற்று மகிமை பெருகுவதுடன் அட்டதிக்குப் பாலகர்களின் கருணையருள் ஒளியும் பெற்று தென்கயிலாசத்தின் கருவறையாக இப்பதி அடியவர்களினால் போற்றப்பட்டும் வழிபாடு செய்யப்பட்டும் வருகின்றது.

**உசாத்துணை நூல்கள்:** *1. மட்டக்களப்பு மான்மியம்*
*2. மட்டக்களப்புத் தமிழகம்*
*3. கதிர்காமப் பிரபந்தங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் வணக்கம்

உ

## விநாயகர் துதி.

சித்தூற வித்தூற கற்றூற
வேழமுகத் திருவின் நினைவூற
என்மதியில் என் நினைவில் என்நாவில்
முழுமுதல்வன் துதியூற
வற்றாத அருள்கொம்பன் நம்பிக்கை தும்பிக்கை
பத மார
நாவாழ நலம்வாழ யான்வாழ கந்தன்
உகந்தன் பாஆள பாவாழ
சங்கம முழு முதலின் அருள் உண்டே துணை.

•

கஜமுகன் ஒருமுகன் திருமுகனே
அருள்முகன் கருணையின்
பெருமுகன் திருவருள் துணைவரவே
பணிவரும் மனமே துதியுறு
தினமே கணமே நினைவுறு மனமே
அருள் ஒளி பெறுமே
முழுமுதல் சங்கமன் உகந்தையன்
துணையுறு முதற் பொருளே
கந்தன் பதியுறு வரம் தரும் கற்பகமே
அருள் அற்புத முழுமுதலே
யுக யுக வடிவன் கலியுக வரதன்
கருணையின் மகிமை
அருளினின் பெருமை எழிலுறு துணையுறு
திருவருட் சோதர முன்முதலே
குருவருட் சண்முக குகபர பதியுறு
முதல் தலைவே
என் அக இருள் புறஇருள் நீங்கவே
நீ அருள்புரி ஐங்கரபதிமுதலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணொடு விண்நோக்க கண்ணொடு
கருத்தும் உள்நோக்க
என் அன்பொடு உன் அருள் நோக்க
என் பண்ணொடு
பாவும் கந்தன் உகந்தன் துணைநோக்க
உந்தன் அருள் துணைவந்து
எனைநோக்க அருள் தந்திடும் தந்திமுகனே
கருணையே எனைக் காக்க
வந்திடும் தந்திடும் நிலைத்திடும் இருளும்
மருளும் தொலைந்தே எனைக் காக்க
இக்கணம் எக்கணம் என்மதியே துதியே
உனை நோக்க
ஐங்கரன் அருளும் கருணையும் எனைநோக்க
என்மதி நிம்மதி நின்னருள் நோக்க
அருள்வாயே கணபதி சங்கம முழுமுதலே.

சீர்பெறும் காரண பூரண புண்ணியனே
பார் பெறும் தாரண காரணமுழுமுதலே
ஊர் சீர் பெறும் சித்தியும் முத்தியும் தான் பெறும்
வழிமுதற் காரண பூரண அருட்கடலே
ஞானமத மோங்கவே காண மதம் பொழியவே
திகழா நின்ற பெருமாளே
அருட் செல்வமோங்கவே கருணை நினைவுமே
பரந்துறைந்து நிறையவருமன்புமே
இனிய ஞான வாழ்வுமோங்கவே தெளிந்த உளமுமே
நிறைசுகமுமே இறைசுகமுமே
தந்தருள வந்தருளும் கணநாதப் பெருமாளே
இவையே இகபரமே
துளிர்பெற உயிர் பெற அருள்வாயே
ஐந்துகரமருள வரும்
சங்கம முழுமுதலே தந்திமாமுகப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானை முகனே பானை வயிரோனே
பத்திவழி சித்திவழி
முதல்வோனே முக்திக்கு முதல்வனே
சக்திக்கு முன்முதல் செல்வனே
சங்கரன் ஞான செல்வனே எண்ணகத்தில்
உறைகின்ற
அருட்செல்வனே நித்திய முழு முதல்வனே
சத்திய வித்திய வேழமுகவடிவனே
ஒரு கொம்பனே உனை நம்பினேன்
துணை வேண்டுவனே
எனை ஆண்டு நீ அருள் புரிவாயே
உகந்தப் பதியாளும்
கந்த கிரி நின்ற கணநாதனே.

வேதமங்கள ஞான சொருபா நமோநம
ஆதிமங்கள சோதிகடம்பா நமோநம
நாதமங்கள முனிந்தா முதல்வே நமோநம
ஏழிசை யாழ்புகழ் தேவே நமோநம
மாது மணிதிகழ் ஞானமருளிய கோவே நமோநம
ஆரும் உன்புகழ் பேசும் நம்மிடையமர் அருள்புரியமரே நமோநம
பூசு நீறிடை தேசு வீசுற ஜோதி பொழிவுறு தேவுமகிழினி
கானுவினையழி சாமி நமோநம
ஏது என்புகழ் யாதும் உன்புகழ் வாதுகொளவருள் நேயஇனிதருள்
உகந்தா நமோநம
நீதி துணைபொழில் எழிலுறு வேலின் விழைதிரு அழகா
நமோநம
சாதிதுயர்விட ஞாலம் உயர்ந்திட வேதமருளிய குமரா
நமோநம
ஓதும் அடியவர் வினைவிட பாடும் அடியவர் குறைதீர வரமருள்
நாதா நமோநம
ஆடும் அடியவர் அல்லல் பறந்திட சோதி தமதருள் வீசிவிளங்கிட
அருள்புரி தேவே நமோநம
வீடும் உனதடி பேறும் நினதடி யாதும் கதியுறுநீயே யெமக்கருள்
உகந்தைப் பதியுறுகுமரா நமோநம
வாடும் பயிரிடை பொழிவுறு மழையது போலுறுகருணை மழையருள்
உகந்தா நமோநம
நீதியன்மதி நிலவிட பெருகிட நீயுமருள்புரி நந்தா விளக்கே
கந்தா நமோநம


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழில் துன்துகள் பறந்திட வேலேபேரருள் கருணை மலர்ந்திட
நின்றருள் குமரா நமோநம
ஜோதிஒளிதிகழ் யாதும் ஒழித்தருள் உகந்தை மலையிடை மகிழ்வொடு
காத்தருள் மாதுவனமகள் நாதா நமோநம
மோதும் அலை இடை ஓங்கிட வந்திடும் நாத ஒளிதிகழ்
வேத மூலமே நமோநம
ஆளவந்தருள் நாம சுந்தர மணியருள்புரி கீத கிண்கிணி நாதா
நமோநம
வாளவந்தருள் காத்தருள் நின்புகழ் பாடும் அடியவர் மகிழ் பெறுகுகனே
நமோநம
தேனும் தினையுடன் தேவுபுகழ் பெறுநினதருள் வனமக்கள் குலமே
புகழுறு திலகா நமோநம
உகந்தை மலையுறு திருவே நமோநம
கந்தப்பதிமேவுகுருவே நமோநம.

சோதி சுந்தர வேத மந்திர நாதா நமோநம
ஓதும் அந்தணர் ஆடும் மணிதிரள் ஓடும் பவ இருளகல் வீரா நமோநம
மாது குறமகள் தேவி மணம்புரி வேலா நமோநம
யாதும் குலம்புரி வேண்டும் அருள்திகழ் கோல நடம்புரி நாதாநமோநம
தீன தயாநிதி மாதவமுருகா மேதவகுணாளா நமோநம
ஞானதுரந்தர சூரசங்கர திரிபுர சுந்தர உகந்தா நமோநம
கான வினோத அன்புறு இன்புறு துன்புறு நாமா நமோநம
நாடிய அடியவர் பாடிய தேன்இசை பொழிவுறு தேவே நமோநம
ஆடிய கிண்கிணி மோதிடும் அருள் இசை எழிலுறு கோவே நமோநம
ஞாலம் துலங்கிட விளங்கிட அன்பருள் ஞான மோகன கோவன தாரேநமோநம
ஆடும் மணி இசை நாடிய குன்றிடை எதிரொளி பரவிட
அருளொளி வீசு தன்புரி குமரா நமோநம
ஆடும் இங்கிதம் பாடும் இன்னிசை தேடும் அருள் ஒளி காட்டிடும்
கந்தா நமோ நம
காலதுன்புரி சூதவன்புரி மோதும்இப்புவி காத்தருள் உகந்தா நமோநம
யாதும் உன்புகழ் யாதும் உன்செயல் ஏதும் உன்பொருள் நாடும் உன்
பொருள் கோல கிண்கிணி நாதா நமோநம
போதி அணிஇடை வேத மதிஇடை சாதிசமன் எடை யாதும் உனதிடை
எனவமர் பதிதனிலிடையருளிய உகந்த நாதா நமோநம
ஜோதி ஒளி வளர் சேதி நமதிடை ஜாதி அழிவளர் அருளே நமோநம
ஓதவெனவருள் பிரணவதத்துவ நாமசொருபதிலமர்நாதா
நமோநம
மோதும் திரைகடல் ஓங்கி எழிறு சூழுறு சோலை பொழிவுறு
திருவுறு உகந்தைக் குன்றருள் வேலே நமோநம


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ நாதருள் உகந்த நாதா தென்திசை ஆள்பதி திருவே
நமோநம
சுந்தரமகிந்தா உமையருள் உகந்தா கருணைக் கதிபே மல இருள்
மாற்றும் மனம்புரி நாதா நமோநம.
வேததுரந்தர மோன முனிவருள் தேவருள் அடியவர் அன்புரி நாதா
நமோநம
கீத இன்னிசை மாற்றிடு பவவினை கேட்டது தந்தருள் குமரே நமோநம
ஆளும் உன்னருள் வாழும் இன்புகழ் கலியுக பூதலமேவிய தெய்வபதியே
நமோநம
ஓதவென்றொரு யாதுமின்றில்லை காதும் என்றில்லை கடும் இருள் நிறை
பொழுததனில் காத்திடும் சீலா நமோநம
தேவ மடந்தையர் சூழ உயர்ந்திட்ட மேதினியாழ்புகழ் தேவி துணை
தந்திட்ட மேதினியாள் புகழ் தேவே நமோநம
ஆரும் என்றிட யாதும் திசையிடை துணையுறா திருந்ததிட்டவேளை
நின்துணை காத்தருள் ஒப்பிலாவேலே நமோநம
ஓம் கந்தா ஓம் முருகா எனவோதும் மடியவர் தமதிடை வள்ளி
தெய்வானை மகிழுற மயிலேறி வேலுடனன்பொடு ஓடி
வந்தருள் நாதா நமோநம
உகந்தைப் பதியமர் கோவே நமோநம
அன்பர்களுள் இன்புறு கோவே நமோநம

10766

தேவத்திரு மாது தவமாது மணங்கொண்ட
வேடத் திருமாது தவமாது
மணங் கொள்ள வள்ளி வள நாட்டின்
அருள் நாட்டின்
தவம் உயர தலம்உயர அருள் நிறைய
பொருள் கொண்ட உகந்தை மலைவேலனே
கடலின் அலை பாய அருளின் ஒளிபாய
கருணையருள் வாழ
உகந்தைப் பதிகண்ட தவத்தின் மணம்கண்ட
அகத்தின் இருள் நீக்க
இகபர சுகத்தின் ஒளியேற்ற முகத்தில் அறுமுகம்
கொண்டே விழியில்
கருணை ஒளிபாய பன்னிரு விழி கொண்டே
துணைக்கு அபயமென அருளும்
பன்னிரு கரம் கொண்ட எமைக்காக்க
அருள வரும் கருணை விழி அழகோனே
உகந்தை மலையானே போற்றி போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகமே இருக்கின்ற இனிக்கின்ற
சுகமே
தவமே நிலைக்கின்ற நிறைகின்ற
வரமே
பவமே பணிகின்ற பதிகின்ற
பரமே
நலமே விளைகின்ற விழைகின்ற
பலமே
புலமே மறைகின்ற மகிழ்கின்ற
நிலமே
குலமே பொழிகின்ற பொருள்கின்ற
தலமே
கணமே கனிகின்ற களிக்கின்ற
மனமே
குணமே உயர்கின்ற உறைகின்ற
வனமே
மனமே திகழ்கின்ற திரள்கின்ற
ஞான மோன வனமே
யுகமே முடிகின்ற முடிக்கின்ற அருளே
இகபரமே
அருள்கின்ற திருவே குருவே
இறைவே
என்இறைவே உகந்தப்பதியமர்
குமரே
போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தல மகிமை.

சோதிமயமான தட்சண கைலாயமெனும் உட்பொருள் விளங்க
சத்திய தர்மவடிவுடனே ஓங்கார தத்துவ திருநாமமிலங்க
அன்புநிறை ஒளியாகி அனைத்தும் காக்கும் கருணை கொண்டிலங்க
தீவினை போக்கி நல்வினை கூட்டி முக்திக்கு வழிகாட்டும் பெருமான்
அனைத்து உயிருக்கும் உயிராகி உற்றதுணையாகி நின்றிலங்கும்
உகந்தையெனும் கந்தன் திருப்பதியே.

தென்னகம் பொழிய விண்ணகம் மகிழ
மன்னகம் போற்ற மறைநான்கும் ஏற்ற
திருவருள் கூட்ட அறநெறி காட்டி
அமரரும் அகிலரும் துதிக்க திருமுகம் துலங்க
அறுமுகம் அருள பெரும் பொருள் கொண்டு
அரும் பொருள் காட்டும் கந்தன் கறைந்துறைகின்ற
உகந்தையெனும் அருட்பதியே.

மலைமகளின் குமரனவன்
கந்தன்
திருமகளின் மருகனவன்
குமரன்
கலைமகளின் துணைவனுக்கே குருதேவன்
பெருமான்
அலைமகளும் மலைமகளும் மகிமையுற
வருளி
திருமுருகன் கந்தனவன் உவந்து
வந்து
உகந்தைப் பதி கொண்டனனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிண்கிணி நடன ஒலிஒலிக்கும் இனிய
நாத ஒலிஓசையெழ அழகு திருமுருகன் அழகினிய
தண்டையது குலுங்க ஆடிவரும் ஓடிவரும் உகந்தை மலைமீது
மோதி வரும் அருள் ஒளியும் ஞான ஒளிபாய
நடனமிடும் கந்தன் கருணை ஒளி துலங்கும்
இருளுமிவ பந்தம் இலகு தனில் மறைய
தெளிந்த திருஞானம் மிகுந்து வரும் நிறைவோடு
கருதரிய தவஞானப்பேறும் உறைந்திருக்கும்
உகந்தையது உவந்தளிக்கும் இன்ப மய ஜோதியது
இனிதிருக்கும் தலமெனவே இலங்குகின்ற உகந்து நின்ற
கருணைமயிலேறும் அருளும் திருவேலும் அளித்தருளும் வரமருளும்
ஒப்பிலா மாமணி சக்தி தலமாகி நிலவியருள் சத்தியம் விளங்க வரும்
சுத்த சிவமாகி ஓங்கி நிறைந்திருக்கும் அரிய தவஞானம் அருளுகின்ற
ஆதி தலமாகி ஞான மயில் வாகன குருநாதர் முனி போற்றும்
உகந்தை மலையதனில் தசகண்ட விரல் மிண்ட நிறையண்ட
இறைகண்ட இராவணப்பதியுற்ற தெய்வப்பதியாகி திகழவே
முத்தையன் முனிதவமுற்று இந்நாளில் நிறைகாண இறை காண
திருவுற்ற பதியே விஷ்ணுகிரி முனிகண்ட தலமாக்கியருள்
கொண்ட பெருமான் காசிவிஸ்வமா மகரிஷி தவமுற்று
ஒளிகாண அருள் கொண்ட பதியே மும்மூர்த்தி தலமாக்கி
அட்டதிக்கரும் தலம் காண எட்டுத்திக்கும் செப்புக்
கொடியுற்று உகந்தை மலை உச்சிதனில் அருள் காண
தங்கக் கொடியுற்று தவஞானமுயர் சிறைமீண்ட
செல்வியவதாரமருள் ஆடகசவுந்தரி ரகுவம்ச மகாராணி
குலக்குமரன் திருப்பணி நேர்பண்ணும் நிறை கண்ட தலமாகியே
நின்றருள அன்று திருவுற்று அவுணர் குலம்மால தேவர் குலம் வாழவே
மங்கை - வள்ளி வனவேடர் குலக்கொடியின் துணையுற்று மகிழவே
ஒப்பிலா வேல் கொண்டு துலங்கவரும் அருள் சக்தி நிறைவுற்ற
திருவுற்ற பதியாக்கி அன்பர் வினை போக்கியே இருளும் வினை நீக்கியே
ஞானகுருவாகவே ஞானமுயர் தவஞானப் பேறு வழியூட்டியே அருள்
மகிமை நிறைவுற்ற பதிகொண்ட உகந்தைப்பதியுற்ற பெருமானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில்லூறு வண்டினங்கள் ஒலிக்கின்ற
வனமோ
அழகினிய மொழி பேசும் கிளிபேசும்
வனமோ
பறவையினம் ஒலிகேட்கும்
வனமோ
சரணாலயம் உறைகின்ற அனைத்
துயிரின் அன்பு
மொழி அதுகேட்கும் இன்ப
வனமோ
அருள்மொழிபேசும் தவசீலர் நிறைகின்ற
வனமோ
அலைகடலும் பெருஞ்சோலை சூழ்கின்ற
பசுஞ்சோலை நிறைகின்ற
குன்றுகளும் இருக்கின்ற வனமோ
அருள் காட்டி
இருள் நீக்கி ஞான ஒளி காட்டுகின்ற
ஆனந்த வனமோ
அப்பன் கருணை அலைவீசி நீல் கடலின்
அலைவீசும் வனமோ
எங்கள் இருள் மாற வினை மாற
அருள்வீசும் வனமோ
உகந்தைப்பதி எங்கள் நிறை செல்வம்
பொழிகின்ற
அருட்செல்வன் உறைகின்ற
வனமோ

குகபர கைலாயம் இகபரதனை மேவும்
அருளாலயம்
திருவருள் தனையாளும் கந்தன் அருள் திகழ்
தனை மேவும் கருணாலயம்
ஐயன் அழகன் முருகன் குருவருள் இறை
யருள் தனை மேவும்
அடியவர் துணை மேவி நிறையருள்
தரமேவும் சரணாலயம்
திருவருள் தனை மேவி இறை சுகம் நிறைந்தோடும்
சுகவாலயம்
தவபர துதிபர கைலாயம் உகந்தை மலை மிசை
அடியவர் மனமிசை
நிலமிசை அருளொளி மதுவென இனிதென
திருவொளி திகழ்ந்திடும் கமலாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்த கைலாயம் அமரநாதம்
தேவர்கள்
சுகந்த லோகம் மூவர்களுமமர்ந்த
பதீதம்
குமரன் அருள் கமல மலர் பாதம் திகழவே
விளங்குகுக உகந்தமலை வாரமே
ஆரமென தேன் இனிய மதுர மொழியே
பரவி வர மனமுருக பெருகி
வரும் அருளின் ஒளி திருவின் ஒளி
துலங்கியது திகழவே
உகந்தமலை மீதில் வரமருளி
நின்ற பெருமாளே
அன்பணைய அருளணைய கருணையது
பெருகும் ஒளி திகழ வரும் குமரோனே
குறைய மகன் நிறைவு பெற வருமகனும்
நின் துணையும் பெற
நின் திருப்பாதார விந்தமது தொழவருளும்
கருணையது பெருகிவர
அருளமுதம் பொழிய நின்ற பெருமாளே
வேலணைய மயிலுமனைய
மும் மூர்த்தி திருவருளுமனைய வேழமுகன்
துணையனைய காக்கும் கருணை
மழை பொழியவே உகந்த மலை மீதுதித்த
பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றாத அருளின்ப ஒளிவீசும் அருணோதயம் உகந்தன்
கருணை மங்காத சுடர்மேவும் மங்கள சந்திரோதயம்
குமரன் துணைவந்து எமையாளும் உகந்தாலயம் ஐயன்
அருள் ஓங்கி துயர்மங்கி இதம் பொங்கும் சுகவாலயம்
கந்தன் நினைவெங்கும் இன்ப சுகம் தந்து இனிய நிலை காணும்
அருள் வள்ளல் புகழ் மணக்கும் திருவாலயம்
பக்தர் மணங்கொண்ட அப்பன் அருள் கண்ட ஓம் என்னும்
நாமத்தின் ஒலிதுலங்கும் சுவாமி தலங்கண்ட கருணாலயம்
திரிபுர சுந்தரன் திருஜோதி மங்கள வளங்கொண்டு
அருளும் கிரிராஜன் ஆடல் நிலைகொண்ட சரணாலயம்
பங்கய தங்கமலர் பாதன் இனிதிருக்கும் சுந்தரவருலாயம்
சக்திவேலருள பச்சை மயிலாட ஆனந்த
ஒளியாகி வனமங்கை துணைகொண்ட உகந்தை மலையாலயம்
தங்க முருகன் அருள் நிலைக்கும் வங்க முருகன்
கருணை அலை துணைநிலைக்கும் மங்கை வள்ளி அருள் பொங்கும்
சீலன் குணாளன் அருளும் மலையும் பதியாக்கியே
காட்சி தந்தருளும் வங்கம் ஒலிக்கின்ற சங்கம் மலிகின்ற
தேவுக்கள் நிறைகின்ற மூவுக்கள் உறைகின்ற
நித்திய சத்திய ஒளிமேவும் ஞானஒளியாலயம் ஞான கணபதி துணை கொண்ட
வனமங்கை மணங்கொண்ட உகந்தை பதியுற்ற
கந்தப்பதிமேவும் பெருமான் உறைகின்ற குமராலயம்

கோல மயிலுண்டு இனிய குயிலுண்டு
மதுர மொழி பேசும் அழகு கிளியும் உண்டு
கந்தா நின்பதியில் விளையாடும் புள்ளி
மானுண்டு கொம்பீர நடை கொண்ட
உயர்ந்த களிறுண்டு பாயும் குரங்குண்டு
கரடி புலி தானுண்டு கட்செவி
யுமுண்டு அப்பன் உகந்தை மலைதனில்
குமரனருள் சுனைகளுண்டு
அருட் சக்தி ஒளி பாயும் ஓங்கார சக்தி
வேலுண்டு அம்மை வள்ளி
அருள் பொங்கும் அருட் தலமுமுண்டு கருணை
அலைபாயும் கடலுண்டு ஓங்கார நாத
ஒலியுமுண்டு ரீங்கார நாதமொலிக்கின்ற
வண்டினங்கள், பச்சினங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய ஒலி ஒலிக்கின்ற பச்சைவனச் சோலையும்
சூழவுண்டு அழகினிய நீரோடை
சூழ அணித்தாக குளமுமுண்டு வாவியுமுண்டு
உகந்தா நின்மகிமை உறைகின்ற
தோணி மலையுண்டு அம்மன் அருட்பெருமை பொழிகின்ற
மஞ்சள் மலையுமுண்டு பொங்கும் மலையுமுண்டு
அப்பன் ஆனந்த உறைவிடத்தின் புகலிடத்தின்
அருள் வீசும் ஒளிவீசும்
ஐயன் அழகு மயிலுமுண்டு அரிய தவஞானச் சுடர் வீசும்
சக்தி வேல் கொண்ட
சரவணாலயம் பொழிகின்ற கருணை மழையுமுண்டு
நிறைஞான தத்துவத்தின்
உட்பொருளும் மெய்ப்பொருளும் துலங்க
வரும் சங்கொலியும்
மணிஒலியும் ஓசை எழ கடலோசை தானும்
சேர்ந்தெழவே விண்ணதிர
மண்ணதிர மறைபோற்றும் அடியவர்கள் தம்
இனிய குரலோசை தானும் எழவே
பக்திபரவசத்தில் முருகன் அருள்வெள்ளம் தானும் எழவே
தங்கமயிலாட உகந்தை
மலைதன்னில் கிண்கிணி தண்டைகள் அசைந்தாடி
மோதியெழும் தேன் இனிய
நாதஒலி ஈரேழு புவனமெழவே துள்ளி எழும் இன்ப
அன்பதனில் தெளிகின்ற நடனமிடும்
நம் இறைவன் நிறைசூழ திரைமோத
முப்பத்து முக்கோடி தேவர்படை ஏற்ற ஐயன்
தவஞானமுயர் படையும் போற்றி நிற்கவே
தேவசேனாதிபதி வள்ளிவன மங்கை மகிழவே
உகந்தைப்பதி ஆளவாழவே உகந்தை மலைதனையே
உவந்து கொண்ட பெருமான்
உறைகின்ற அருள்கின்ற பதியே போற்றி போற்றி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதவிழி அமுதம் கீத இனி அமுதம்
தேவு தரும் நல்லமுதம்
ஓங்கார நாதஒலி அமுதம் தேனும் தினையுவந்த
தேவி அருளமுதம்
வேலின் துணை அமுதம் ஆடுமயிலின்
அழகமுதம்
ஜோதி ஒளி அமுதம் உகந்த மலையமுதம்
கந்தன் அருளமுதம்
நீலன் மகன் வேலன் கருணை ஒளி அமுதம்
ஆதி மூலப் பொருளமுதம்
உறைந்து நிறைந்த பதி அமுதம்
கந்தன் பெருமை தரும்
அழகன் கருணை விழி ஒளிவீசும் உகந்தைப்
பதியமுதமே போற்றி போற்றி.

அருள்மேவும் சங்கொலியும் திருமேவும் திருமங்கள
வங்க அலைகடலும்
மோதவரும் அலைஒலியும் இருள்போக்கும் மருள்போக்கும்
மத்தளமுமுழங்க வரும்
உகந்தமலை உச்சிமணி திருக்கோவில் திருமணியும்
அருள்முருகன் திருஉறவை அருள்
நிறைவை ஒருநினைவை ஊட்டவரும் இனிய ஒலி
ஓங்க வரும்
திருமுருகன் பூசை ஒலி தீபஒளி வீசவே ஆசைஅலை பாசவலை
ஒடுங்கவரும்
கீத இனிய ஒலி வேதமங்கள நாதஒலி பேசவருமே
திரை பேசும் அருள்
பேசும் பரம்பொருளின் அருள்நினைவில் அருள்ஜோதி
கருணை ஒளி அன்பர்தம் கருத்ததனில்
மோதவரும் ஐம்புலனும் அடங்கவே மெய்ப்புலனும்
ஒடுங்கவே
வாடுமுகமொன்றில்லை ஆடும்மனமொன்றில்லை
ஓங்கார ரீங்கார சிங்கார
திருக்குமரன் உகந்தை அருள் முருகன் திருமுருகன்
திருவடியின் திருஒளியிலே
அருள் ஒளியிலே அருள்நிறை மொழியிலே திருவழகிலே
நினைந்தே உதிக்க வரும்
பேரின்ப இன்பநிலையே தேனே அமுதமென இனிய நிலை
நிலைத்திருக்கும் ஆனந்த நிலையே
உகந்தை அருட்பதியின் மோனகுருஞானகுரு
திருவருளும் குருவருளும் நினைந்தே
மகிழவரும் ஆனந்த சண்முக திருமுருகன் குருபரதிருவரன்
மயூரவரனே அருளவரும்
திருக்கருணையருள் பொழிந்திருக்கும் ஓங்காரநாத சரணாலயமே
போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவருள் குருவருள் நிலை

வனமுறை வேடர் குலமது திகழ

தவமுறை வேடர் குலமது வாழ

வினையுறை வேடர் குலமது அழிய

கணம் நினை வேடர்

தினம் நினை வேடர் திருவினை வேடர்

திருவினை பெறுக

தீவினை அழிய அருள் நினை வேடர்

கருணையே பெருக

வருமொரு திரு வேடன் உகந்தை

மலையது திகழ

மனமுறை வேடன் வென மதுவாக

ஒருமனதாக திருமனதாக வரமருளிய

பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியமுதமருள துதியமுதம்
தனிலே
கமலமுதமினைய மனவமுதமொடுங்க
அருளமுத மருள
திரை கடலின் ஒலியில் கருணை
ஒளிபாய
வனமுருகன் வருவான் உகந்தை மலை
தனிலே
திருவருளும் தருவான் குருவருளும்
தருவான்
துதிபாடுமடியார் குறையேதுமோட
வரமருள வருவான்
வனமங்கை மகிழும் அருட்கமலம்
குளிர
அழகு திருமுருகன் அவனியது
காண
அகத்தியரும் நாட அருணகிரி
பாட
அநந்தகோடி தவ சீலருமே
துதிக்க
தேவாதி தேவ கோடிகளுமே
பணிய
பக்த கோடிகளும் முக்கி கோடிகளும்
ஏற்ற
மயிலேறு குகனே மனமாயை
மாய்க்க
வேல் ஏந்தும் பெருமான்
உகந்தை மலை தனிலே
உலகாள வருவான் கந்தன்
கருணை மழை பொழிவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலகாலம் வாழந்தாலும் நெடுங்காலம் வாழ்ந்தாலும்
நீ இன்றி வேறுதுணையில்லை எனக்கு
ஒரு கணமும் வாழ நின் அருளின்றி உயிர் வாழ
இவ்வுலகில் எவ்வுலகில் எவராலும் எதனாலும்
முடியுமா? உகந்தைத் திருக்குமரா ஒருசதமேனும் இல்லாத
ஏழைதன்னும் உயிர்வாழ முருகா
பலகோடி பணம் சேர்த்த தனவந்தன் மால இதில்
உண்டு நின் திருவிளையாடல்
உலகோருக்கொரு பாடமா? கருணை விழி அழகா
காத்தருளும் உகந்தா
நோய் என்றும் பேய் என்றும் நொடிப் பொழுதில்
விபத்தாகி அவதியுறும் வேளை
விதிஎன்றும் வினை என்றும் சரி என்றும் பிழை என்றும்
கூறி குறைகண்டும் நிறை
கண்டும் காலம் கடத்துகின்ற மாந்தர் நின்
திருவருளை உணராத
புரியாத மதியாத மதிகெட்ட மாந்தர்படும்
பாட்டை பகர திருமுருகா
காடுதனில் சரணாலயம் கொண்ட குமரவடிவே
பலகோடி நாவிருந்தும்
பலகோடி வாயிருந்தும் கண்டபலன் என்ன?
கொண்ட முடிவென்ன?
கந்தன் திருவிளையாடல் காணாத பேருக்கு
உணராத பேருக்கு
காணுகின்ற காலன் திருவிளையாடலொரு
பாடமா? கந்தா
அப்போதும் உணராமல் இப்போதும் உணராமல்
எப்போதும் உணராமல்
ஆடுகின்ற ஆட்டுகின்ற மும்மலரின் விளையாட்டிலே
அகப்பட்டு மயல் கொள்ளவொரு
பாடமா? ஆனாலும் துயருக்கும் வேதனைக்கும்
எல்லையொன்று இல்லையோ ஐயா
வகை தொகையொன்றில்லையோ
ஐயா இதுதானா உலகியல்பு இறைவா?
இதுவும் நீ காட்டும் ஒரு திருவிளையாடலா அல்ல
உலகோருக்கொரு பாடமா? உகந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறி கொண்ட உலகும் நெறிகொண்ட
உலகும் மருள்கொண்ட
உலகும் அருள்கொண்ட உலகுமென
பிரித்தாளும் நின் திருவிளையாடலழகின்
முடிவென்ன முருகா? முறையற்ற முறைகெட்ட
நிறையற்ற நிலைகெட்ட மாந்தர்க்கு
ஒரு பாடமா? முறையுற்ற முறைகொண்ட
நிறையுற்ற நிலை கொண்ட மாந்தர்க்கு
ஒரு பாடமா? வள்ளி வளநாட்டில் தலம்
கண்ட அருள் கொண்ட
இறைவா தெய்வ நீதிபதிராஜனே உகந்த கிரிராஜனே
அந்நாளில் இந்நாளில் எந்நாளில்
நின்துணைவந்து எனைக்காக்க கருணை உருவாகி
வந்து அருளின்
திருவாகி நின்று ஞான குருவாகி
வந்து சத்திய மறைகாண நித்தியத் துறைகாண
மங்கள முனிவீரா நின்பதம்
சரணம் ஐயா எந்தனுக்கருள்புரிந்து காத்தருள
வேணும் கருணை வடிவேலே
உகந்தை மலையானே போற்றி போற்றி

அகந்தை மாற்றவே திருவே உகந்தை
உற்ற இறைவே
எனை ஆள இப்புவி வாழ வினை மால
இருள் மாற வந்த குருவே
அருவே உருவே அருவுருவே கருவிலே
வினை முளைக்க
உருவிலே வினையழிக்க இருளிலே
உனை நினைக்க
அருளிலே எனை வளர்த்த பெருமாளே
விரைவிலே
உன் உறவளித்து விரைவிலே என்
திரையழித்து என்உயிரிலே
நின் பொருளிலே நிறையளித்து
கருணையே உறவளிக்க
இப்புவியிலே அருளளிக்க
அருள்வாயே
உகந்தை கிரி தனிலுற்ற மயில் வீரா
கந்தப் பதிமேவும் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீறாப் பெருநன் ஆறாவருணனருள்கின்ற
தீராப் பெருமைதனைக் கொண்ட
வீராக் குன்றனருள் மலர வீராப் பெருமைதனை
வீணருமறியாத முருகனருளை
தேனாய் இனிக்கும் கந்தன் பெருமை அன்பரும்
உம்பருமறிகின்ற குமரனருளை
வீணாய் அலைகின்ற தீரா வினையாளருமறியாத
ஐயனருளை
பேயாய் அலைகின்ற ஆசை அலை வீழ்வோருமறியாத
கந்தன் அருளை
நாயாய் நின் அருள்தேடி அலைகின்ற அடியவனு
மறிகின்ற வேலனருளை
சேயாய் நின்அருள் வேண்டி கதறும் எனை தாயாய்
வந்து காத்தருளும் அம்மனருள் புரிய
உகந்தைப் பதியெங்கும் அன்பரும் உம்பரும் போற்ற
வரும் திருவருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவருள் நிலை

உகந்தானை என் உள்நின்றுணர்த்தியே பகர்வானை
என்அகத்தே அமர்ந்தானை என்மதியில் என்நினைவில்
அருள்நினைவூட்டி அமர்ந்தானை
ஓங்காரநாத ஒலிக்கு ஒலியானை சரிநீதி பொழிவானை
ஜீவநாத சர்வநாத ஒலிக்கு ஒலியானை
காக்கவரும் கருணை ஒளியானை வேதஒலிக்கு ஒலியானை
எனை ஆட்கொண்ட சோதியனை
மாதினிய மங்கை யிருவரைக் கொண்டானை
நீலமயிலேறும் நித்திய ஒளியானை
சக்திவேல் ஏந்தும் சத்திய ஒளியானை
உகந்தமலை கொண்டானை உலகாணை விடுவானை
உலகாள உயிர்வாழ விடுவானை எக்கணமும்
எந்நாளும் நலம் யாவும் தருவானை
உகந்தனை என்நினைவில் என்நாவில் உறைவானை
தென்னகத்தே திருஒளியும் என்அகத்தே அருள்ஒளியும்
தந்தானை எக்கணமும் எந்நாளும் மறவேனே...



பொது சன நூலகம் யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திய ஒளி கண்டேன் நித்திய
மதி கண்டேன்
அன்று கந்தன் அருள் தந்த திருநாளிலே
எந்தன் பெருநாளிலே
தட்டிவிட்டான் எந்தன் மனக்கதவை
இன்று திறந்துவிட்டான்
எந்தன் மனக்கண்ணை எந்தன் குருநாதன்
உகந்தை தலம் மேவும் அருள் நாதன்
சத்திய வழிகாட்டி நித்திய துணைகாட்டி
முக்திக்கு நிலைகாட்டி
பக்திக்கு உயிரூட்டி உகந்தை அருள்மேவும்
அப்பன் கந்தன்
என்னிலே கருணையருள் தனை நிலைநாட்டினான்
திருமுருகா
அருள் முருகா உகந்தை வனவேலன்
திருவேலன் பதம் நாடினேன்
நிதம் நாடினேன் சதம்துணை நாடினேன்
உகந்தைப் பதிவாழும் கந்த கிரிநாதனே.

திங்கள் முகமும் திருவனைய சோதியும்
மங்களவாணன்
மணிமுடி ஒளியும் மயங்கியே திளைத்திடும்
மாண்புறு இன்புறு
தேஜசும்கொண்ட குமர வதனா ஆனந்த
மதனா
அருண ஒளிமதியின் ஒளி மிகைத்திடவே
கருணைஒளி
அருளின் ஒளிசூழவே அழகு திருநீல மயிலோடு
அற்புத அன்பின் ஒளி
வீசுமதுவேலோடு திகழ தண்டைகள் ஒலி
பெருகவே கிண்கிணி கீத இனிய
ஒலிதொடரவே ஆனந்த அழகு மகள்
மாதினிய வேடமகள் மகிழவே
வேங்கை மரமெனவே நின்ற கருணை மகன்
கந்தன் அருணமெனவே
ஒளிவீசி அருள் பேசவே தருணமது கண்டேன்
உகந்தன் அருள் கிரணமது கண்டேன்
வருணமெனக் கருணையது பொழிய நின்ற
பேரொளியே அழகு திரு உகந்தை மலை
அருளும் மலை தனிலே அருளமுதம் பொழிய நின்ற
பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளமலை போல வரும் பச்சை
மயில் மீதேறிநிற்க
கண்ணொளி பறக்க வரும் மின்னொளி
போல் இருக்கும் அருள் ஒளி
வீசி நிற்கும் இன்பமய ஜோதியே
கருணை ஒளி வீசுகின்ற
அன்பர் வினை நீக்கவென்று அருள்
ஒளியும் வீசி நின்று
அருளும் மலை உகந்தை மலைதனிலே
சக்தி
வேலாயுதம் தனைக் கொண்ட பெருமாளே
சந்தமும்
அன்பின் நிலை கூட்டியே அருளின் நிலை
ஊட்டியே
என்றும் இன்ப நிலை அருளியே திகழ
நின்ற பெருமாளே
அடியவர் குறைதீரவே ஆனந்த நிலை
பெருகவே
மோனநிலை கூட்டியே ஞான ஒளி வீசியே
அன்று
உகந்தை மலை மீதில் நின்ற பெருமாளே.

ஆனந்த மோன குருவே
அன்பின் அவதாரமே
இன்பமய ஜோதியே உகந்தை மலை ஜோதியே
சுகானந்தத் திருவே அருள்வாயே
அறம் வணங்கும் வனமங்கை மணவாளனே
என் உளம் வணங்கும்
என் உயிர் வணங்கும் கணம் வணங்கும்
தினம் வணங்கும் உனை
நின்துணை தந்து எனை ஆள வருவாயே
அருள்வாயே
புகழ் மணக்கும் நின் அருள்மணக்கும்
பொருள் மணக்கும்
திருவருளே எனைக் காக்கும் கருணை
வடிவே கந்தப்பதி
மேவும் உகந்தைப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிலமேவும் தலமாகி துகிலமோட்டி
விளையாடி
முகிழமாய்க்கும் ஒளியாகி இருளுமோட்டி
வினையோட்டி
விகாரம் நீக்கும் குணமாகி துயரும் போக்கி
துணைகாட்டி
கமலம் நோக்கும் வடிவாகி கருணை காட்டி
அருளூமூட்டி
திகழவோங்கும் முகமாகி நினைவூட்டி
திடமையூட்டி
மகிழவோங்கும் இனியபதியாகி சபலம் நீக்கி
குறையோட்டி உறவாடி
நெகிழவோங்கும் கருணை வடிவாகி அபயம் காட்டி
மரணபயமுமோட்டி
இனிமையோடு இன்ப நிலையும் கூட்டி அருமையோடு
ஆனந்த நிலையுமூட்டி
தனிமையோடு வறுமையுற்ற பெருமையற்ற சேயாய்
தவித்தெனை தாயாய் வந்து
காத்தெனையாட் கொண்ட கந்தகிரிமலையதனில்
அருளிநின்ற
உகந்தைப் பதியுற்ற கந்தப்பெருமாளே.

கணமுருக தினமுருக மனமுருக
வனமுருகன் திருவேலன்
வரமருள கணமருள தினமருள
திருவருளும் அருள்மேவும்
குருவருளும் உருகியது பெருகியது
வெள்ளமென பரவியது
சூழ்ந்துவர வினைமேவும் கொடுமிருளும்
உருண்டோட
விரைந்தோட பறந்தோட கலைந்தோட
மறைந்தோட
மான் ஆட மயிலாட குயில்பாட
வேலோடு சலங்கை ஒலி
மோத நீல் கடலின் அலைமோத கந்தன்
அருள் கருணை அலைமோத
ஜோதி மங்களமாகியன்று உகந்தை மலை மீதில்
நின்ற பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடும் திருவருளே பாடும் பெரும் புகழின்
அரும்பொருளே
பரம் பொருளே நாடும் குருவருளே
வீடு தரும் நிறைபொருளே
அருள் மணக்கும் திருப்புகழின் பேரருளே
வணங்கும் இறையருளே
யான் வேண்டும் திருவருளே யான் வேண்டும்
குருவருளே யான் வேண்டும்
நிறை பொருளே மீண்டும் மீண்டும யான்
வேண்டும் இறையருளை
வாடும் ஏழை எனக்கருளே போற்றும்
திருவருளே
ஏற்றும் அரும் பொருளே பரம்பொருளே
நாடும் பேரருளே
காக்கும் கருணையருளே மறைக்கும் பேரிருளை
நீக்கும் உன்னருளே
நோக்கும் அருட்கடலே எனை ஆட்டும்
எனைவாட்டும் வினை இருளை மாற்றவரும்
கருணை பெருங்கடலே உகந்தை மலையுற்ற
அருளின் திருவிளக்கே
நிறை அன்பில் இறை அன்பர் தேடும் திருவருளே
ஒளிவீசும் ஞான மணிவிளக்கே
உகந்தப்பதி மேவும் கந்தப்பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியும் அந்தமும் ஆனாதியும்
நீயே கந்தா உகந்தா
ஆதிமுதல்வன் சோதி மங்களவாணனும்
நீயே
நீதி துரந்தர புரந்தர ஞான துரந்தர
நீதியும் நீயே
வேத முதல்வரும் நீதி முதல்வரும்
போற்றும் தயாளனும் நீயே
உலகம் உணர்ந்தவர் உலகம்
துறந்தவர்
போற்றும் அருட்பெருங் கடலும்
நீயே
காலம் உணர்ந்தவர் கலையும்
உணர்ந்தவர்
போற்றும் கருணைப் பெருங்கடலும்
நீயே
அறமும் உணர்ந்தவர் அருளும்
உணர்ந்தவர்
தவமும் உணர்ந்தவர் போற்றும்
தயாளனும் நீயே
உகந்தையமர்ந்திருக்கும் திருவும்
நீயே
குருவும் நீயே இறையும் நீயே
உகந்த கிரிதனிலுற்ற மயில் வீரா
கந்தப் பதிமேவும் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருண ஒளி நிலமிசையின் ஜலம் தன்னை
முகிலுருவில் எடுத்திடவே
அழுக்கு நீரெனினும் உப்பு நீரெனினும்
எந்த நீரெனினும்
அருண ஒளி நிலமிசையின் ஜலம் தன்னை
ஆவி நிலை எடுத்திடவே
எந்த நீரெனினும் மாசு நீரெனினும்
தூசு நீரெனினும்
அருண ஒளி நிலமிசையின் ஜலம் தன்னை
சுத்த நிலை எடுத்திடவே
எவ்வகை நீரெனினும் அவ்வகை நீரெனினும்
சுத்த நிலை அடைந்திடவே
அருண ஒளி நிலமிசையின் ஜலம் தன்னை
முகிலுருவில் எடுத்திடவே
மழையுருவில் பொழிந்திடவே கருணையது
பொழிந்தருளும்
உந்தன் அருள் தன்னை இறைவா நீ உந்தன்
அருள் ஒளியதனை வீசி
என்னில் கருணையது பொழிந்தருள்வாய்
உகந்தை மலை வேலவனே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபூத மலநிலை

ஆலமென வருகின்ற கொடுங்காமம்
எனைமெல்லும்
எனைக்கொல்லும் நீலமென வருகின்ற
மும்மலத்தின் சிகரமென
திகழுகின்ற ஆணவத்தின் சோதனையோ
வேதனையோ
உடன்பிறந்தே மறைந்திருந்தே எனை
உடன் மெல்லும்
உடன்கொல்லும் கோலமென வருகின்ற
ஆசைவழி பூசையது காண
தாவியே வந்தெனை நாசமது செய்யும்
ஸ்ரீவள்ளி தேவி கரம் பற்றும்
தேவகுஞ்சரி துணை காணும் ஸ்ரீமுருகா
இதுவெல்லாம்
நின்வேல் வெல்லும் திருமுருகா நின்
கருணையருள் வெல்லும்
நீலமயில் மீதேறி வருகின்ற ஸ்ரீகாந்தனே
காத்தருள்வாயே
உகந்தனே கந்தனே உகந்தை துறையூர்
கண்டவரனே மயூரவரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளமெனும் கோயில் உறைந்திட்ட
பேரிருளில் ஐங்கொடுநர் புரிகின்ற
தொல்லை எனும் தொழிலை இல்லாதொழிக்கவருள்
இளைய பெருமானே
கருணைத் திருவுருவே எல்லையில்லா திருவே தொல்லை
அறும் ஆனந்தப் பொருளே
ஞானத் திருவருளே ஒளிக்கும் ஒளியான மோனத்
தவமுனிவர் அறியும் அறிவே
வானவரும் தரணியரும் போற்றித் துதிக்க வரும்
அன்பினுறவே இன்பமய ஜோதியே
ஆறுமுகமாகி அமரர் தொழுதேத்த குமரவடிவேலுடனே
ஒருமுகமாகி நின்ற பெருமாளே
வினையின் அருமருந்தாகி ஆளும் திருவருளே மும்மலரையும்
பஞ்ச பூதலரையும் பறந்தோட்டும் பேரருளே
காரிருளை மாற்றியருள் பேரொளியே விட்டிலரும்
பற்றிலரும் தேடும் அருள் ஒளியே
ஓங்கார தத்துவ திருக்கோலம் கொண்டருளும் ஞான கணபதி
துணைகொண்ட வனமங்கை மணங்கொண்ட பெருமாளே
ஆங்கார மழிக்கவருளும் நாமமருளும் தத்துவக் கோலவடிவே
தென்திசை வென்றிடும்
எண்திசை மன்றிடும் அருள் திசைகாட்டி இருள் திசை
மாற்றி எமன்வரும்
திசைபதியாக்கி அடியவரின் ஒருபதியாக அருள் ஒளிவீசும்
உகந்தைப் பதியமர் கந்தப்பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பொறி கலங்கி விந்து விட்டு
நொந்து கெட்டு புத்தி கெட்டு
பந்த பாசம் தலைக்கேறி தவறி விழுந்து
தனம் பொருள் தகைமையிழந்து
பசுமையுற்று உதவியுமற்று உதறியும்
விட்டு உலகம் பழிக்க
உறவும் இழிக்க உற்றதும் போய்
அனைத்தும் போய்
அவலமுமாகி கேவலமுமாகி கவலையுமுற்று
சபலமுமுற்று
பிணியனுமாகி பித்தனுமாகி தனினுதுமாகி
தவித்திடும் நிலையுமானேன் உகந்த நாதா
கண்டது யாதுமில்லை கொண்டது யாதுமில்லை
உடமை
ஏதுமில்லை ஊனும் எலும்பும் உறுதியுமில்லை
நரையும் திரையும் குறையும்
மறையுமுன்னே தோன்றி விரையும் பின்னே
ஆவியே நினைவில் கொள்மினே
உலகீர் கற்றதும் களவும் பெற்றதும் பிறவும்
பெருமையும் சிறுமையும்
உண்டதுயாவும் நிண்டதுயாவும்
பூவும் பொட்டும் புளுகும்
புகழும் ஆட்டமும் ஓட்டமும் வாட்டமும்
தேட்டமும் போட்டதும்
எடுத்ததும் செய்ததும் யாவும் கொடுத்தது யாவும்
வளர்ந்தது யாவும் வரைந்தது
யாவும் உறைந்தது யாவும் உணர்ந்தது இன்று இறைவா
புரிந்தது நன்றது உற்றதும்
சதம் இல்லை பெற்றதும் சதம் இல்லை எதுவுமே
எனதில்லை எதுவுமே நிலையில்லை
கொற்றவன் வரும்போது கொடுவினை மகிழவே
பழவினை தொடரவே முருகா
நம்வினை சூழ செய்வினை பற்ற அதுவே
உற்றமும் சுற்றமும் உலகமும்
ஆக நிழலென தொடர விகாரமே பற்றிட
துயரமே ஓங்கிட துன்பமே
நிறைந்திட கவலையே நிறைந்திட வேதனை சோதனையே
சூழ்ந்திடும் இதயமே சிதறிடும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதறிடும் மனமே குழறிடும் உழறிடும் இதுவே
சுழன்றிடும் அதுவே
உறைந்திடும் தொடர்ந்திடும் எதுவும் உணரா
நிலையது வந்திடும் எமனும்
வருகின்ற வேளையும் வந்திடுமே இருளுமே சூழ்ந்திடுமே
மூவர் உதவிட இருவர் சேர்ந்திட
அதுவே தொடர்ந்திட எதுவும் வந்தில எதுவும்
கண்டில மதியும் வந்தில.
கதியும் தந்தில களவும் கசடும் பெருகிட
உருகிட நிறைந்ததென்
ஆவியே பதறிட பரிதவித்திட சூதுவாது என்ன
செய்யும் சூழ்ச்சி என்ன
செய்யும் புகழ்ச்சி என்ன செய்யும் புலம்பும் உற்றது
சுற்றது என்ன செய்யும்
தேடிய நண்பர் அன்பர் என்ன செய்யும் மூவரே
உற்ற நண்பரும் அன்பரும்
மாகிட அவையே உதவிடுமே அவையே தொடர்ந்திடுமே
அவையே நிலைத்திடுமே இவையே
அழித்திடுமே இறைவனின் வழியையே அறிமினே
விரைமினே செயல்மினே இக்கணமே
அக்கணமே என்றிடவே எமனும் வந்திடவே
யாதும் வந்திடாதுனக்கு
இன்றே இறையருள் தேடிடவே திருவருள் பெருக்கிடவே
குருவருள் பெற்றிடவே விரைமினே
நாடியே உகந்தைப் பதிவாழ் முருகன் துணையினை
பெற்றிடவே சகலநலனும் நிலைத்திடுமே
பெருக்கிடுமே உணர்ந்திடும் யாக்கை
இன்பநிலையதுகாண
சுகம்பெறவே சத்தியம் நிலைபெற்றிடவே
நித்தியம் போற்றிடவே நித்தமும் ஏற்றிடவே
நிமலன்குமரன் திருவடி தன்னையே
உன்னையே உலகம் போற்றிடுமே ஏற்றிடுமே
என்றுமே நித்தியசுகமுமே நிறைந்து
வந்திடுமே தந்திடுமே உகந்தை முருகன்
திருவருளாளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினைவிளக்க நிலை

ஜெகமதிலே நீலமயில் மீதே நின்ற மதியே
வடிவாக உகந்தை மலைமீதே
கருணை வடிவாக அருளும் மலைமீதே ஸ்ரீவள்ளி
தேவி துணையின் வடிவாக
ஒளிவீசும் அருள்பேசும் ஞானவடிவேலே
உகந்த மலையானே
என் அகமதிலே என் உயிர் மீதே வினைமோதவே
விதியின் அலை வீசவே
துன்பக் கடலாகவே இருளும் குறியாகவே மருளும்
திரியாகவே எரிகின்ற வினைதுன்பம் மெனை
சுடுகின்ற விதிநின்று ஞான மதிதந்து இன்ப நிதிதந்து
காத்தருள வேண்டுவனே
துன்ப விதிநொந்து எந்தன் உயிர் வெந்து
உழல்கின்ற பொருள் நின்று
காத்தருள வேண்டுவனே கந்தனே
சிவகாமி செல்வனே
உகந்தைத் துறையூரரனே மயூரவரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடமே கொண்ட வினையே
துணை நிற்க
திடமே இடமே எனவந்த இருளே
மருளே தினம் நிற்க
கணம் நிற்க என் மனமே என் குணமே
அலை நின்று பெருக
என் உயிரே உடலே உருகி வருகும் வேதனையே
பின்நிற்க முன்நிற்க
குடமே உருவெடுத்து கடமே
வினை நிறைந்து
தடமே வினைபடர வினை தொடர
கணமே குணமே
குறிகலைந்து தறிவரைந்து பொறிநுழைந்து
பொறி கலங்கி
நிலை தவிக்க பரிதவிக்க விடாமலெனை
திடமே நீவந்து
கதிதந்து காத்தருளே உகந்த பதிமேவும்
கந்தப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரையேறி மறைகின்ற
மலையேறி
உறைகின்ற கருணை வடிவேலே
உகந்தை மலையானே
என் குறையேறி மிடிகின்ற
என் வினையேறி
துடிக்கின்ற நிலைகாண வருவாய்
என்குறை
காண வருவாய் உகந்தை மலைக்கந்தா
என்வினை
இறக்கி என்குறை இறக்கி என்சுமை
இறக்கி
எனைஆள வருவாய் கருணை
விழி அழகா
கருணை மலை முருகா உகந்த மலை வேலா.

விதி வந்து வினையாட்ட
வினைவந்து
எனைஓட்ட பழிவந்து
எனை மூட்ட
இழிவந்து எனை ஊட்ட
குளி வந்து
எனை மாட்ட கிழிவந்து
எனை வாட்ட
பிணிவந்து எனை நாட்டா
திருக்க இனிவந்து
நீ காத்தருள வேண்டும் திருமுருகா
உகந்தை மலை மீதுற்ற பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்விளக்க நிலை

10766

அருணகஜன் அருள்துணையாள
வருண நிஜன் இருள்மாழ
தருணமென கிரணகாரண அருள்வீச
மரணவலை தளை நீங்க புஜபல
வினை மங்க அங்கவடு தங்காத மங்கிவிடு
பேய்மிடிகள் வாங்க
துங்கக் கரிமுகனாரின் துணைதன்னும் ஓங்கவே
வேலன் அருள் பேசவே
கந்தன் கருணை ஒளி வீசவே கலியுகத்தின்
இருள் வினைகள் மருள்வினைகள்
தங்காது அணுகாது பார்த்தருள காத்தருளவே
நீல மயில்ஏறும்
திருமுருகன் வேலன் துணைபற்ற வினை வற்ற
ஐயன் திருவடி தனை நம்பவே
இப்பவே அன்புநிலை யாண்டு துன்பநிலை மாழவே
உகந்தகிரி அருள்வாழவே
எமை ஆளவந்த குமரன் உண்டே துணை.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடலும் பாடலும் அழகனுக்கே
வேண்டலும் போற்றலும் உகந்தை மலை வேலனுக்கே
அனைத்து சுகம் தரும் நலம்தரும் வளம் தரும் நல்சிந்தைதரும்
அனைத்தும் உகந்தை மலையான் திருவடிக்கே
என்றும் என் கமலமதில் என்றுமே ஐயன் நினைவுண்டு
பதிவுண்டு துதியுண்டு வேறில்லை ஐயா
திகழுண்ட பேருமே வினைகண்ட பேருமே என்றுமே
துறைகொள்ள கரைகொள்ள நினைவோருமே
ஐயன் பாதார விந்தமே ஆதாரமெனப் பற்ற
உகந்தைத்துறை கண்ட நீலகண்டன் குமரன்
உண்டே துணை.

பேசினால் பெருமை வரும்
தேடினால்
செல்வம் வரும் பாடினால்
பலனும் வரும்
நாடவே நன்மை தரும்
துதிக்கவே
வளமும் பெறும் அருளும்
பெறும்
நினைக்கவே அனைத்து நலனும்
வரும்
அனைத்தும் பெறும் அப்பன்
உகந்த மலைக் கந்தனையே
உருகவே இறுகவே மனமுருகவே
முருகனை
நிறையவே பெருகிடும்
உணர்த்திடும்
நிலைத்திடும் கந்தன் கிருபையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாலம் வலம் வரவே நீலமயிலுண்டு
கோலம் வலம்வரவே
அழகு முருகன் திருவுண்டு அருளின்
நிறைவுண்டு
கருணை ஒளிகண்டு இருளின் துயர் தீர
கோல மயில் மீதே
ஞாலம்வலம்வரவே கருணை விழிஅழகன்
அருளவே சக்தி வேலுண்டு
அன்புப் பொருளுண்டு ஆனந்த
நிலையுண்டு
என்சிந்தை இன்ப நிலை காண துன்ப நிலைமாற
உகந்தை மலைமீதே
அருளும் ஒளிபாயும் ஜோதிவேலுண்டு
வினை தீர்க்கும் கந்தன் துணையுமுண்டு
இத்தனைக்கும் சித்தனைக்கும் உகந்தன்
நினைவுண்டேல்
அத்தனைக்கும் ஐயன் சுகமுண்டு அருளுமுண்டு
நிலையான நிலையுமுண்டே
கந்தன் துணைவந்து காக்குமே.

திருவேடன் அருள் இணைய நிலமகளின்
தலமனைய
வனவேடர் குலமகளின் தவம் வெல்ல
துணையணைய
அருள் வேடன் திருவேடன் உகந்தை மலைமீதே
இருள் மறைய மருள்மறைய
அன்பர்தம் வினை மறைய நீலமயில் மீதே
ஞானஒளி துலங்க சக்தி வேல்திகழ
அன்புநிலையுண்டு உண்மை நிலைகண்டு
பக்தி நிலை முக்தி நிலை
அலைவீசி அருளின் ஒளிபேசி விளையாடுகின்றான்
குமர வடிவேலின் துணையுண்டு
திடமுண்டு விடமுண்ட கண்டன்
குமரனருளுண்டு
எந்தன் துயர் நின்று குறைவென்று
கரைசேர ஐயன்
கருணை ஒளியுண்டு பெருமானே
சந்ததமும் உந்தன்
நினைவுண்டு எனைக்காக்க கந்தனே
உந்தன் வேலுண்டு
கருணையருள் கொண்டு எனைக்காத்து
அருள்வாயே
உகந்தப் பதிமேவும் பெருமாளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதனை வழங்கவென வேதனை வழங்கி
நின்று
மூவினை துயர் பெருக்கி நாவினை பேய்வினை
பிடித்ததென்று
ஆட்டியே மீட்டியே இரவிலும் பகலிலும்
நாளிலும்
தூற்றியே மூட்டியே மாட்டியே
உழலநின்று
பேதமை மாற்றவே உணரவைத்து
நாதனை நினைக்கவே
நினைவும் வைத்து உறவும் வைத்து
உள்ளொளி பெருக்கவே
நின்ற பெருமாளே
எமகாதனின் தொடர் அறுக்கவே
வேலனின்
அருள்நிலைக்கவே அன்பர்களின் பொருள் நிலைக்கவே
மூவினை வேரறுக்கவே
வேலனே எனக்கருள தேவனே உனைநினைக்க
உனைத் தொடர அருள்வாயே
என் நேயனே உகந்தனே கந்தனே
என்வேதனையும் சோதனையும்
ஓடவே ஏழையே எனக்கருள வேண்டுவனே
உகந்தப்பதியாளும்
குமரவடிவேலே கந்தப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட நாட தேட தேட
பாட பாட
வருமே சுகம் வருமே நலம்
மாட கூட
தனமே கணமே ஓட ஓட
நெஞ்சே காண காண
மஞ்சமே வஞ்சமே வருமோ சுகம்
வருமோ நலம்
ஆள வாழ தாழ தாழ மாழ மாழ
வருமோ சுகம்
வருமோ நலம் புலனும் நாட நாட
மலனும் தேட தேட
வருமோ சுகம் வருமோ நலம்
இறையை நாட நாட
திருவை தேட தேட புலனும்
வாட வாட
மலனும் ஓட ஓட உகந்தன்
வரமும் வருமே
நலமும் தருமே சுகமும் பெறுமே
சதமும் நிலையே
ஐயன் பதமும் துணையே நிதம்.

வினை துரத்த வரும் வேலன் துணையெனக்கிருக்க
வினைக்கே இடமேது
தடமேது நீலமயில் வேலன் உகந்தை வடிவேலன்
நினைவுத் தொடரே நீண்டிருக்க
துன்ப வினை தொடரேது வடமேது தடமேது படமேது
வள்ளி வள நாட்டுத் தலைவன்
ஏழை அருள் நாட்டுத் துணைவன் குறைமாற்றி
நிறைவூட்டி அன்பின் இன்பமே
உணர்வூட்டி மனத்தெளிவூட்டி
ஆளும் வள்ளல் பேரழகன்
குமர வடிவேலன் கருணை வடிவேலன்
பதம் பற்ற வருமே நலம்
நிதம்பற்ற வருமே சுகம்.'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று நின்ற கலங்காமல் கண்டு கண்டு
பதறாமல் கண்டு கண்டு சிதறாமல்
மனமே நொந்து நொந்து உழலாமல் வெந்து
வெந்து வேகாமல் மனமே
விந்து விந்து சிந்தாமல் பந்து பந்து போல் சுழலாமல்
மனமே வந்து வந்து நினையாமல்
சென்று சென்று அலையாமல் மனமே அஞ்சி அஞ்சி
அலறாமல் மிஞ்சி மிஞ்சி எண்ணாமல்
மனமே நஞ்சி நஞ்சி உண்ணாமல் கெஞ்சி கெஞ்சி
போகாமல் மனமே கொஞ்சி கொஞ்சி ஆடாமல்
பஞ்சி பஞ்சி திரியாமல் மனமே வஞ்சி வஞ்சி வாடாமல்
எஞ்சி எஞ்சி பேசாமல் மனமே விரைந்து விரைந்து
போகாமல் நைந்து நைந்து வீசாமல் மனமே
புகைந்து புகைந்து புளுங்காமல்
புனைந்து புனைந்து ஏசாமல் மனமே செய்வதெல்லாம்
நடப்பதெல்லாம் மனமேதுயரிலே
போகாமல் இருளிலே மூழ்காமல் மனமே
எமைக்காக்கும் உயர்தெய்வம் ஒன்றே
உண்டென்றிரு மனமே பணிந்தே துணிந்தே
மனமே அருள தெய்வம் உண்டென்றிரு
மனமே தும்பிக்கையான் தம்பியே என்றுமே
எமக்கு துணைநன்றென்றிரு மனமே
பொல்லாத வினை போக்கும் உகந்தைத் தெய்வம்
உண்டென்றிரு மனமே சும்மா இருக்கவே
சுமையே வினையே விரைந்தே பறந்தே தொலைந்தே
போகவே மனமே எங்கள் கண்கண்ட
தெய்வம் கலியுகத்தின் அருள் தெய்வம்
உகந்தை திருமுருகன் என்றும்
எமக்கு துணையென்றிரு மனமே அப்பன் ஐயன்
அருள் என்றும் உண்டென்றிரு மனமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணிலமே மண்ணிலமே என்றுமே
அன்பு மாறாத
உகந்தைக் கந்தனையே போற்று
எக்கணமும் எந்நாளும் என்றுமே
அன்பு மாறாத
உகந்தைக் கந்தனையே போற்று
ஒருகணமும் ஒருநாளும் வீணில்லை என்றுமே
அன்பு மாறாத
உகந்தைக் கந்தனையே போற்று
தன்னாலே விளைகின்ற வினைதன்னை
மாற்றவே என்றுமே அன்பு மாறாத
உகந்தைக் கந்தனையே போற்று
ஆறாஅமரன் பேரா பெருமான் என்றுமே
அன்புமாறாத
உகந்தைக்கந்தனையே போற்று
சூராதீரன் அன்புதீராக்குமரன் என்றுமே
அன்புமறவாத
உகந்தைக் கந்தனையே போற்று
நானிலமே மானிலமே என்றுமே
அன்பு மாறாத
உகந்தைக் கந்தனையே போற்று
தீராதவினைதன்னை மாற்றவே மாறாத குறைதன்னை
மாற்றவே என்றுமே அன்புமாறாத
உகந்தைக் கந்தனையே போற்று
ஆறாத அன்பிலே மாறாத அன்பிலே விளையாடும்
என்றுமே அன்புமாறாத
உகந்தைக் கந்தனையே போற்று
இருள்நிலமே பொருள்நிலமே என்றுமே
அன்புமாறாத
உகந்தைக் கந்தனையே போற்று
மாறாத இருளகத்தில் மாறாதகருணைபெறவே
என்றுமே அன்புமாறாத
உகந்தைக் கந்தனையே போற்று
தீராத பொருளகத்தில் குறையாத அருள்பெறவே
என்றுமே அன்பு மாறாத
உகந்தைக் கந்தனையே போற்று
அந்நாளில் இந்நாளில் எதிர்நாளில் மாறாத
சுகம்பெறவே என்றுமே அன்புமாறாத
உகந்தைக் கந்தனையே போற்று
சுந்தரத்தமிழாலே அன்புத்தேனின் இனியமொழியாலே
என்றுமே அன்புமாறாத
உகந்தைக் கந்தனையே போற்று
எக்கணமும் எந்நாளும் சுகம் பெறவே அப்பன் அருளிருக்க
ஐயன் துணையிருக்க என்றுமே அன்பு மாறாத
உகந்தைக் கந்தனையே போற்று
நாமும் நாளும் சுகம்பெறவே நாடும் சுகம் பெறவே
என்றுமே அன்புமாறாத
உகந்தைக் கந்தனையே போற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடுக பாடுக தேடுக
நாடுக ஜெகமே
கலியுக வரதன் கருணையின்
அருளை
ஆடுக பாடுக தேடுக
நாடுக ஜெகமே
யுகயுக வீரன் யுகயுக தீரன்
அருள் தனைப் பெறவே
ஆடுக பாடுக தேடுக
நாடுக ஜெகமே
கலியுக வீரன் இருள் யுக தீரன்
திருவருள் தனைப் பெறவே
ஆடுக பாடுக தேடுக
நாடுக ஜெகமே
குகபுரிவேலன் ஜெகம் புகழ்
கோலன் அருள் தனைப் பெறவே
ஆடுக பாடுக தேடுக
நாடுக ஜெகமே.

கண்ணுக்கும் ஒருவன் கருத்துக்கும் ஒருவன்
விண்ணுக்கும் ஒருவன் வினைதீர்க்கும் உகந்தன்
மண்ணுக்கும் அவனே என் உயிருக்கும் அவனே
என் உடலுக்கும் அவனே துணைநிற்கும் பெருமான்
அன்புக்கும் இவனே கருணைக்கும் இவனே அருளுக்கும்
பொருளுக்கும் கடலாக நிற்கும் உகந்தமலை வாசன்
அருளும் வேலோடு அன்புப் பொருளோடும்
கருணை நிறைவோடு காக்கும் இன்பமுகமாகி
பறந்து வருகின்ற அழகு மயில் வேலன்
துறந்து உறைகின்ற உகந்தை மோனத்
தவமுனிவருடனே தவசீலரும் போற்ற
முப்பத்துமுக் கோடி தேவர்களும் ஏற்ற
தெய்வநெறிகமழும் உகந்தகிரி ராஜனே
எனை ஆள்கின்ற கோலவடி ஞானமுடி
கொண்டருளும் உகந்தை மலைப் பெருமானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேழமுகனுக்கு இளையோனே
ஞாலம்
நடுங்கவரும் காலமுகனுக்கு
எதிரோனே
சீலம் புகழ வரும் கோலம் பொழிந்து
வரும் பெருமானே
ஏழ்மையுறவளித்து கீழ்மை
அறவழித்து
மேன்மையுறவளிக்க அன்பு
நிலையளித்த பெருமானே
இன்ப நிலையளிக்க துன்பநிலை
அளித்து
ஆனந்த நிலையளிக்க வரும்
பெருமானே
எங்கள் குறையளித்து எமைக்
காத்தருளும்
உகந்தைப் பதியமர் பெருமாளே.

கற்றறிந்த விழியும் எனதென்க
கற்றறியாத விழியும்
எனதென்க உற்றாரும் எனதென்க
உறவறியாத உற்றாரும்
சுற்றாரும் எனதென்க தேடிய செல்வமும்
எனதென்க
தேடாத நாடாத அனைத்து செல்வமும்
எனதென்க
தேடிய புகழும் இகழும் எனதென்க
தேடாத நாடாத புகழும்
இகழும் எனதென்க வாடாத உடலும்
வாடிய உடலும் நாடாத உடலும்
நாடிய உடலும் எனதென்க
ஐயனே கருணைப் பதிவாழ் கந்தனே உகந்தனே
இவையாவும் இத்தரணியிலே
உனதென்க உகந்தைப் பதிவாழும் சத்திய பதியே
நித்திய ஒளியே வேண்டுவனவும்
வேண்டாதனவும் எனதென்க உனதென்க
சாதி சமயமும்எனதென்க
சர்வமும் சோதியே ஆதியே நீயே என்க கருணைப்பதிமேவும்
ஆனந்த சோதியே
உகந்தைப் பதிமேவும் கந்தப் பெருமாளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதி மறையா நின்நிதி மறையா
உன் கதிமறையா
என் விதி உறையா உகந்தமலை
உறைகின்ற
நிறைகின்ற அருளமுதம் பொழிகின்ற
கருணை விழிஅழகன்
துணை நம்பினோர்க்கு அழிகின்ற
உடல் அழியா
தொடர்கின்ற வினை தொடரா
முடிகின்ற
வாழ்வும் முடியா இடர்கின்ற
நோய் அணுகா
வினை அணுகா உகந்தை மலை
திரு முருகா
உனை நம்பும் உகந்தமலை
கந்தன் அடியவர்க்கு.

மாமலைபோல் உகந்தை மா மலைபோல்
நின் திடமான அன்புண்டு
திருவுண்டு அருளுண்டு நின் கருணை அலைபாயும்
ஒளியுண்டு கரைசேர வழியுண்டு
வினைமாழ இருள்மாழ அருள்வாழ உந்தன்
துணையுண்டு இறைவா
உகந்தை திருக்குமரா அருள்க்குமரா
உனை நம்பும் அடியவர்க்கு
என்றும் குழிமாறி வினைமாறி பிணிமாறி
சுகம் கண்டு இன்பநிலை கண்டு
வாழ நின் அன்பு நிலைகொண்டு அருள்வாயே
கருணை மனம் கொண்டு
பெருகும் அருள்கொண்டு அருள்வாயே
கந்தனே சிவகாமி செல்வனே
உகந்தை துறையூரரனே மயூரவரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் நாமம் உயிர் வழங்க திருநாமம்
துணை வழங்க
இறைநாமம் தலைவணங்க உன்பொருள் நாமம்
எது சொன்னதோ?
எது தந்ததோ திருமுருகா உகந்த கிரிகண்ட
குமர வடிவேலா
உன் பொருளின்றி அருளில்லை நின் திருவின்றி
இறையில்லையோ உன் உறவின்றி நிறைவில்லையோ
ஓம் என்னும் அருள்நாமம் உயிர் வழங்க
திருநாமம் துணையுற்றதோ
இறைவா இறைநாமம் தலைவணங்க பொருள் நாமம்
ஒளிதுலங்க உனில் வந்ததோ
தென் கிழக்கிலங்கை அருண ஒளி திசையுற்ற கரைகண்டு
நீல் கடலின் ஒலிபாய அருள்நாமம்
தனைக்கொண்டு ஒளிதுலங்க வினை இருள்மாறி
திருவருள் துலங்கவென
பொருள் நாமம் தனைக்கொண்டு அருள் ஆள உலகாள
வென்றே ஐயன் நிறை கொண்ட
பதியாக்கி இருள் நீக்கி அருளின் அலைபாய கருணை ஒளிபாயும்
உகந்தை மலையுற்ற பெருமாளே.

தேவுகைலாசம் மேவு
குமரோன்
ஏறுமயிலாசனம் கொண்ட
பெருமான்
ஏந்தி நின்றருளும் வேலாயுதம்
என் வினைமாழ
பிணிமாழ வந்தருளும் பெருமான்
உகந்த மலை கண்டபெருமான்
அன்பு நிலை கொண்டு இன்ப நிலை
கொள்ள
உகந்தப்பதி வந்த பெருமான்
பதம் பற்ற நிதம் பற்ற வருமே
சுகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவவரும் கையே இதமும் தரும்
மிதமும்தரும் மனமே
உதவிவரும் உணர்த்திவரும் திருக்கையே
இதமும் தரும் மிதமும் தரும்
மனதில் நிறைந்திருக்கும் உறைந்திருக்கும்
திருமுருகன் அருளே
கணமெனவே தினமெனவே உதவவரும்
கையே உகந்தை அருள்முருகன்
திருவருளும் பெறுமே குருவருளும் பெறுமே
உதவவரும் மனமே
உதவிவரும் மனமே ஐயன் உகந்தமலை
திருமுருகன் திருஒளியும்
அருள் ஒளியும் பெறுமே அன்புருக
அன்பொழுக பண்பொழுக
அணைக்கவரும் கையே மனமே ஆடிவரும்
ஓடிவரும் உகந்தமலைக் குமரன்
அருள்நிறைவும் துணையணையும் பெறுமே
வாடிவரும் தேடிவரும்
உதவிதனைப்பெறவே நாடிவரும்முகமே
இதமும் பெற இனிமைபெற
இன்புறவே உதவவரும்முகமே கந்தன் உகந்தன்
அருள் கருணை பெறுமே
ஆபத்திலும் பாபத்திலும் காக்கவரும் மனமே
கையே உயிரே
உகந்தமலைக்கந்தன் அருள்ஞான ஒளிவீசியே
உள்ஒளியும் பெறுமே
நல்மனமும் நலமுமே வாழவே நலமுமே பெருகவே
வாழவரும் உயிரே
கந்தன் கருணையதில் சக்திநிலை முக்திநிலை
பெறுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிலே கருணயும் மண்ணிலே பெருமையும்
பொன்னிலே பொருளின் உயர்வுமே
உன்னிலே உளத்திலே தன்னிலே இகத்திலே
அனைவரும் பெறுவரேல்
தின்னிலே உன்னிலே உயிர்த்துணை தன்னிலே
இறைதுணை வந்துமே சேருமே
சொல்லிலே மனதிலே செயலிலே அனைவர் துணைவர்
இனிமை சேர்க்கவே
கண்ணிலே கருத்திலே உயிரிலே கருவிலே ஜெகத்திலே
இறைகருணை தன்னிலே சேருமே
அன்பிலே பண்பிலே உறவிலே உயர்வுமே சேர்க்கவே
உன்னிலே இறையருள் உயர்ந்துமே
நிறைந்துமே சேருமே
கந்தன் கருணை உகந்தை முருகன்
திருவருள் என்றுமே காக்குமே.

பசித்தோர் முகம்பார்க்க பரம்பொருள்
முகம்பார்க்குமே
மெலியார் இயலார் கரம் கொடுக்க
கந்தன் கருணைக் கரம் நீட்டுமே
துன்பநிலை துயறுருவோர் இன்பநிலையுறவே
அன்பின்நிலை பண்பின்நிலை காட்டிடவே
இறைஇன்னருளும் பெறுமே தின்னமுடன்
துன்பநிலை மாறி
என்றுமே இன்பநிலை இனியநிலை பெறுமே
காக்கவரும் மனமே கையே
காத்துவரும் மனமே கையே உயிரே
சந்ததமும் உகந்தன்
அருளே காத்துவரும் துணையே நிலையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்திதனை மேவி சுத்தநிலைபேணி
பற்றும் நிலைமாறி
போற்றும் நிலையாகி கற்றும் திறம்மேவி
மற்றும் நிலைமாறி
கந்தன் கதியாகி பற்றும் நிதியாகி
எற்றும் நிலைமாறி
ஐயன்துணையாகி நித்தம் மதியாகி
பித்தம் தலையேறி
நத்தும் நிலை பேணி நிற்க அதுவாக
குத்தும் வினை
ஏவி வற்றும் மலமாக என்றும்
உகந்தைப் பதிநாடியே
ஐயன் துணைநாடவே என்றும்
வருமே நலம்
என்றும் தருமே சுகம் கன்றும்
தாயாகவே
என்றும் அருள் தருவான் உகந்தை மலை
வேலன்
அருளும் சிவபாலன் கருணை ஒளிபாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டல் நிலை

நின் அருள் மறந்தே என் பொருள் நினைந்தே
புகழ் இசைந்தே எனை மறந்தேனோ
இறைவா உகந்தை திருக்குமரா உனைமறந்தே
எனை நினைந்தே மருள் நிறைந்தே வினை நினைந்தே
இருள் நிறைந்தே இப்பாழுமே யுலகில்
இகழையே தேடிடுவேனோ
துகில் நிறைந்தே மறம் நினைந்தே வினை இருந்தே
இவ்வுலகினிலே இடருறுவேனோ
கந்தனே வினைதனிலே படர்ந்தே மறந்தனிலே
தொடருறுவேனோ உகந்தனே
அறம் மறந்தே அறிவிழந்தே நின்துணை இழப்பேனோ
கந்தனே உனை மறப்பேனோ
கருணை மலையாளும் கருணை விழி அழகோனே
நின் திருவடி நினைந்தேனே
குருவருள் பெறவே வினை இருள் துறந்தே நின் திருவருள்
மலராயோ நிறைந்தே
அருள் தர வரமருளாயோ சிவகுக பவனே சரவணபவனே
ஸ்ரீவள்ளி காந்தனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் நொடி பிணிகள் தாங்கேன்
வன் கொடுஞ்சொல்லும்
தாங்கேன் பொறி வழி அலைமோதும்
ஆலகாலமென வரும்
விகாரமலமென வரும் அடாத
வினைவாங்கும் பாடாத
வேதனை சோதனை தாங்கேன்
இம் மண்ணுலகின்
நீதியற்ற சோதனையுற்ற வேதனை
தாங்கேன்
இப்புவி மீது காலநிலை தரும் கோலநிலை
எனவரும்
அகோர நிலை தாங்கேன் கோள்கள்
தரும் கீழ் கள் தரும்
துன்பமும் தாங்கேன் எக்காலமும்
எக்கணமும் தகாதவை
தாங்காதவை தாங்கேன் இக்கணமே
எனைவந்து காத்தருளே
பார்த்தருளே திருமுருகாஅருள்முருகா
பரஞ்சோதி ஒளிகண்ட
அருட்சோதி குமரவடிவேலே
உகந்தை துறையூர் கண்ட
மயூரவரனே ஸ்ரீவள்ளி காந்தனே
உகந்தனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணநாதன் தமையனென சிவநாதன்
தனையனென
அருள் நாமம் உருவெடுத்த ஓம் என்னும்
பிரணவ மந்திரத்தின்
உட்பொருளை மெய்ப்பொருளை பிரம்மனுக்கே
எடுத்துரைத்த குரு தேவனே
திருமாலின் மருகனென உமையாளின்
திருக்குமரனென
தேவாதி தேவர்களின் துயர் தீர்த்த குறைதீர்த்த
அருட்குமர வடிவேலனே
அன்பு நிறை கொண்ட பக்தர் குலம் வாழ என்று
உகந்த கிரி மலைவந்த திருவேலனே
உந்தன் திருப்பாதம் பணிந்தோமே துதித்தோமே
எமைக் காத்து வரமருளும்
அருள் வேலனே நீல மயில் மீது வள்ளிதுணை
மகிழ வருகின்ற
உகந்தை மலைவேலனே நின்பாதம் பணிந்தோமே
துதித்தோமே அருளும் ஐயா
அழகு திருமயில் வேலனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தாடும் மலை நாதன் நின்றாடும்
நீல மயில் மீதே
கொண்டாடும் அன்பர் குறை தீர்த்தாடும்
உகந்தை மலை மீதே
சக்தி வேல் கொண்டு அருள் கொண்டு
வினை கொன்று விளையாடும்
பெருமாளே உகந்தப் பதிநின்று விளையாடும்
குமர வடிவேலே
எந்தன் குறைதீர்த்து வினையழித்து
இன்ப நிலையளித்து
துன்பநிலை ஒழித்து அருள்வாயே
சுந்தர வடிவேலே
வங்க அலை நின்றாட தங்க மயில்
மகிழ்ந்தாட
அன்பு மலை அருளும் மலை இன்ப மலை
இனியமலை உகந்தமலை மீதே
ஞானவேலோடு அன்பு நிலை மீதே இன்ப
வலை வீசி துன்ப அலை
ஓட்டி இன்ப நிலையூட்டி
அருளின் ஒளியூட்டி எந்தன்
மனத் தெளிவூட்டி எனை ஆளவருவாயே
கந்தப் பதிமேவும்
வள்ளி துணையாளும் உகந்தப் பதிவாழும்
பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலேற வேலேற கருணை ஒளியேற
அழகுப் பதிவாழவே
அன்பர் உம்பர் துதிவாழவே இன்பப்பதிவாழவே
நின்ற குமரோனே
இறை நினைவேறி மறைமதியேறி துதியேறி
இறைவா நின் அருள் ஏறவே
ஐயன் பதியேறி நிதியேற விதிமாற கதிஊறவே
உகந்த கிரியேறி வந்தேனே ஐயா
உனை நாடியே போற்றியே பாடியே பணிந்தேனே
கந்தனே உகந்தனே உனை நினைந்தே துதித்தே நின்றேனே
அப்பனே நின் அருள் வேண்டியே மன்றாடியே நின்றாடுவேனே
என் அழகு முருகோனே நின்பாதாரவிந்தமே
ஆதாரமென்றே பற்றியே நின்றேனே எனை
ஆண்டருள் பெருமானே
துணை தந்தருள வந்தருள வேண்டுவனே கந்தப்பதி
மேவும் இறையோனே
உகந்தப் பதிதனிலுற்ற கந்தப் பெருமாளே.

சர்ப்பமே அணியாக நீலமே கண்டமுற
காலனை மிதித்து நிற்க
காலனே துதித்து நிற்க ஈசனே அருளிநின்ற
பெருமாளே
வேழமே உருவெடுத்து ஞாலமே
துதித்து நிற்க துணையும் நிற்க
வேலனே மயிலில் நிற்க கோலமே
வடிவெடுத்த பெருமாளே
ஆதியே அந்தமிலா சோதியே பந்தமிலா
நீதியே எனக்கருள வேண்டும்
அனாதியே பேதமிலா விதியே கசடுமிலா
சூதுமிலா மதியே எனக்கருள வேண்டும்
சோதிப்பதி வாழும் அன்பு நிதியாளும்
இன்பவிதியாளும்
உகந்தப்பதிவாழும் கந்தப்பெருமாளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்பாதார விந்தமே ஆதாரமெனப்
பற்றி நின்றேன் கந்தனே
உகந்தனே பழவினைகள் நிகழ்வினைகள்
எதிர்வினைகள் எவ்வினையும்
எனை அண்டாது வினைமண்டாது துணை
தந்தாள அருள்வாயே
ஆதியிலே கண்டவினை பாதியிலே வந்த
வினை மோதியே
எனை வெல்ல எனை மெல்ல எனைக் கொல்ல
வாராது அருட்
சோதியே எனை ஆளவரவேண்டும் திருமுருகா
கந்தப்பதிமேவும்
பெருமாளே உகந்த மலைகொண்ட
குமரவடிவேலே.

அலைகின்ற மனமின்றி உனைநினைக்கின்ற
மனமொன்று
தந்தருள்வாயே உகந்தமலை நாதனே
விளைகின்ற வினையன்றி
உனை நினைக்கின்ற இனிக்கின்ற இனிய
மனமொன்று
தந்தருள்வாயே உகந்தமலையாண்டவனே
விழைகின்ற விதியன்றி
அருள்கின்ற நின்நிதியொன்று தந்தருள்வாயே
கந்தமலையாளுகின்ற
கருணைப் பெருமானே உறைகின்ற உணர்கின்ற
வேதனையே
தருகின்ற உழல்கின்ற நோய் பிணிகள்
எனை என்றும் அணுகாமல்
காத்தருளவருவாயே கந்தப் பெருமானே
பழிக்கின்ற இழிக்கின்ற
முழிக்கின்ற பழியொன்றும் வாராமல்
பகையொன்றும் நேராமல்
பார்த்தருளவேண்டுவனே காத்தருள
வேண்டுவனே
அழகுப்பதி வாழும் அருண வடிவேலே
உகந்த மலையானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயாட நின் மயிலாட
கருணை வேலாட
நிதமும் உனைத் துதிபாட
எனைத் தனித்தாள வருவாயே
உந்தன் துணைதேடித் தருவாயே
கருணை மலைவாழும்
உகந்த கிரியாளும் திருமுருகா
கருணைத் தேன்பாயும்
அமுதமலை பொழிய வரும்
அழகு திரு வேலே
உலகாள வந்த அருண
வடிவேலே
தருணமிதுவே காத்தருள
வருவாயே
நீல் கடலும் சோலை மலை சூழ
அருளும் ஒளிபாய
வரமருளும் சீலாவனமங்கை
மகிழ திகழ நின்ற
உகந்தமலை கண்ட வரனே
மயூரவரனே.

காடு மலையதனில் கனகமணி மேனியனே
தவமணிகள் சூழநிற்க
அருள் மணிகள் வீசிநிற்கும் கருணை மணி மேனியனே
இசைமணிகள் பரவிநிற்க
ஆடுகின்ற மயிலுடனே நாடுகின்ற பக்தர்தனை
காத்தருளும் உகந்த மலை வேலவனே
எந்த நிலையானாலும் வந்த வினையானாலும் சொந்த
வினையானாலும்
பந்த வினையானாலும் பாசவினையானாலும்
தொல்லையின்றி
தொலைத்தருள்வாய் கந்தன்மலை காட்டுகின்ற
உகந்த கிரிவேலவனே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திப்பிரிய திரைமறைவில் எப்பிரிய
திருவுண்டு அருளுண்டு
மறை பேச திரை பேச மனம் பேச
கருணை ஒளி வீசி இருளும்
வினை மாற திரைமாற பிணிமாற உந்தன்
நினைவூர துணையூர
கந்தா உகந்தா நிந்தன் அருள்ஒளி வீசி
எனைக்காக்க அருள்வாயே
திரைபேச மறைபேச அன்பர்தம் உம்பர்
தம் மனம் பேச மலையேறி
உறைகின்ற உகந்த மலை வாசனே
வள்ளிமணவாளனே
எந்தன் வினை நின்று கரையேறி நின்திருப்பாத
நிழல்காண உந்தன்
உகந்தை மலையேறி நின்துணை மேவி
வருவேனே கந்தனே
உந்தன் அருள் மேவி எனையாள வருவாயே
உகந்தனே சிவகாமி செல்வனே
மயூரவரனே உகந்தை துறையூரரனே.

வாடும் பயிர் வேடத்திலே நானுண்டு
கந்தா
கருணை மழைபோல நீ வருவாய்
கந்தா
வேடன் வரும் கோலத்திலே வினை
யுண்டு கந்தா
துள்ளி விளையாடும் மான் போல நானுண்டு
கந்தா
தக்க துணையாக நீ வருவாய்
கந்தா
பதுங்கி வரும் வினையோடு துள்ளி
விளையாடும் வாழ்வும் எனக்குண்டு
கந்தா
பரம் பொருளின் குமரா உகந்தை
மலையானே காத்தருளும்
கந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வினை ஒடுக்கி வினை மடித்து துயிலெழுப்பி
மனமொடுக்கி நினைவடக்கி நினைவெழுப்பி
உனை நினைக்க கணம் நினைக்க தினம் நினைக்க
அருள்வாயே
என் வினை ஒடுக்க வினை மடிக்க துயிலெழுப்பி மனமொடுக்க
நினைவடக்க நினைவெழுப்பி உனைநினைக்க கணம்
நினைக்க தினம் நினைக்க வினைதடுக்கி உனைநினைக்க முடியாத
ஏழை எனை துணை கொடுத்து இருள் கெடுக்க அருள்வாயே
கணம் அடக்க மனம் அடக்க முடியாத கசடுவினை மசடுவினை
வசடுதுணை பகடுதுணை நாடியே நகரஎனை விகரமது
ஓட்டாமலெனை நாட்டாமலெனை மாட்டாதிருக்க அருள்வாயே
வினை ஒடுக்க வினைமடிக்க மனமொடுக்க துயிலெழுப்பி
நினைவடக்க நினைவெழுப்பி உனைநினைக்க அருளமுதம் பொழிந்துவரும்
உகந்த கிரி மலைதன்னில்கருணை மழை பொழிந்துவரும்
ஸ்ரீவள்ளிகாந்தனே உகந்தை மலையமர்ந்த குமரவடிவேலே
கருணை விழிபாராயோ அருளும் ஒளிதருவாயோ
உந்தன் துணையெனக்கு நிலைபெறவும் இறுதிபெற உறுதி
பெறதருவாயே உகந்தைத் துறையூரரனே
மயூரவரனே.

வினையே நினையாதுயில்ஓட
உனையே நினையாதிகில் வாட
தனையே உணரா தவமே கணமே
கலைந்தேக
மனமே முனையா அறமே தொலைந்தோட
மறமே மனதே
தனதே தகர்ந்தேக பறந்தோட
உனையே நினைந்தே
துதித்தே பதித்தே என்நிலை மேவ
கிளையே தளையே
அகமே நிலைமாற உன் உறவே
இகமே பரமே
சுகம் நாட நின்துணையே நிழலே
எனைமேவ
கருணைவடிவே அருளின் நிறைவே கந்தா
உகந்தா எனக்கருள்வாயே
கந்தப் பதிமேவும் பெருமாளே
குமரவடிவேலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினை தொடங்க வினை மடங்க
நினை நினைக்க
பேதடங்க மனமொடுங்க கணம்
ஒடுங்க தினம் ஒடுங்க
வாதடங்க வாயடங்க
நாவடங்க
வயிரொடுங்க கண்மடங்க
காதொடுங்க
மூக்கொடுங்க மூலக்கருத்தொடுங்க
உடலடங்க கந்தனே
உன் உறவேயதில் தொடங்க
என் நினைவேயுனிலடங்க
அருள்வாயே கருணை நிலைமேவி
அருளின் ஒளிவீசும்
அன்பின் நிலை பேசும் பெருமாளே
உகந்தப்பதியுற்ற
குமரோனே கந்தன் துதியுற்ற
ஏழை மதியுற்ற
கந்தப்பதியுற்ற பெருமாளே.

அண்டமும் பிண்டமும் திண்டமும்
தெண்டனிடும் பெருமாளே
தெண்டமும் கண்டமும் துண்டு துண்டமாகிடவே
நின் துணை காண வினை ஓடவே
அருள்வாயே உகந்தை மலை மேவும் பெருமாளே
என் பண்டமும் திண்டமும்
மீளவும் காலாகாலமும் எனை வந்து நாடுமோ
துணை நின்று நீடுமோ
வீடுமோ எனை வந்து தேடுமோ கூடுமே
நிலைவந்து மேவுமோ
யாதுமே நிலை நின்று எனை இன்று துணை நின்று
காக்குமோ
ஏற்குமோ இறைவா முடம் கண்ட வழியா
மடம் கண்ட நிதியா
என் விதி கண்ட இருளா துணை எனக்குத் தருமா
உகந்தை மலை கண்ட
இறைவா உந்தன் உறவின்றி எந்தன் துயர் தீருமா
நீயன்றி வேறுகதியில்லை
மதியில்லை துதியில்லை ஐயா எந்தனுக்கு உகந்தப் பதியாளும்
கந்தப் பெருமாளே
சுந்தர வடிவேலே உகந்தைப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாண்டாளும் மீண்டாளும் வாழ்ந்தாலும்
தாழ்ந்தாலும்
துவண்டாளும் உனையன்றி யான் நினைக்க
வேறுகதியுண்டோ திருமுருகா
உகந்த மலைவாழும் பெருமாளே
உள்ளொன்று புறமொன்று
இருளென்று மலையாமல் எனையின்று இக்கணமே
பாத்தருள காத்தருள
வரவேண்டும் உகந்தை மலையாளும் பெருமாளே
கல்லென்று முள்ளென்று
பாராமல் பலகாத வழி நடந்தே
காடுமலை மேடுபள்ளம்
பலதும் கடந்தே வந்தேனே உன் அருள்காண
என் இருள் போக மருள் மறைய
உகந்தை மலை தேடி வந்தேனே ஐயனே நாடி வந்தேனே
உனையே நினைத்து வந்தேனே கந்தனே
உனையே பாடி நின்றேனே துதித்து நின்றேனே
எனையே ஆதரித்து பரிதவிக்க
நிலை தவிக்க விடாமலெனை காத்தருள வேண்டுவனே
உகந்தப் பதிமேவும்
கந்தப் பெருமாளே குமரவடிவேலே.

நெடுநாள் வந்த கொடுவினையோ
அல்ல
கெடுநாள் வந்த பெருவினையோ
ஏழை நான் அறியேன்
திரு முருகா முட நாளுற்று
திட நாளற்று
விடிநாளற்று இருள் நாளுற்று
திரி நாயுற்று
எனை அலைநாயற்று இடராதிருக்க
அருள்வாயே
இது நாளுற்று இக்கணமே எனைக்
காத்தருள வருவாயே
அலைமா ஒலி பேசும் பெருமான்
அருள்மா ஒளி வீசும் கருணை
மலை மா திருவே உகந்தைப் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலிகளும் வேலிகளும் பொல்லாங்கு
செய்யாமல்
ஆழியிலே பாளியிலே அறியாமல் தெரியாமல்
வீழ்ந்து விடாதென்னை ஆழ்ந்து விடாதென்னை
நாழியிலே வந்தெனை மீளவே வாழவே ஆளவே
வந்தெனை
காத்தருள வேண்டுவனே கருணைக்கண் பார்த்தருள வேண்டுவனே
அழகு திரு சோதியனே
ஆனந்த அழகுமயில் நீலமயிலேறும் சண்முக
குருபரனே
உகந்தமலைமேல் விளங்கு நந்தா விளக்கே கந்தா
கடம்பா கற்பக ஜோதியனே
உகந்தப் பதிமேவும் கருணைக்கடலே
குமரவடிவேலே.

கந்தனே உகந்தனே அருள் வேந்தனே
உந்தனை நான் மறவேனே
எந்தனை காத்தருள்வாயே மனம்வந்து
உனைத் தேடவே
கந்தனே கால் வந்து உனை நாடவே
யான் வந்தேன் உனை நினைந்தேன்
உனைப் பணிந்தேன்உனைத் துதித்தேன்
தேன் தந்து
தினை தந்து தனைத்தந்து தவமுயர மயிலேறி
மதியேற கதிதந்து
ஸ்ரீவள்ளி தேவி கரம் பற்றும் பெருமாளே உகந்தை மலையேறி
அருள்முற்றும்
எந்தன் வினைவற்றும் இருள்மாற கருணை மழை
தூற்றும் உகந்தனே
உந்தன் பதம் பற்றும் எனை நீயே துணைதந்து
கணமெனவே தினமெனவே
அனுதினமெனவே காத்திடவா கந்தப்பெருமாளே
உகந்த வடிவேலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் நொடியின் வினை மிடியின் துயர்
என்றும் எனை வாட்டாது நாடாது
அணுகாது நீயே காத்திட வா உகந்த மலையானே
பேய் நொடியோ சேய் மிடியோ
வாய் வினையோ செய்வினையோ எனை வந்து
தொடராது இடராது
படராது பார்த்தருளும் காத்தருளும்
கந்தப் பெருமானே
துயர் வந்து வினைநொந்து எனை வந்து குணம்
வந்து மனம் நொந்து
குணம் நொந்து உடல் நொந்து பலம்
வெந்து துணை இழந்து
உனை மறந்து எனை இழந்து அலையாமல்
எனை வந்து துணை தந்து
காத்தருளே பார்த்தருளே உகந்த பதிவந்த
எனை இன்று காத்தருளே
கருணை பதிமேவும் பெருமாளே உகந்தைப்
பதிமேவும் கந்தப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்விழிப்பு நிலை

நீல மயில் வேலனே கோல மயில் அழகனே
உகந்தனே
கந்தனே ஏழுமலை தேவனே கதிரமலை முருகனே
உகந்த மலை நாதனே
ஸ்ரீவள்ளி தெய்வானை துணைவனே அருட்சக்தி
வடிவேலனே
சிரம் தாழ்த்தி கரம்ஏந்தி மனம் முந்த உயிர்
வணங்க உடலேந்தி
நின் திருப்பாத அருள்வேண்டி தொழுதேனே
அருள்வேந்தனே
எந்தன் உடல் கொண்டஉயிர் கொண்ட
குறையெல்லாம் போக்கியே
அருள் வாயேஇருள் நின்ற துயர்விண்ட
எந்தன்உயிர் தன்னை
தூக்கியே காத்தருள்வாயே பிறைகொண்ட
பேரின்பத்துறை நின்ற
அருள்வள்ளல் அருட் கொண்டு பொருள்
கொண்டு நிறை நின்ற குமரோனே
உகந்தைப் பதியுற்ற கந்த கிரி தனிலே
உறைகின்ற கந்தப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்வினை தன்னை மாற்றவே உகந்தையுற்ற
திருவே
என்குணம் தன்னை மாற்றவே உகந்தை மலையுற்ற
குருவே
எந்தன் வினை மாறி குணம்மாறி குறை மாற்ற
திருவுற்ற குருவே
விரைவுற்று வினையற்று குணமற்று குறையற்று
எனை மாற்று குருவே
துணையற்று துறையற்று வழியற்று வகையற்று
தடுமாறும் என்னை
அணைவுற்று அருளுற்று இருளற்று இடரற்று
காத்தருளும் திருவே
அருளும் ஒளிபாய கருணை ஒளிபாய உகந்தை
மலையுற்ற இறைவே.

அணிமணிகள் அவனியதில் பூண்டு
பொன்மணிகள்
பட்டாடை பலஅணிகள் புழு உடம்பில்
பூண்டு
பூவையரும் பாவையரும் ஆடவரும்
கொண்டாடுவர்
இம்மேதினியில் அனைவருமே பொன் பொருளையே
மன்றாடுவர்
இறைவா உனைக் கொண்டாட மன்றாட
வருவோருமே
பொன் பொருள் வேண்டியே நின்றாடுவர்
உகந்தனே இச்சகத்தில்
உனையன்றி யான் கொண்டாடி மன்றாட
நின்றாடி யான் வேண்ட
எவருமில்லை எதுவுமில்லை ஐயா நின்கதியே
என் மதியே வேண்டி நிற்க
எந்தனுக்கு அருள்வாயே உகந்தப்பதி
மேவும் கந்தப்பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சிலே வைத்தாலும் கெஞ்சியே சொன்னாலும்
அஞ்சி அஞ்சியே பார்த்தாளும்
மிஞ்சி மிஞ்சியே வருகின்ற அகந்தைக்கு உகந்தையே
என் சிந்தையே வாழ்கின்ற இறைவனே
கந்தனே உகந்தனே நீதான் பதில் சொல்லவேண்டும்
அதிலுந்தன் அருளின்ப திருவிளையாடல்
ஒளிகாண அகந்தையின் குறிமாற பொருள் மாற
உகந்தையனே நீயே பதில் ஒன்று
தந்தருள வேண்டும் மண்ணின் மண்ணளந்தாலும்
சொல்லின் சொல்லளந்தாலும்
எண்ணிறந்த வஞ்சகத்தின் கொடுமைக்கும் வேதனைக்கும்
சோதனைக்கும் போதிக்க நீ யொருநாள்
இவ்வுலகில் கொடிய மருள்மாற தீய இருள்மாற
கிருபை தந்தாள வேண்டும் கொடுமையே
ஓங்க முடுமையே வாழ இடும்பனே கொடும்பனே
ஆள இன்று யான் படும் துயர் போல்
அனைத்துயிர் துயர் போய் நிம்மதியின் நிழலாட
உன் நீலமயிலாட வேல நின் கருணைவிழி
நோக்க கருணை தந்தாள வேண்டும் அருளும் தந்தாள
வேண்டும் உகந்த கிரியுற்ற குமரவடிவேலே
ஸ்ரீவள்ளிகாந்தனே மயூரவரனே.

கொடுஞ் சொல்லும் கெடும் சொல்லும்
வடுச் சொல்லும்
சேர்ந்தனையாதிருக்க வருளே காணாதிருக்க
வருளே
மாந்தர்க்கு மண்ணில் சொல்லில்
இவையே வராதிருக்கவருளே
கண்ணில் கருத்தில் காணாதிருக்க
வருளே
ஒருநாளும் ஒருபோதும் இவையே
என்னில் பழகாதிருக்க வருளே
அணுகாதிருக்க வருளே வள்ளி வள நாட்டின்
தலைவே
இறைவே இனிமையே இம்மையும்
மறுமையும்
செம்மையுமாய் என்றுமே
சேர்ந்திருக்கவருளே
உன்னையே நன்மையே போற்றுகின்றேனே
உகந்தை துறையூரரனே மயூரவரனே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயாய் வந்தெனை சேயாய்
காத்தருளும் என் செல்வமே
திருப்பெருந் ஜோதி சுடர்கின்ற
ஆனந்த செல்வமே
எனை ஆளும் அருப் பெரும் ஜோதி
நிறைகின்ற உகந்தனே
கந்தனே கடம்பனே தெளிவூட்டி
அருள்கின்ற நிறை செல்வனே
வள்ளி மனம் ஆள திணைப்புனம்
வந்தாண்ட அருட்செல்வனே
பழனிமலை ஆண்ட என் மனமாளும்
உகந்தமலை ஆண்டவனே
வந்த வினை அகல பந்த வினை தீர
காக்கின்ற கருணைச் செல்வமே
உகந்தமலை கோயில் கொண்டருளும்
என் இறை செல்வமே
கந்தப்பதி வாழும் பெருமாளே.

கொடுவெயிலில் உழலாது நடுவெயிலில்
அலையாது
கடும் இருளில் விழியாது வினையிருளில்
திரியாது
பணிமுகிழில் மழையதனில் நனையாது
தினம் இரவில் முழியாது
கடும் பசியில் நெடுவழியில் தவிக்காது
தாகமுற தோஷமுற
அலையாது இடராது நேசமுற பாசமுற
அரவணைத்து அன்புடனே
பண்புடனே நட்புடனே நாளதுவும்
அமைதி பெற சுகமும் பெற
காத்து தினமுமே கணமுமே கண்மணி போல்
காத்து கருணையது காட்டி
அருளுதனில்ஊட்டி அன்பொழுக
கருணை மழை
பொழிய வரும் முருகோனே அரியவரமருள
உகந்தை மலை தனிலுற்ற பெருமாளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடி நாடிவரவே பாடி ஓடி
வரவே
தேடியாடி வரவே உனைநாடி
நிற்கும்
அடியார் வகையின்றி தொகையின்றி
வரவே
வகையின்றி தொகையின்றி அருளே
தகையின்றி
தவமின்றி தரவே நீயன்றி நின்
அருளன்றி
நின்கதியன்றி வேறுண்டோ?
நின் கருணை
யருளன்றி திருவன்றி வேறுமுண்டோ
திருமுருகா
உகந்தப்பதி ஆள வந்த இறைவா.

அருளேந்தி வருகின்ற திருவே
வேலேந்தி
வருகின்ற பொருளென்ன
இறைவா
கருணை மதியேறி வருகின்ற குருவே
நீல மயிலேறி
வருகின்ற பொருளென்ன குகனே
அன்பு
மனங்கொண்ட அழகேசனே
வள்ளி
மணங்கொண்ட பொருளென்ன
திருவேலனே
குன்று தோறாடி விளையாடி வருகின்ற
குமரோனே
உகந்தை குன்றாடி விளையாடி
நிலைகொண்ட
பொருளென்ன ஸ்ரீகாந்தனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயுடலும் வேண்டேன் பேயுடலும் வேண்டேன்
பொய் உடலும் வேண்டேன்
புழுஉடலும்வேண்டேன் பொன் பொருளும் வேண்டேன்
புகழுடலும் யான் வேண்டேன்
இகழுடலும் யான் வேண்டேன் இச்சகந்தனிலே
கல்வி செல்வம் வீரம் இருந்தென்ன
யான் கண்டேன் கசடும் பகடும் நிறைகின்ற
விளைகின்ற இவ்வுலகில் இருளும்
மருளும் தான் யான் கண்டேன் கந்தனே நின்
உகந்த கிரி வந்துற்ற வேளை
அத்தனையும் பொய்யாகி பேயாகி சுழல்கின்ற பெரும்
காற்றெனவே யான் கண்டேன்
விண்வெளியில் மின்னலென மறைகின்ற இவ்வாழ்வின்
நிலையாமை என்மனதில் தெளிவுறவே
யான் கண்டேன் வேண்டுவதும் நின் திருவருளே
நாடுவதும் நின் திருப்பதியே
தேடுவதும் நின்திருவடியே யன்றி வேறில்லை ஐயா
காத்தருள வேண்டுவனே கருணைக்கண்
பார்த்தருள வேண்டுவனே கந்தனே சிவகாமி செல்வனே
ஸ்ரீவள்ளி காந்தனே மயூரவரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளல் வருகின்ற இன்பம் தருகின்ற
துன்பம் மறைகின்ற
உகந்தகிரி கண்டேன் கந்தன் அருளும்
மலைகண்டேன்
எந்தன் உள்ளம் உறைகின்ற நித்தம்
நிமிஷம் எனைக்காக்கின்ற
கந்தன் உகந்தன் அருள்துணையும் கண்டேன்
வற்றும் வினையும் கண்டேன்
குத்தும் மலமும் கண்டேன் குணம்மீறும்
விஷம் சீறும்
பஞ்சபூதங்களின் தொழிலும் கண்டேன்
உள்நின்றே உருட்டும்
பேய்கண்டேன் தந்திரப் பொறிவரையும்
மந்திர நரிகண்டேன்
எந்திரி தந்திரி மந்திரி துணையும் கண்டேன்
தொல்லைதுயர் உணர்த்தும்
என் ஆவி தென் ஆவி பரிதவிக்கும் நிலைதவிக்கும்
யம நேயன் துணையும் கண்டேன்
வந்தாரை வாழவைக்கும் செத்தாரைப்புதைக்க
வைக்கும் பூதேவி துணையும் கண்டேன்
ஐயா அழகுமலை சோதியனே இவையாவும் நின்
திருஒளியில் அருள் ஒளியில்
தெளிவுறவே யான் கண்டேன் கந்தனே சிவகாமி
செல்வனே இவை நின்று எனைஇன்று
இக்கணமே நீவந்து கதிதந்து காத்தருளவேண்டுவனே
கருணைக்கண் பார்த்தருள வேண்டுவனே
கந்தப்பதிமேவும் உகந்தகிரியுற்ற அழகுதிரு
அருளும் மலைவேலோனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட வடிவுகண்டேன் உற்ற
தெளிவு கண்டேன்
நிஷ்டை ஒளியும் கண்டேன்
தெட்டத் தெளிவுறவே
உற்றதுறவு கண்டேன்
அட்ட ஒளியுறவே
துட்ட இருள் அறவே கந்தனே
உந்தன் அருளும் கண்டேன்
விற்ற பொருளும் கண்டேன்
உற்ற பொருளும் கண்டேன்
அன்பின் அருளும் கண்டேன்
கற்ற பொருள் அறவே
கந்தனே உகந்தனே உந்தன்
கனிவும் கண்டேன்
உற்ற கதியுறவே கந்தன்
உறவுறவே
இன்பத்திருவும் கண்டேன் சாந்தியின்
நிறைவும் கண்டேன்
ஐயனே உந்தன் உகந்தகிரி வந்துற்ற
வேளை அத்தனையும்
வித்தாள சித்தாள முத்தாளும் இன்ப
நிலை கண்டேன் உந்தன்
உற்ற துணையும் கொண்டேன் கந்தனே
சிவகாமி செல்வனே
உகந்தை துறையூரரனே மயூரவரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ஞானம் கண்ட தவசீலர் நினைத்தாலும்
சொன்னாலும் அதுவே வரும் அதுவே
பலன் அதுவே குணம் அதுவே சுகம் இதுவே உண்மை
யாய்விடும் இதுவே நிலையாய் விடும்
அதுவன்றி விஞ்ஞானம் காணும் அறிவாளர்
எது நினைத்தாலும் எது சொன்னாலுமே
அதுவே வருமோ அதுவே சரியாகுமோ அதுவே பிழையாகுமே
இதிலே உழன்று இதிலே சுழன்று அதிலே
குணமாகி அதிலே சுகமாகி இதிலே நிலையுற்று வீண்
பொழுதிலே சுழன்று மிடியே நொடியே
வந்து மடிவதே பலனாமோ இதுவே விஞ்ஞான உலகமோ
இதுவே சுகமோ
இதுவன்றி மெய்ஞானம் கண்ட தவசீலர் எஞ்ஞான்றும்
நிறை கொண்டே உயர் கொண்டே
பொறியற்று சுழலற்று ஒளிபெற்று அருள் பெற்றிருப்பரே
மறைவுற்ற நிறைவுற்ற உண்மையது சிறையுற்றிருக்க
மறையற்ற நிறையற்ற உண்மையது சிறையற்றிருக்க
நிலைபேறு எங்கே தவப் பேறு எங்கே மகப்பேறு
மலப் பேறு இங்கே இறைவா கருணையது கொள்ளாயோ
வரமருள வருவாயோ அருளமுதம் தருவாயோ
நிறையமுத வானில் பிறைமதியும் நிறைமதியும் காட்டி
உறுதிபெற நிலையும் பெற வைப்பாயே
உகந்த கிரியுற்ற கந்தகிரி வேலே மயூரவரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெங்கோபம் வெங்காமம் வெங்குற்றம்
கொடிய திமிர் கர்வம்
தீங்குற்றம் எனில் வளராதிருக்க தொடராதிருக்க
அணுகாதிருக்க இறைவா நீ
அருள்வாயே
எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்து எங்கோ இருந்து
எங்கோ திரிந்து மறைந்து
எங்கோ சுழன்று வருமின்னலெனவாக மறைகின்ற
வாழ்வொன்றில் மயங்காதிருக்க
உழலாதிருக்க அருள்வாயே அருளின் ஒளியுற்று
அன்பின் முகிலுற்று கருணை மழை பொழியும்
கந்தனே உகந்தை துறையூரரனே மயூரவரனே.

விதியே பெருக்கெடுக்க இறைவா
ஜாதியே பெருக்கெடுத்து
பேதமே உருவெடுத்து போதமே தலை எடுத்து
வேதமே பல எடுத்து
கீதமே யதிலுதிக்க துதிக்க நின்ற பேரருளே
மெய்ப் பொருளே
பாதமே பற்றி நின்றேன் பாதகமே வந்திடாமல்
சாதகமே தந்தருள்வாய்
நாதமே உருவெடுத்து வேதமே திருவெடுத்து
ஓதவே கருணை வைத்த பெருமாளே
யாதுமே கதியில்லை பாழுமே இவ்வுலகில்
பாருமே நீ யென்னை
காருமே கருணை வைத்து தேறவே யென்ஆவி
திருவே நின் அருளை
பொழியவே தந்தருள்வாயே உகந்தை மலையாளும்
பெருமாளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைவழி போகேன் பாசமது கொள்ளேன் நேசமது கொள்ளேன்
சரவணப் பொய்கையது ஜோதிமயம் கொள்ள
ஒரு திருமுகமாகி வந்து அருளும் அறுமுகமாகி நின்ற பெருமாளே
நீசமுற வாழேன் வேஷமுற வாழேன் தோஷமுற
வாழேன் கோஷமது போடேன் வஞ்சகமும் செய்யேன்
இச்சகத்தின் எச்சுகமும் கொள்ளேன்
கதிவழியும் விதிவழியும் போகேன் உன் வழிகாண அருள் காண
உகந்தையது கொள்வேன் சண்முகப் பொய்கைமலர்
பெருமையது கொள்ள அருளமுதம் உண்ண திரு மலர்ந்து அருள்
மலர்ந்த திருக்குமரா
நித்தமும் நிமிஷமும் நின்பாத மலர் தொழுவேன் கந்தனே
சிவகாமி செல்வனே
தோஷமதில் மோசமதில் நொந்து நொந்தே வெந்து வெந்தே
உனை நினைந்து அழுவேன் விதிநினையேன் மதிநினையேன்
சோதியனே அழகு திருமேனியனே உனைநினைந்தே அழுவேன்
உனைநினைந்தே தொழுவேன்
காக்கும் அருள் கரங்கள் பன்னிரெண்டும் நீட்டியே
பார்க்கும் கருணை விழி பன்னிரு விழியுமே
திறந்து பார்த்தருள வேண்டுவனே காத்தருள வேண்டுவனே
உகந்த கிரி அருள் மலைமிசையதனில் கருணை
மழைபொழியும் வள்ளி குறவஞ்சி மகிழ் காண மலைமீதில்
விளையாடி வேல் ஓங்க வினை மங்கமயிலேறி
பறந்தோடி வருகின்ற மயிலேறு குகனே மயூரவரனே
உகந்தை துறையூரரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடு மலை நாடினாலும் சடைமுடி
தரித்திட்டாலும்
கனகமணி முடி சூடினாலும்
மாட கூட
மாளிகை மனைகளும் கூடகோபுர
கோயில்களுமே
கட்டிட்டாலும் தானதர்மங்கள்
செய்திட்டாலும்
ஞாலம் புகழ வாழ்ந்திட்டாலும்
வள்ளல் பேர்
எடுத்திட்டாலும் இறைவந்தனை
செய்திட்டாலும்
அறவழி விரதங்களே அனுஷ்டித்தாலும்
தலங்களே தரிச்சித்தே
தீர்த்தங்கள் ஆடினாலும் இறை
கிருபையே திருவையே
பாடினாலும் பாழும் மலம் குணம்
நீங்கிடாது
மனமது ஒடுங்கிடாது மனமது
தெளிந்திடாது
மனமது செம்மையுற்றே உறுதி
பெற நினைத்தே
அன்பது வன்மையாய் செம்மையாய்
தூய்மையில்
மெய்மையில் நிலைக்காவிட்டால்
அனைத்துமே
காகிதக் கப்பலுமே கட்டியதுமே
போலுமே
ஆய்விடும் இதுவன்றி ஆகாயக்
கோட்டையுமே
கட்டியதுமே போலுமே ஆய்விடும்
இத்தனையும் அத்தனையும்
வீணிலே போய்விடும் இத்தன்மை
எனை நாடாதிருக்க
அணுகாதிருக்க அருள்வாயே உகந்தகிரிப்
பெருமாளே
உகந்தை துறையூர் கண்ட மயூரவரனே.

10766


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானம் கண்டாலும் பரிணாமம்
கண்டாலும்
விண்ணிலே மதியிலே கோளிலே ஏகியே
வந்திட்டாலும்
வளமான அறிவிலே உயர்வான புகழிலே
மிதந்திட்டாலும்
பிறப்பொடு இறப்பாகி வருகின்ற
சுழல்கின்ற
பொறியிலே விரைவிலே அகப்பட்டே
ஆகவேண்டும்
அதுவன்றி விஞ்ஞானம் என்ன செய்யும்
பொருள் ஞானம்
என்ன செய்யும் புகழ் ஞானம் ஏதுசெய்யும்
அத்தனையும் பொய்யிலே சுழலுதப்பா
இத்தனையும்
முந்திய வினையாலும் பிந்திய வினையாலும்
மிஞ்சிய வினையாலும்
தன் தன் வினையாலும் நடந்தே
வருகுதப்பா
அத்தனையும் நல்வினை தீவினை கலந்தே
சுழலுதப்பா
கலவாத நல்வினைக்கு உதவவே பெஞ்ஞானம்
இருக்குதப்பா
இவ்வினையும் போக்கவே இறைநாமம் திருநாமம்
நிறைநாமம்
தூய அன்பதனில் வளருதப்பா இத்தனையும்
தூய்மையிலே
நிறையுதப்பா உகந்த மலைக் கந்தன் அருளுமே
இவ்விருள் நீக்கி
சுழல்கின்ற பொறிநீக்கி சுழலாமல்
உழலாமல்
காத்தருளுமப்பா அன்பே சிவம் அதுவே உலக
மகா சக்தி அதுவே சுகம்
இதுவே பேரின்பமே அதுவே தந்தாள வரமருள
வருவாயே உகந்த கிரிவரனே
மயூரவரனே ஸ்ரீவள்ளிகாந்தனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லுக்கும் முள்ளுக்கும் ஆளானேன்
சொல்லுக்கும் மல்லுக்கும் இரையானேன்
தில்லுக்கும் முல்லுக்கும் துயரானேன்
அல்லுக்கும் பகலுக்கும் நோயானேன்
சொந்த பந்தங்களின் தொடரானேன்
எத்தனை வினைகளோ அத்தனை வினைகளின் விருந்தானேன்
உகந்தா நொந்து நொந்து வாழும் நிலையானேன்
எத்தனை துன்பங்கள் அத்தனை துன்பங்களும் பெறலானேன்
என்நெஞ்சம் வஞ்சக வாழ்வுக்கு இலக்கானதே கந்தா துணிவொன்றும்
கனிவொன்றும் தந்தாளும் ஐயா எந்தனுக்கு எச்சமொன்றும்
வந்திடாமல் இச்சையொன்றும் தந்திடாமல் காத்தருளும் ஐயா
கந்தகிரி ஆளுகின்ற உகந்த கிரி வேலவனே.

பொய் வளர்க்க பொறி வளர்த்து
பொருள் வளர்த்து
மருள் வளர்த்து இருள் வளர்த்து
மெய்வளர்க்க
மெய்மறந்து பொய் விழுங்கி
மருள்விழுங்கி
பொருள் விழுங்கி இருள் விழுங்கி
பொய் வளர்க்க
மெய் மறந்து கணம் அலைந்து
குணம் கலைந்து
வினை விழுந்து பணம் உணர்ந்து
தனம் உணர்ந்து
கணம் கணம் அலைந்து தினம் தினம்
திரிந்து நிலை மறந்து
துணை மறந்து உனை மறந்து
கணமுனையுணர முடியாத
மூடமது மடமை தனைக் கொண்டுற்றேன்
கேடுற்றேன் கேடுதனைக்
கண்டுற்றேன் இறைவா மாடுற்ற
மேடுதனில் மேய்கின்ற
மாடானேன் மணியுமில்லை துணையுமில்லை
இடரற்று வீடுறவே நீ வரவே
உன் துணையெனக்கு தந்தருள வேண்டுவனே
கந்தனே உகந்த கிரி மிசை வீடுற்ற
நந்தா விளக்கே ஞானச் சுடரே மோன குருவே
நின்பாதரவிந்மே ஆதாரமெனப்
பற்றி நின்றேன் காத்தருள வேண்டுவனே
சோதியே சுடர் ஒளியே பரம்பொருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடுவர் வேடுவர் ஆடுவர் பாடுவர் கந்தனையே
நாடுவர் தேடுவர் அன்பர்கள் ஆடுவர் பாடுவர் கந்தனையே
ஓடுவர் தேடுவர் வேடுவர் வள்ளிவேலன் கந்தனையே
நாடுவர் தேடுவர் அன்பர்கள் உகந்தை முருகன் கந்தனையே
ஆடுவர் பாடுவர் வேடுவர் கருணைக் கந்தனையே
பாடுவர் ஆடுவர் அன்பர்கள் உகந்தை குமரன் கந்தனையே
உள்ளம்குளிர உள்ளம் மலர ஆடுவர் பாடுவர் உகந்தை கந்தனையே.

எல்லாம் ஒருவன் ஏழைக்கிரங்கும் தேவி கொளுநன்
இல்லா ஒருவன் அன்பர்க்கிரங்கும் சக்திவேலன்
பொல்லா வினையை அப்பன் அருளால் அழிக்கும் வீராதிவீரன்
கள்ளம் கபடம் காணா திருவன்பர்க்கிரங்கும் கந்தன்
குள்ளமுமறியா குறையுமுணரா தன்பர் வினை தீர்த்திடும் முருகன்
காடு மேடு பள்ளம் பாரா நாடிவிழைகின்ற பக்தர்குறை தீர்த்தருளும் ஐயன்
வீடு வீடென காடு காடென பேதமை யறியாவடியவர்க்கன்பன் முருகன்
தேடும் பொருளும் வீடும் புகழும் சுகமுமுணரா சுந்தரவடியவர்கருளும் குமரன்
கானம் பொழிகின்ற வானம் புகழ்கின்ற வங்கம் ஒலிக்கின்ற
உகந்தை அருள்கின்ற பெருமாளே.

உண்டிபதம் காண வண்டி உருண்டோட
நொண்டி நொண்டி உனைநாட
தெண்டி தெண்டி யென ஜெகம் காட்ட
மன்டி மன்டியென் நின் அருள் வாட்ட
வேண்டி வேண்டியே உனைநாட பன்றி பன்றியது
மருண்டோட மறைந்தோட
மண்டி மண்டியே யிருந்தனைத்து வினையுமே
பறந்தோட வருந்தோடி உனை நினைந்தோடி
எனை மறந்தோடி பறந்தோடி வருவேனே
உகந்த மலையானே கருணை மலையானே
உன் அருள் வேண்டி விழைந்தோடி வருவேனே
நின்பாதார விந்தமே கதியாக வேண்டுவனே
உகந்த கிரி மலையுற்ற ஸ்ரீவள்ளி காந்தனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பாகி உணவாகி ஊனுமாகி
சலமாகி மலமாகி
வியர்வுமாகி ஊனிலே உருவாகும்
எழும்புமாகி
பலதுமாகி சிந்துகின்ற
விந்திலே கருவுமாகி
கருவிலே உருவாகும்
உடலமாகி
உடலமதில் தரிக்கின்ற உயிருமாகி
தான்தேடும் பொருளின்
பொருளாகி பொருளிலே உழல்கின்ற
சுழல்கின்ற
வினையுமாகி நோயாகி நொடியாகி
மடிகின்ற உடலாகி
விடிவற்ற துணையற்ற உயிராக
தனியாக பேயாக
அலைகின்ற சுழல்கின்ற நிலையான
தான் தோன்றிதான்
தோன்றா முடிவற்ற வாழ்வென்ற
பொறியில்
அகப்பட்டு நோப்பட்டு மடமுற்று
திடமற்று இடமற்று
வாழாதிருக்க அருள்வாயே
உகந்தை துறையூரரனே
மயூரவரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவிலே பாலெடுத்து பாலிலே தயிரெடுத்து
பாலிலே மோரெடுத்து
பாலிலே நெய்யெடுத்து பாலிலே பலதும்
செய்து
வாயிலே போட வைத்த அருளாளா
நாவிலே
சொல்லெடுத்து அதிலே பலதும்
வைத்து
பொருளும் வைத்து அதிலே எழவும்
வைத்து
அதிலே விழவும் வைத்து நாவிலே
ருசியும் வைத்து
அதிலே சுகமும் வைத்து அதிலே நோயும்
வைத்து
சாவிலே பலதும் வைத்த பெருமாளே
விறகிலே
தீ யெடுத்து விரைவிலே உணவு செய்து
நிறைவிலே
உறவு வைத்து தீயிலே உற வளர்த்து
தீயிலே அருமை வைத்து
தீயிலே பெருமை வைத்து தீயிலே பொருள்
வளர்த்த பெருமாளே
நீருமே காற்றுமே துணை வளர்க்க
காற்றிலே
உறவு வைத்து உணவளித்து நீரிலே
காற்றிலே
அருமை வைத்து பெருமை வைத்து தீயிலே
நீரிலே காற்றிலே
மூவிலே உடல் வளர்த்து உயிர் வளர்த்த
அருளாளா
மூன்றிலே ஐந்திலே உறவு வைத்து
அனைத்துமே
அதில் அடக்கியே தொடக்கியே அவனிதனை
சுழல வைத்த
உழல வைத்த அருள வைத்த கருணை வைத்த
அருளாளா
ஐந்திலே வினை வளர்த்து ஐந்திலே உனை மறந்து
நொடியிலே மிடி வளர்த்து
மடியிலே இடையிலே சேய் பிறந்து துடியிலே
வினை வளர்த்து இடியிலே முடிசுமந்து
தடியிலே தள்ளாட முடிவிலே விடிவிலே இறப்பிலே
பிறப்பிலே தொடரிலே யெனை
மாட்டா திருக்க அருள்வாயே
ஆறிலே அறிவு வைத்து உன்னிலே
பொருளும் வைத்து ஆறிலே அருள் வளர்த்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனை நினைக்க நொடியிலே ஆறிலே
உறவளர்த்து நேரிலே யெனைக் காக்க பாரிலே
நீல மயிலே நீ வரவேண்டும்
ஆறுமுக வடிவுற்று அருளும் வேலுற்று கருணை ஒளிபாயும்
உகந்த கிரியுற்ற பெருமாளே.

தன்கர்வம் துணைகொள்ள தனைவெல்ல
தனை மெல்ல தனைக்கொல்ல
வினைமிருகம் கணமாட தனமிருகம்
தினமாட
பணமிருக மெனவாக வனமிருக
விஷமிருக வெனவாக
குணமீறி பொருள்மிருக விஷம் சீறி விளையாட
ஆசை அலைமோதி எழ
பாசவலை வீசி நின்றாடவே நேச அலை கொண்டாடவே
நீதி ஒளி இருள் மருளும்
கண்மறைக்க சத்தியத்தின் தெய்வஒளி
தனைமறக்க உனைமறக்க
வாழ்கின்ற வீழ்கின்ற யமவாழ்வு
நியமமென அறியாது
புரியாது துறைதவறி முறைதவறி
குறையேறி மிதித்தாள
வாழ்கின்ற மூழ்கின்ற பொருளாகி
தாழ்கின்ற வாழ்வாகி
உறைகின்ற உழல்கின்ற வினையதுவே
தஞ்சமென மஞ்சமென
கொண்டாடி மன்றாடி திண்டாடி வாழ்வோரும்
இது நாளில் கண்டேன்
ஐயனே சிவகாமி செல்வனே அது நாளில்
என் இருள் மாறி
மருள் மாறி எனையாள வந்த குருவே இறைவே
நின் கருணை ஒளி
அருளின் ஒளி எனைக் காத்து எனைப்பார்த்து
துணைவார்த்து
சந்ததமும் எனை வந்து துணை தந்துகாக்க
வேண்டுவனே
கந்தப் பதிமேவும் ஸ்ரீவள்ளி காந்தனே
மயூரவரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றதும் உற்றதும் பெற்றதும்
எந்நாளோ
விற்றதும் வினைசுமந்ததும் முற்றும் துறந்ததும்
தன்னாலே எந்நாளோ
அந்நாளோ இந்நாளோ என்வினை பெருகவே
உடல் உலறியே
அலறியே ஆவிநிலை பதறியே உருகவே
சுமை பெருகவே
துயர் ஓங்கவே மனம் குதறியே விதறியே
சிதறியே துயர் தனில்
மூழ்கவே தாழவே விடாதெனை மீளவே
காத்தருள்வாயே
கருணை பதிமேவும் உகந்தப்பதியாளும்
கந்தப் பெருமாளே.

தந்திரங்கள் மந்திரங்கள் ஏது செய்யும்
தரணிபுகழ் கல்வி செல்வம் வீரம் ஏது செய்யும்
பட்டம் பதவிகளும் ஏது செய்யும் கொட்டும் புகழும் ஏது செய்யும்
ஏதுமறியாத ஏழைக்கு இரங்காத போது
யாருமறியாத பேதைக்கு உதவாத போது
பேரும் உணராத மனிதர்க்கு அன்பு செய்யாத போது
விண்ணிலே மண்ணிலே சொல்லிலே எது இருந்தென்ன
நூலிலே வாயிலே நினைவிலே எது இருந்தென்ன
உன்னிலே உழைப்பிலே உயர்விலே எது இருந்தென்ன
கற்றவரும் மற்றவரும் நல்லவரும் விரும்பாத வாழ்வு
உற்றவரும் உறவினரும் உலகமும் போற்றாத வாழ்வு
பெற்றவரும் அறிவு தந்தாண்ட வரும் மதியாத வாழ்வு
ஒரு நொடியில் மின்னலென மறைகின்ற எம்வாழ்வு
உணராத திருந்தாத புத்தியாளர் என்றுமே பழிக்கின்ற
இழிக்கின்ற வாழ்வொன்று எதற்கு வேண்டும்
இதை எந்நாளும் எக்கணமும் நீ உணர்த்த வேண்டும்
ஐயனே மனிதன் மனிதனாக வேண்டும் அப்பனே இதுவன்றி
மனிதன் தேவனாக வேண்டும் அருள் முருகா மறைபோற்றும்
இறைவா நீ துணை செய்வாயே உகந்த மலைப்பெருமானே
காத்தருளும் ஐயா கருணையே செய்தருளும் குமரா
அருளுமே தந்தருளும் திரு முருகா கந்தப்பதிமேவும்
உகந்தைப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மையென வந்து நிற்கும் தர்மம்
போர்வையென வந்து விளையாடும் கர்மம்
நேர்மைக்கும் போர்வைக்கும் வேறு தெரியாத
அப்பாவி மக்கள் இங்கே வாழ - எங்கும்
தங்கமென போர்வைக்கு பூசைபோடும்
இவ்வுலகம் இருளானது என்றோ? அன்றே
கலிவந்து கலந்த நாளோ அன்றே - போலிக்கு
வேலியென வந்து காக்க - கணத்துக்கு
நல்லானுக்கும் இல்லாத தொல்லை தருகின்ற
மதியே பெருகி துயரத்தின் உச்சமதில்
விளையாடாநின்ற பொருளன்றோ
விதியாலே நிலைமாறி நிலைத்து நிற்கும்
அதுவே தான் கதியாகவே மலரா நின்ற
இம்மண்ணுக்கே இயல்பான துணை வந்துமே
நில்லா நிற்கும் இல்லாதானுமே உள்ளானுமாகியே
நல்லானுமே பொல்லானுமாகியே பொல்லானும்
மதிக்கின்ற ஒருவனுமாகியே எந்நாளும்
மலிகின்ற வேளை இது ஐயா அந்நாளே
இந்நாளோ உகந்தைப் பதிவேலா
இந்நாளில் எந்நாளும் எனைக்காத்தருள வருவாயே
கந்தப்பதி மேவும் உகந்தைப்பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிதனம் மறவீரமுளரோ
  மனமாயை
மாய்க்கவே உணர்வரோ
  ஐம்பொறி
ஜெயிக்கவே வருவரோ இறைவா
  அறவழி மறவழி
உணராதபேருமே மானம் புகழ்
  தன்னுமே ஏனோ தேடுவதும் இறைவா
வீண்பொருளற்ற பயனற்ற கதியற்ற
  சாதி மத பேதமதும் ஏனோதேடுவதும்
இறைவா இம்மண்ணிலே மாந்தரே
  இவை தன்னிலே இது தன்னுமே
கண்டபலன் என்னவோ சுகம் என்னவோ
  இறைவா
ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் ஜோதியே
  இவையே என்னிலே என்றுமே
வாராதிருக்கவருள்வாயே வள்ளிவளநாடுகந்த
  பதியே
அரிய வரமருள வரும் ஸ்ரீவள்ளிகாந்தனே
  கந்தனே உகந்தனே
அருள்ஜோதி கற்பக மங்கள முனிவீரனே
  மயூரவரனே
உகந்தைதுறையூரரனே.

மெய்யே வளர்க்கவருள் மெய்யே
  இனிக்கவருள்
மெய்யே மதிக்கவருள் மெய்யே
  துதிக்கவருள்
ஐய்யே அரியவரமருளவரும்
  நின்கையே வினைஅறுக்கும்
நம்பியே நலம்வளரும் தூயமென்மையே
  இனிமையே அன்பிலே பண்பிலே
பணிவிலே தன்னிலே அருளே பொருளே
  கந்தன் வேல் எடுக்கும்
அருட்சக்தியே முக்திக்கே வழிஎடுக்கும்
  சித்திக்கே அப்பன் வேலே துணை இருக்கும்
கந்தனே கலியுகம் காக்கவரும் கருணை மாகடலே
  உகந்தனே சிவகாமி செல்வனே
மயூரவரனே உகந்தைதுறையூரரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யே உய்யவே ஐய்யே என் ஆவியே
என்நாவிலே கனவிலே நனவிலே
உன்திருநாமமே ஒலிக்கவே தொனிக்கவே
அருள்வாயே
எந்நாளுமே எக்கணமுமே உன்திருநாமமே
ஒலிக்கவே இனிக்கவே கேட்கவே
அருள்வாயே உகந்தப் பதிமேவும் பெருமாளே
என்றுமே என் கண்ணிலே
கருத்திலே நின்கருணை வடிவமே காணவே
கருணை செய்வாயே
ஐயனே அருள்முருகனே என்மூச்சிலே பேச்சிலே
நின்னருளே மணக்கவருள்வாயே
சோதிப்பதிவேலே கருணை மலைவாழும்
உகந்தகிரியானே
மயூரவரனே உகந்தைதுறையூரரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறப்பு, பிறப்பு நிலை

வீடிலா வீணிலா பிணியிலா பெருமானே
கேடிலா உறவிலா மூப்பிலா ஆனந்த
உறைவிடத்தின் மூலப் பொருளே கருணை வடிவே
கசடிலா களங்கமிலா கவலையிலா
மீடிலா இடரிலா பிறவியிலா என்றும்
இறப்பிலா நிலைதந்தாள அருள்வாய் ஒப்பிலா
வேலே கந்த கிரி ஆளுகின்ற உகந்தைப் பெருமாளே.

மதி பெற்று நிதிபெற்று பதிபெற்று
புகழுற்ற மண்ணுவாழ் மானிலத்தார்
கதிபெற்ற தெங்கே? களிபெற்றதெங்கே?
நிறைவுற்றதெப்போ? துயர்விட்டதெப்போ?
துணிவுற்ற தென்றோ? துயர்விட்ட தென்றோ?
கிழிவிட்டதெங்கே? குழிவிட்டதெங்கே?
குறிகண்டதெதுவோ? குடல்கண்டதெதுவோ?
உடல் உற்றதெதுவோ? உளமார
உயிர்வாழ எதுவாழ வாழ்ந்தீர்?
இனியுற்ற சுகம் என்ன? இதில் கண்ட
பலன் என்ன? மனம் விட்டுச் சொல்ல
மகிழ்வுற்றுச் சொல்ல மரணத்தின் முடிவை
தடுத்தாண்டதெப்போ? மயல் குடிகொண்ட
மனந்தன்னில் பேயாட்டம் ஆடும் மும்மலரின்
உறவும் உனைவிட்டதெப்போ?
நிலையற்ற வாழ்வும் வாழ்வென்ற நினைவா? அன்றில்
கனவா இல்லை நனவா? இறைவா
உகந்தைப் பதியுற்ற அமரே அருள் வீசும் ஒளியே
என்நிலை கண்டு என் திகில் மாற என்கரிய முகில் ஓட
நின் அருள்வீசி அருள்வாய் உகந்தைப்பதி கொண்ட இறைவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலையாமதில் நிலையாமல்
நிலையாமதில் திளையாமல்
வினையாமதில் விளையாமல்
நிறைகொண்டே
குறையாமதில் குழையாமல்
குறைகொண்டே
நிறையாமதில் இணையாமல்
விரைகொண்டே
இறைவா எனைக் காத்தருள்வாய்
மலையாமதில் உறைகின்ற
நிறைவாமதில் தருகின்ற
உறவாமது புரிகின்ற
இறவாமது பிறவாமது தந்தருள்வாய்
குறமாது வனமாது மகிழ்கின்ற
உமைமாது பெற்ற குமரோனே
உகந்தகிரியுற்ற வேலோனே.

10766

கருவூர் உடலூர் என நின்று
பிறவூர் வளவூர்
எனக் கண்டு கற்றூர் வாயூர்
வயிற்றுரெனக் கொண்டு
உறவூர் மறவூர் ரெனவுழன்று
மறையூர்
மாயூரென வலைந்து தொடராது
திரியாது சுழலாதிருக்கவருளே
கடலூர் கரைகண்டு மலையூர் தனிலுற்று
அருளூர் கொண்டு பொருளூர் வந்து
கருணையூர் பொழிய அன்று திருவூர்
நிறை கண்ட உகந்தை
மலையூர் திருவூற்ற பெருமாளே.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றுவதும் வேதனை தோன்றி மறையா
திருப்பதுமே சோதனை
தோன்றி மறைந்தாலும் தொடர்வதுமே
சோதனையே வேதனையே
இம்மேதினியில் அத்தனையும் வேதனை அத்தனையும்
சோதனை
கந்தா கருணை மழை பொழியும் உகந்தவேலே
இத்தனையும் எந்நாளும்
அலலுவேனோ உழலுவேனோ எந்நாள்
வருமோ
கரைகாண அந்நாள் தருவாய் விரைவாக
நிறைவாக
திருவே கிருபை செய்தருள்வாய் எந்நாள்
வருமோ உனைக்காண
உனைச் சேர இதுநாள் பறந்தே வர
வேண்டும்
அதுநாள் விரைந்தே வரவேண்டும்
கந்தா கருணை செய்தருள்வாயே
உகந்தா நிரந்தா துரந்தா அருளும் தந்தருள்வாயே
இனிதே வந்தே காத்தருள்வாயே
புனிதே புகழும் அருளும் திகழும்
உகந்தைதுறையூரரனே
மயூரவரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவனும் அல்லேன் பெறாதவனும் அல்லேன்
கொற்றவா உகந்த மலைக்கதிபா
குறுநகையோடு அருள்நகை காட்டி எனை ஆண்ட
அருப்பெரும் ஜோதியே சுகானந்தனே
இப்பிறவி வேண்டிலேன் எப்பிறவி வேண்டிலேன்
தனிப்பொருஞ் ஜோதியே சச்சிதானந்தனே
தவஞான முணரிலேன் எஞ்ஞானம் உணரிலேன்
தவப்பெருஞ் ஜோதியே தவஞான பண்டிதா
பொன் பொருளும் வீணே புகழ் பொருளும் வீணே
சொந்தமும் பந்தமும் இருந்தென்ன
மனைவி மக்கள் பட்டம் பதவிகள் இருந்தென்ன
எமன் வரும் போதினிலே எதுவும் அற்ற
பொம்மையுமாகினேன் நன்மையும் தேடிலேன்
வெறுமையே தருணமாய் வந்திட
வகையுமறிகிலேன் தொகையுமறிகிலேன்
பற்றிடப் பற்றிட பாவமே வந்திட
சுற்றியே சூனியம் நின்றிட செய்பாவமே துணைவந்திட
கொல்லுதே துயர வேதனை நன்னுதே நரக வேதனை
துன்பமே தொடர்ந்திட கன்மமே வந்திட காலனும் வந்திட
எமகாதரும் வந்திட்ட வேளை
ஏழையிலும் ஏழை கோழையிலும் கோழை மூடரிலும் மூடன்
ஆய்விடும் போதிலே காக்க யார் இனி
எந்தனுக்கு உற்றதும் உணரிலேன் கற்றதுமுணரிலேன்
காலனை என் கண்முன்னே காணவே
காய்ந்து சுருங்கியதென் நெஞ்சமே அஞ்சியே அஞ்சியே
கலங்கிடும் என்ஆவியின் நிலையிலே
பாவியாகியே துணையுமற்றிலேன் பரமனைப் பற்றிலேன்
அந்தநாளிலே எந்தநாளிலும்
வீணிலே மாறினேன் கண்டது பற்றினேன் கரையுமடைந்திலேன்
கசடுகள் நிறைந்திட முரடனுமாகினேன் மூடனுமாகினேன்
இக்கணத்திலே என்னது செய்வேனோ ஏங்கிட ஏங்கிட
உயிரை வாங்கிட வாங்கிட
நெருங்கிவரும் எமன்வேளை யாது உளறியும் யாது குழறியும்
கண்டது என்னவோ சுற்றமும் உற்றமும் சுகமும்
யாவும் பறந்தது யாவும் மறந்தது தென்திசை கண்டதும்
விண்திசை காண்கிலேன்
சூழலும் விட்டது சூழ்ந்ததும் விட்டது யாதும் அற்றதும் ஆகினேன்
ஆவியே பாவியே அலையும் யாக்கையின்
வாழ்க்கையின் முடிவு வருமெனத் தெரிந்தும் அருமையறியா
ஆவியின் மடமையின் உடமை தொடருமே இனியும்
இதுநிலை அறியா முதுநிலைகண்டு மதுநிலை வீழ்ந்துவிடாது எனைக்
காத்தருள் கந்தா கருணையின் வடிவே
உகந்தைமலை மேல் விளங்கும் நந்தா விளக்கே கந்தா கடம்பா
சிந்தா மணியே அருள் துணைவந்து
அரிதுயில் நீத்து இறுதியில் காக்கும் நின்பதமலர் போற்றி போற்றி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி இருந்தென்ன செல்வம் இருந்தென்ன
ஐயா வீரம் இருந்தென்ன
உள்ளம் உனைஅறியாத கள்ளங்கபடு
கசடாக தன்னையே உணராத
தரணி புகழ் இருந்தென்ன பட்டம் பதவி
இருந்தென்ன உகந்தமலை நாதா
உள்ளம் தெளியாத அன்பு நிறையாத
பண்பு புரியாத கருணைஇலா
மாந்தர்க்கு காரிருளே துணை வந்து சேரும்
உனை உணராத பேருக்கு
பந்த வினை நிறைந்தாட கொல்லும் வினை
உறவாட கழிகாலன்
வரும்போது இரையாகும் மாந்தர் இவரே
கந்தனை நினைக்கவே பந்தவினை மாறும்
கொல்லும் வினை ஓடும் ஐயன் முருகன் அருள்
பெற கந்தன் கருணை வர
முக்காலும் தவம் வேண்டும் உற்றாரும்
உறவினரும் இக்காலும்
இறந்திடுவர் எக்காலும் இறந்திடுவர் மனைவி
மக்கள் புகழ் பொருளும்
இக்கணமே அழிந்து விடும் எக்கணமும் அழிந்து விடும்
எக்காலும் அப்பன் அருள் இருக்கும்
எங்கள் குறை தீர்க்கும் கந்தன் எக்காலும் எக்கணமும்
துணை இருப்பான் நம்பினோர் நலமானோர்
நம்பா நிலையானோர் நரகத்தின் துணையானார்
கனகமணி மேனியனே உகந்தனே
தங்க மயிலேறி அருளும் வேலுடனே எமைவந்து
காத்தருள வேணும் துணை என்று
நம்பினோர் இகபர துயர் தீர்த்து நிலைபெறு
சுகமருள கருணையின்
ஒளிவிளக்கே காத்தருள் கந்தா கந்தப்பதிமேவும்
உகந்த மலை தனிலுற்ற பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமிலா பந்தமிலா நேசமிலா
    தேசமிலா தோஷமிலா
யாக்கையே என் வேக்கையே எந்தனுக்கு
    வேண்டுவதே
மாண்டுவதோ மண்ணில் பலகோடி
    தீண்டுவதோ என்னில் பலகோடி
வேண்டுவதோ ஆசைவழி தோண்டுவதோ
    பாவ வழி
மண்ணில் ஆண்டவரும் மண்ணிலும்
    கோடி
இன்னும் ஆளுவருபவரோ கோடியிலும்
    கோடி
மண்ணிலும் பலகோடி எண்ணிலும்
    பலகோடி
இம்மண்ணில் ஆள நினைப்பவரே மாள
    இருப்பவரே
தொடர இருப்பவரோ படர இருப்பவரோ
    மீள வருபவரோ
சுழலவருபவரோ இதிலும் எத்தனை
    எத்தனை கோடி
இறைவா எனைக் காத்தருள்வாயே
    உன்னில் சேர்த்தருள்வாயே கந்தா
உகந்தை துறையூரரனே மயூரவரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கிலி அறவேவரும் கிழி அகலவே
உகந்தை குமரனருள்
நீலமயிலே ஏழை எனக்கொரு வழி
சொல்லாயோ
பிறப்பிலும் இறப்பிலும் படர்கின்ற
அவனியிலே
தொடருமென பவனிவரும் வினை
செய்யும் கிழி செய்யும்
மரணமது வினைசெய்ய தருணமது கிழி செய்ய
வருமிந்த மரண சங்கிலி
தன் வேரறுக்க தொடரறுக்கவே
உகந்தை குமரனருள்
நீலமயிலே ஏழையெனக்கொரு வழி சொல்லாயோ
கணம் கணம்
தினம் தினம் வருமிந்த தொடர் சங்கிலி
அறவே
தருமிந்த கொடுங்கிழி அகலவே உகந்தை
குமரனருள்
நீல மயிலே ஏழையெனக்கொரு வழி
சொல்லாயோ
அருட் திருக்குமரன் திருவடியே
சரணமெனப்
பணிந்தேன் வரமருள வருவாயோ
திருவருளும் தருவாயோ
அசையாத வேர் கொண்டதிறம் கொண்ட
மரணச் சங்கிலி அறவே
மறையாத மருட்டி வரும் இருட்டிவரும்
தொலையாத நியதியென
மிரட்டி வரும் மரணப்பயம் அகலவே
இக்கணமே
ஐயன் வேல் கொண்டறுத்தருளவே
சொல்லாயோ
ஒப்பிலா வேல் கொண்ட உகந்த கிரிவேலின்
துணையெனக்கு சேராயோ
உகந்தை குமரனருள் நீலமயிலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூண்டுக்குள் அகப்பட்ட கிளிபோலானேன்
இருளுற்ற குகைபோன்ற உடலமதில் சிக்குண்டு
சிறையில் அகப்பட்ட கைதியானேன்
திக்கொன்றும் தெரியாத திசைமாறும் பறவையானேன்
உற்ற துணையற்ற வகையற்ற தவித்திருக்கும்
தனித்திருக்கும் குற்றவாளி போலுமானேன்
பிறப்பென்ற பொறியினுள் அகப்பட்டு
பொறிகலங்கும் நிலையுமானேன்
இறப்பென்ற விடுவிப்பு வருகும் வேளை பிறப்பென்ற பொறி
யிலடிபட்ட வேதனையில் துவண்டுபோவேன்
அதுவன்றி ஐயனே கொடிய இருளென்ற மலந்தன்னில்
பொறிகலங்கி துறைதவறி திசைதவறி
என் ஆவி பேயாகி பதறாமல் சிதறாமல் சுழல்வண்டு போலாகி
திணறாமல் சுழலாமல் உழல்கின்ற பிறவி என்ற பொறியதனில்
சிக்கிடாமல் நிழல் போல் நின்று காத்தருள வேணும்
உகந்த மலைக் கந்தா வள்ளிமலை வேலா தோணிமலையப்பா
மஞ்சள் மலை நாதா கருணை பொங்குமலை உகந்தா
கருணை விழி அழகா அன்பென்ற மயிலேறி அருள் என்ற
ஒளியுற்ற வேலாகி என் இருள்மாற
ஒளியூட்ட வேண்டும் திசைகாட்ட வேண்டும்
நின் பன்னிரு கருணை கண்ணாலும் பார்த்தருளி அபயவரமருளும்
பன்னிருகையாலும்
கருணையுற வருளி என் ஆவி துவழாமல் பதறாமல் சிதறாமல்
நின் பாதாரவிந்தமதில் அன்புற்று
இன்புற்றிருக்க நீயருளவேண்டும் உகந்தைப் பதிகண்ட
கலியுகத்தின் கண்கண்ட தெய்வமே உகந்தைப்பதியமர் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழற் பொறியிலே அகப்பட்டேனோ
குறைப்பட்டேனோ இறைவா
கொல்லன் உலைப் பொறியிலே வகைப்பட்டேனோ
கைப்பட்டேனோ இறைவா
இச்சகம் தனிலே இச்சையே துச்சமே
கொள்வேனோ இறைவா
என் ஆவிசுழற் பொறி காணவே கதிகலங்கி
மதிதெளிந்து அச்சமே கொள்ளவே அருள்வாயே
இருள் வாழ்வில் மருள் வாழ்வில் பொருள் வாழ்வில்
இச்சையே நிச்சமே கொள்ளாதிருக்க அச்சமே தந்தருளாவாயே
சுழற் பொறி கழறவே துச்சமதாகியே உலைப் பொறியே
என் தவிப்பதமாகியே அச்சமதாகியே
உணரவே தெளியவே எனக்கருள்வாயே கந்தனே
உகந்தனே சிவகாமி செல்வனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணம் மகிழ்வாரும் குதுகலம் தருவாரும்
ஒரு கலம் உண்பாரும்
இதுகாலமே வருவாருமே உறுதி பெறுவரோ? இறைவா
அடைக்கலம் தருவாரும்
படைக்கலம் தருவாரும் நெடுங்காலம் துணைதந்து
திரிவாரும் புகழ்வாரும்
கொண்டாடி மகிழ்வாருமே நித்தம் நிலை பெறுவரோ?
இறைவா
பெற்றோரும் உற்றோரும் உறவினிய
மனைவி மக்கள் உடன் பிறப்போரும்
நட்பின் நிலை அன்பின் நிலை காண்போரும்
இறுதி பெறுவாரோ? இறைவா
ஓர் வீட்டில் இருப்போரும் ஓர் நாட்டில் இருப்போரும்
ஓர் உலகில்
இருப்போரும் பொன் பொருளும் புகழும் கொண்டாட
வருவோருமே
ஐவிருளின் அலையில் அகப்பட்டு அலைந்து
திரிவோரும்
இப்புவியில் தஞ்சமென நினைக்குமோ நெஞ்சம்
இனிக்குமோ நம்புமோ? இறைவா
கூற்றுவன் வரும் போது இத்தனை பேருமே அத்தனை
பேருமே உதவவே வருவரோ? இறைவா
இப்பாவி கொண்டாடும் இப்பாழும் உடல் தன்னை
கொண்டேகவே வருவரோ? இறைவா
ஊன் உடலும் அழிந்து விடும் மாண்புகழும் ஒழிந்துவிடும்
எனக்கிட்ட பெயர் நாமமே
ஒதுங்கிவிடும் மரணமே வந்திட்ட வேளை கட்டைக்கே
சுடுகாடு நிஷ்டைக்கே நின் அருள்காடு
தஞ்சமென வுணர்ந்தேன் பெருமானே அன்றைக்கே
என் இருள் காடு காணவே
இக்கொலைக் காடு புகுவேனோ இறைவா இன்றைக்கே
நின் அருள் காடு காணவே
உன் புகழ்காடு காணவே நின் உகந்தைக்கு விரைந்தோடி
வருவேனே
என் இருள் காடு தொலையவே தஞ்சமெனக் கருள்வாயே
ஒப்பிலா வேலே உகந்தைப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணாகதி நிலை

தஞ்சமது காட்டுகின்ற பரமன் புகழ்
நாட்டுகின்ற
நெஞ்சமது ஊட்டுகின்ற நிமலனருள்
போற்றுகின்ற
கொஞ்சும் மதுர மழலை அமுதமொழி
பேசுகின்ற ஆதிசிவன் புத்திரனே
இனிய தமிழோங்க வந்த இருளும்தனை
மாற்ற வந்த
கருணையருள் அமுதளித்து நிறைஞான
நீரளித்து மறைஞான
நிலையளிக்க வருகின்ற ஆனந்தப் பேரொளியே
உகந்தை மலை மீதுதித்த
ஜோதி வடிவான கந்தனவன் ஒப்பிலா வேலனவன்
அருள்கின்ற திருஒளியே
கந்தா கடம்பா கார்த்திகேயா உகந்தா
முருகா குமரா
அமரா பதியே நின்தாள் சரணம் ஐயா பிறை
மதிசூடிய
பெருமான் அருளிய பாலகுமாரா
புள்ளி மான் பெற்றெடுத்து
மகிழவே வள்ளியம்மான் கண்டெடுத்த
கருணை அருள்ஒளியே
காத்தருள வேணும் ஐயா முந்தை
வினைமாற
உகந்தைப் பெருமானே இக்கணமும்
எக்கணமும் உந்தனருள்
மாறாதிருக்கவருள் புரியவேணும் ஐயா
கந்தப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பொறியின் ஐங்குறியின் கொடுங்குறியின்

அடிமை அல்லேன்

தீக்குறியின் பாழ்குளியின் பரவசத்திலடிபட்ட இடிபட்ட

பாவியுமல்லேன்

பெரும் பிழையும் பெரும் புகழாய் பெருமிதமாய்

ஒருமனதாய் இருமனதாய் ஏற்கின்ற கோழையுமல்லேன்

வரும் பிழையும் கணப்பொழுதில் அவப்பொழுதில்

ஒரு நொடியில் தன்மடியில் ஏற்றியே போற்றியே

மாற்றியே வாழ்பவனும் யான் அல்லேன்

கன்னமிடவருவார்க்கு கிண்ணமிட வண்ணமிட தின்னமிடும்

திருவேட்டிக் கள்ளனுமே யான் அல்லேன்

கொள்ளை கொள்ளும் சிறுகுடலும் பெருங்குடலும் மோப்பமிட

ஏப்பமிட செல் பொழுதில் நிகழ்பொழுதில் வரும் பொழுதில்

அடிமை கொண்டு பெருமை கொள்ள ஏமாந்த சோணகிரி

வித்தகனும் அல்லேன்

என்சித்தத்தில் குடிகொண்ட சிறியாரும் பெரியாரும்

எனக்கில்லை கந்தா என்பித்தமதில் சித்தமதில்

குடிகொண்ட உனையன்றி வேறில்லை எனக்கில்லை கந்தா

உன் திருப்பாதம் சரணமெனத் துணிந்தேனே

பணிந்தேனே அணிந்தேனே உகந்தைப் பதிகொண்ட சிவகாமி

செல்வனே அபிராமி குமரனே மயூரவரனே

உகந்தை துறையூரரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றது பார்க்கிலேன் உலகம் போற்றிலேன்
நரகம் வீழ்ந்திடேன் நமனுக்கும் அஞ்சிடேன்
வீண்பெருமைவிரும்பிலேன் வீண்புகழும் விரும்பிலேன்
பொன் பொருளும் ஆகிலேன் மண்பொருளும் ஆகிலேன்
செருக்கும் அற்றிலேன் கர்வம் கொண்டிலேன்
ஊண் உணவும் உறக்கமும் வேண்டிலேன்
இப்புவியின் சுகம் அனைத்தும் தேடிலேன் ஐய
நின் அருள் நாடியே நின்பதம் தஞ்சமென நெஞ்சம்
வேண்டினேன் வீண் பொழுதும் வேண்டிலேன்
வீண்வம்பும் நாடிலேன் தேன் பொங்கும்
மதுரமொழி தந்தாளும் உகந்தா
தீன் தமிழின் அழகா யாழினிய வேலா நின்
பாதார விந்தமே ஆதாரமெனக்கருளும் கருணை விழிஅழகா
நிலையற்ற இவ்வுலகில் நிலை கொண்ட இறைவா
கலியுகத்தின் கண்கண்ட தேவே அன்பதனில் நிலை
கொண்ட பெருமான் நின்பதம் அபயமெனக்
கருளும் அருளொளியில் நடனமிடும் குமரா
திருவிலுருவாகி வந்து அருளின் பொருளாகி நின்று
அரிய தவஞானமுயர் குலவு தேவி கரம் பற்றும்
மயிலேறு குகனே மனமாயை மாய்க்க அருளும்
திருவேல் கொண்ட ஒப்பிலாவேலே உகந்த நாதா
நினைநம்பு மடியவர்க்கு நிகரில்லாத நிலையளித்து
வினையளித்து உகந்தை கிரியுற்ற தேவே நின்பதம்
சரணமடைவார்க்கு ஏது குறை ஏது பயம் கந்தா
நின் நிதியுற்ற நின் கதிபெற்ற பேருக்கு கவலை
இனிவருமா? ஈடு இணைவருமா? உகந்தைபதி நம்பும்
நாயெனக்கு விதியொன்று வருமா? வினையொன்று
வருமா? நின்துணையெனக்கு உறுதி பெற
வழி காட்டு கந்தா உகந்தை பதியுற்ற தலைவா
கந்தப் பதிமேவும் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமே இடமாக கணமே
உன்
நினைவாக களமே கண்ட
கடலே
உடலே தடையாக இனி
வருமோ
உனை நாடதடமே தென்னிலே
இட்ட
பெருமாளே உடமே எனக்கு
நீயே
சதமே கதி எனக்கு நீயே
வனமே
உனக்கு தலமாய் அருளே
பொருளாகி
வந்து அதுவே உகந்து
திகழா நின்ற
திருவே இறைவே என்
உகந்தைப் பெருமாளே.

நீதியே எனக்கருள்வாய் சோதியே
உகந்த மலை
யமர்ந்த கருணையின் ஒளியே ஜோதியே
ஆதியே
அம்மையுமாய் பாதியே மதியணியா
நின்ற ஜோதிப் பிளம்பனே
அப்பனுமாய் விளங்கி நின்ற ஈசனேயருளி
நின்ற இளைய பெருமாளே
விதியே மதியாகி அதுவே வினையாகி
அதுவே துணையாகி
அதிலே உழலாதிருக்க அருள்வாயே
கதியே நீஎன்று
தஞ்சமே அடைந்தேனே உகந்தனே
நின் திருப்பாதார விந்தமே காத்தருள்வாயே எனை
உகந்தப் பதிமேவும் கந்தப் பெருமாளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளி வளம் கொண்ட
நாட்டில்
உந்தன் துணை கொள்ளும்
நோக்கில்
நின் பாதார விந்தம் சரண
டைந்தேன்
திரு முருகா புள்ளிமான்
துள்ளிவர
பச்சை மயில் ஏறிவந்தே
வனமாது குறமாது
மகிழவே நீயருள வேண்டும்
ஐயா எந்தனுக்கே
உகந்தை வள நாட்டின்
தலைவே
கருணை மகிபா கந்த கிரி வேலே
உகந்தைப் பதிநின்ற பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணாஞ்சலி நிலை

சீலமனைத்தும் சிவபுரிக்கே காலமனைத்தும்
கந்தனுக்கே
கோலமெனக்கும் வேண்டுவதோ ஞாலம்மனைத்தும்
உந்தனுக்கே
ஆலமனைத்தும் வேண்டுவதோ எந்தனுக்கு
வேழமுகத்தின் பின்திருவே
ஏழையெனை காத்தருள்வாய் கோழையனைத்தும்
போக்கிடுவாய்
வாழ ஆளவந்த குருவே தேவுமேவும் இறைவே
ஓலம் ஓலம்
உகந்தப் பதிஆள வந்த பதியே துதியே
இறையே ஓலம் ஓலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்தே இசைந்தேவரும் இனிமையிலே
இனிந்தே
கனிந்தேவரும் கரைகண்டேன் ஆதிமுனிந்தே
முதல்வே
நின்திருப்பாதாரவிந்தமே உணர்ந்தேன் பணிந்தேன்
அணிந்தேன்
நின்திருநாமமே திருவே உருவே வரைந்தேன் தரித்தேன்
என் உயிரினிலே
என்மனதினிலே என் நினைவினிலே திருமுருகா கந்தா உகந்தா
கருணைக் கதிபே
அருளின் தலைவே அனாதிப்பொருளின் உணர்வே உணர்த்தும்
குருவே
என் இறையே என் அகத்தின் இகபரசுகத்தின் துணையே
என்நித்திய ஆனந்த
சத்திய உலகின் சத்திய ஒளியே நித்திய ஆனந்த ஒளியே
முக்தியின் வழியே துணையே
அன்பின் ஒளியே பக்தியின் வழியே துணையே திருவருளின் ஒளியே
குருவருளின் துணையே
எனை ஆளவரும் எனைமீட்கவரும் கருணைவடிவே கந்தப்பதிமேவும்
அருளின் ஒளியே
உகந்தப்பதிமேவும் குமரவடிவே கலியுகப்பதியே துதியே
ஓலம் ஓலம்
அழகுப்பதியின் உகந்தகிரியின் குருவே நிறைவே சோதிவடிவே
இறையே ஓலம் ஓலம்.

சொன்னால் சுகம்வரும் சொல்லாதிருந்தால்
துயர் வரும் மங்காத
வேதனை தழைத்திடும் நரகமே உருவெடுத்திடும்
நம்பாத மனதிற்கு
நாளும் சோதனை நாளும் வேதனை கந்தா உகந்தா
உன் புகழ் உன்நாமம்
நினைக்க இனித்திடும் சொன்னால் சுகம் வரும்
மங்காத இனிய இன்பம்
தழைத்திடும் சொர்க்கமே தோன்றிடும் நம்பிய
உனை நம்பிய மனதிற்கு
உயிருக்கு நாளும் மங்களம் நாளும் ஆனந்தம்
இன்பமே உருவெடுத்திடும்
உலகேழுமாளும் உமையாள் குமரா உகந்தாபதியே
குமரகுருவே கந்தப்பதிமேவும்
இறையே ஓலம் ஓலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலகால விசமும் அமுதமாகலாம்
காலகாலன் உறவும் இல்லாதொழிக்கலாம்
மூலமூடரும் ஆதிவேடரும் எக்கணமும் ஞானியாகலாம்
நோய் பிணி வந்தணுகாத சுகவாழ்வும் பெறலாம்
மரணமே வந்தணுகாமல் சிரஞ்சீவியாகலாம்
இப்பிறவி எப்பிறவியும் இல்லாதொழிக்கலாம்
தேவுக்கள் மூவுக்கள் தொடர்பும் பெறலாம்
உற்றோரும் பெற்றோரும் உலகோரும்
இன்றியே வித்தாரம் புகழாரமின்றியே செத்தோரைப்
போலடங்கி மனமொன்றி மலமின்றியே
கணமொன்றும் குணமொன்றும் அவனிதனிலின்றியே
கரைசேர வழிகாண இறையென்றிருக்கவே
முருகனவன் குமரனவன் ஞான குருவாகி நிற்கவே
கருணையது அருளமுதம் உகந்தையதில் உண்ணவே
திருமுருகன் துணைவந்து உறவொன்று தொடரவே
எக்காலும் முக்காலும் அத்தனையும் பெறலாம்
சித்தணைய வித்தணைய முத்தணைய முனிவரும்
போற்றவே தேவருமே ஏற்றவே சிவனாரின்
உமையாளின் திருக்குமரன் இளையோனின்
கருணையொன்று கிருபையொன்று கிடைக்கவே
எத்துணையும் வருமே அத்தனையும் பெறுமே
அரகரா ஆனந்த முருகனுக்கு அரகரா ஒப்பிலா வேலனுக்கு
நிகரிலா துணைவந்து சேருமே
நிகரில்லா வாழ்வொன்று மலருமே சித்தமதில்
குடிகொண்ட உகந்தையதில் நிறை
கொண்ட பெருமான் அருள் கண்ட
பேருக்கு என்றுமே மங்களம் என்றுமே சுபமங்களமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சலி வெளியீடு - 01

## பதிப்புத் தரவுகள்

தலைப்பு: உகந்தைக் கந்தன் அறவழி அமுதம் (அருள்நிலைபத்து)

வகை: பக்தி மரபு இலக்கியம்

ஆசிரியர்: சி.பி.கதிரவேல்

மொழி: தமிழ்

வெளியீடு: மஞ்சலி வெளியீடு,
"மஞ்சலி வரம்"
பாணமை - வடக்கு,
பாணமை - பொத்துவில்

அச்சுப் பதிப்பு: செலக்ஷன் ஓப்செற் அச்சகம்,
அக்கரைப்பற்று.

கதிர் அச்சுக்கோர்ப்பு: மா.லோகநாகன்,
அக்கரைப்பற்று.

வெளியிட்ட நாள்: 1998.07.19

பக்கங்கள்: 122

விலை: ரூபா 110/-

10766



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் அறிமுகம்



இவரின் முழுப்பெயர் குமாரவேல் பெரியதம்பி கதிரவேல் என்பது. அம்பாறை மாவட்டத்தின் தென்கிழக்கு எல்லையிலுள்ள பழமையான கிராமமான பாணகையூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரின் தொழில் அரசாங்க இலிகதர். தற்காலம் கல்முனை - பாண்டிருப்பில் வசிப்பவர். இறைபக்தி நிறைந்த உழவர் பரம்பரையைச் சேர்ந்தவர். தன் இளமை முதற் கொண்டே தமிழ் - சிங்கள மொழிகளிரண்டையும் சரளமாகப் பேசி அனைவருடனும் அன்புடனும் பணிவுடனும் இனிமையாகப் பழகுபவர். உகந்தைமலை முருகப்பெருமான் மீது தீராத பக்தி வேட்கை யுடையவர். அறவழியை மிகவும் நேசிப்பவர். இந்நூலாசிரியர் இறைவனருளால் தற்செயலாகவே பக்தி இலக்கியத்துறைக்கும் எழுத்துத்துறைக்கும் தானாகவே எதிர்பாராத விதமாக ஈர்க்கப்பட்ட ஒருவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org